


# பல்கலைச் செல்வர்



## கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்

## பாராட்டு விழா மலர்





மலர்த்தொகுப்பு

கலாநிதி வி.கந்தவனம்

இலக்கியச் செம்மல் இந்துமகேஷ்

ஆன்மீகத் தென்றல் த.புவனேந்திரன்





உள்ளத்தை அழகுபடுத்துவது கலை!

10.05,2003

Dr.M.K.S.Sivakumaran's

**Felicitation Issue**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைச் செல்வர்



ஓவியக் கலைவேள்

பல்கலைச் செல்வர்

வியன்கலை வித்தகர்

கலை ஞான மணி

**கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்** B.F.A.

அவர்களின்

# பாராட்டு விழா மலர்

**மலர்த்தொகுப்பு**

கலாநிதி கவிஞர் வி.கந்தவனம்
இலக்கியச் செம்மல் இந்துமகேஷ்
ஆன்மீகத் தென்றல் த.புவனேந்திரன்

வடிவமைப்பு சி.சஞ்ஜீவன்

வெளியீடு
வெற்றிமணி வாசகர் வட்டம் யேர்மனி

*1950*
Postfach 2765
58477 Lüdenscheid
Germany
10.05.03

# வண்ணமலர்த் தோட்டத்து வாசலில் நின்று....

எண்ணங்களை வண்ணங்களாக்கி
இதயங்களில் உலாவரும் ஒரு இனியகலைஞனுக்கு
உலகப் பல்கலைக்கழகம் கலாநிதி மகுடமிட்டு
உயர் தந்த இந்த வேளையில்
மகிழ்வு கொள்ளும் மனங்களோடு கலந்துறவாட
நாங்கள் அமைத்துள்ள சிறியதொரு மலர்த்தோட்டம் இது.

தோட்டம் சிறியது அதனால்
இதில் பூத்திருக்கும் மலர்களெல்லாம்
கலாநிதி மு. க. சு. சிவகுமாரனுக்குப்
புகழ்மாலை சூட்டுதற்குப் போதுமானதல்ல.
எனினும் இந்த மலர்தோட்டத்துக்குள்
நீங்கள் வலம்வரும்போது
உங்கள் வாழ்த்து மலர்களும் இணைந்து
அவரது திறமைக்கு நாம்சூட்டும் மாலைக்கு
வளம்சேர்க்கும் என்று எண்ணுகிறோம்.

இந்த மலர்த்தோட்டத்துள் நீங்கள் உலாவரும்போது
ஒரு அற்புதக்கலைஞனின் சந்திப்பு நிகழ்வது மட்டுமல்லாது
அவரது திறமைகளும் தென்றலோடு கலந்து வந்து
உங்களைச் சிலிர்க்க வைக்கும்.
இது இந்த மலர்த் தோட்டத்தின் வாயில் என்பதால்
இங்கே நின்று வழிமறித்து
அதிகம் பேசுவது அழகல்ல.
உள்ளே வாருங்கள் உலாவந்து பாருங்கள் என்று
இருகரம்தந்து உங்களை வரவேற்று,
தெள்ளுதமிழ்ப் பன்னீர்தெளித்து,
வண்ணச்சந்தனத் திலகமிட்டு
உங்களை உள்ளே அழைத்துச் செல்கிறோம்.

இந்த மலர்த்தோட்டத்தை வண்ணமுற அமைப்பதற்கு
கரம்கொடுத்த நல்லனவற்றின் நண்பன்,
சமூகஜோதி திரு. த. புவனேந்திரன் அவர்களும்,
தெள்ளுதமிழ் வித்தகராம் எங்கள் சீரிய கவிஞர், மதுரகவி,
கலாநிதி. திரு. வி. கந்தவனம் அவர்களும்
என்னோடிணைந்து நின்று உங்களை
வரவேற்கிறார்கள்
வருக !
இந்த வண்ணமலர்தோட்டத்துக்குள் உலாவந்து எங்கள்
வண்ணக்கலைகளின் கலாநிதியோடு மகிழ்வோம்!

அன்புடன் உங்கள்

**இந்துமகேஷ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீகனகதுர்க்கா அம்பாள் துணை

## வாழ்த்துரை

**-துர்க்காபூஜா துரந்தரர்- -கருணாகர பூஷணம்-**
**சிவசாமிக்குருக்கள் ஜெயந்திநாதசர்மா**

(சுவெற்றா அருள்மிகு ஸ்ரீகனகதுர்க்கா அம்பாள் ஆலய, கஸ்ரொப் ஸ்ரீஜெயவீர ஆஞ்சநேயர் ஆலயக்குருவும்)

கலாநிதி உயர்திரு. மு. க. சு. சிவகுமாரன் அவர்கட்கு உலக பல்கலைக்கழகம் உயர்விருதான கலாநிதி பட்டம் கொடுத்து கௌரவித்ததை அறிந்து மிக மகிழ்ச்சி அடைகிறேன். இவரும் இவருடைய தந்தையாரும் பல ஆண்டுகளாக -வெற்றிமணி- என்னும் பத்திரிகையை நடாத்தி இலங்கையிலும் ஜெர்மனியிலும் தமிழ் மொழிக்கும் சைவசமயத்திற்கும் பெரும் தொண்டாற்றி வருவது மிகவும் பாராட்டப்பட வேண்டிய அவசியமாகும்.

அதுமட்டமல்ல ஓவியத்துறையிலும் பலபுதிய முறைகளைக் கொண்டு அதிநவீன ஓவியங்களை வரைந்து பலருடைய பாராட்டுகளைப் பெற்றிருக்கிறார். இவருடைய சேவைகளை உணர்ந்து உலகின் பலபாகங்களிலும் வாழ்ந்து வரும் தமிழர்கள் எல்லோரும் சேர்ந்து பாராட்டுவிழா ஒன்றை நடாத்த முன்வந்தது சாலப் பொருத்தமாகும். இந்த நேரத்தில் எனது குடும்பமும் இவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இவர் இன்னும் பல்லாண்டு காலங்கள் தமிழ் மொழிக்கும் சைவசமயத்திற்கும் தொண்டாற்ற எல்லாம்வல்ல உலகமாதாவாகிய ஸ்ரீகனகதுர்க்கா அம்பாளினதும் ஸ்ரீஜெயவீர ஆஞ்சநேயர் பாதங்களை வணங்கி வாழ்த்துகிறேன்.

இவ்வண்ணம்
**சிவ. ஜெயந்திநாதசர்மா**

TEl: 0231 353292 கோவில் Tel: 02304 16721

சிவாச்சாரியரத்தினம்
**சிவஸ்ரீ. சோம. ஸ்ரீகரகுருக்கள்**
வூப்பெற்றால் நவதுர்க்காதேவஸ்தானகுரு
டோட்மூண்ட் தொலைபேசி, தொலைநகல் 0231- 829136

## வெற்றிக்கோர் வெற்றிமணி ஆசிரியர் மு. க. சு. சிவகுமாரன்.

தமிழ் ஈழமணித் திருநாட்டின் புகழ்மிக்க குரும்பசிட்டி என்னும் ஊர் கற்றோர்கள் நிறைந்தவொரு ஊராகும். அவ்வூரை பிறப்பிடமாகக் கொண்டவர் பல்கலைச் செல்வர் வெற்றிமணி ஆசிரியர் திரு.மு. க. சு. சிவகுமாரன் அவர்கள். இவர் புதுமை ஓவியங்கள் வரைவது மட்டுமன்றி கதை, கவிதை, பேச்சு, சமூகசேவை பத்திரிகைத்துறை என பலதுறைகளிலும் சிறந்து விளங்குகின்றார். இவரது ஓவியங்கள் நம்மவர்களை மட்டுமன்றி வெளிநாட்டவர்களையும் தன்பக்கம் ஈர்த்துள்ளது. இவர் தான் பல்கலையிலும் சிறந்து விளங்குவதோடு மட்டுமன்றி சிறப்புடையவர்களை தகுந்த சமயத்தில் கௌரவித்தும் வருகின்றார்.இவரது சேவையை சர்வதேச இந்துமத குருபீடமும் அண்மையில் கௌரவித்தது. தொடர்ந்து உலக பல்கலைக்கழகமும் இவருக்கு கலாநிதிப் பட்டம் கொடுத்து கௌரவித்துள்ளது. இவரைப் பாராட்டுவது கலையை வளர்ப்பது போலாகும். இவரது சேவை மென்மேலும் வளர அம்பிகையைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

வாழ்க பல்லாண்டு வளர்க கலைத்தொண்டு
அன்புடன்
**சோம. ஸ்ரீகரகுருக்கள்**

**ஹிந்து சங்கரர் ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலயம் (ஐரோப்பா)**
HINDU SHANKARAR SRI KAMADCHI AMPAL TEMPEL e. v
Postfach 1622- 59006 Hamm
Tel: 02388 - 302223 Fax: 02388 - 302224

## வெற்றிமணி ஆசிரியர் அவர்கட்கு ஆசீர்வாதங்கள் பல

20.03.2003

ஆதல் ஆதல் மானிடர் ஆதல் அரிது, கூன் குருடு செவிடு பேடின்றி பிறத்தல் அரிது, கல்வியும் ஞானமும் கிடைத்தல் அரிது. அப்படிக்கிடைத்துவிட்டாலும் அதிலும் தானமும் தவமும் செய்தல் அரிது என்பார்கள் பெரியவர்கள். எல்லாம் ஒருங்கே அமைந்தவர்தான் பேராசிரியர் திரு. வெற்றிமணி அவர்கள். எவனொருவன் தன் லட்சிய பாதையில் இருந்து சிறிதும் தவறாமல் கண்ணும் கருத்துமாக நிற்கின்றானோ அவன் அந்த லட்சிய பாதையை நிட்சயமாக அடைவான் என்பது வேத வாக்கு அப்படி நின்று பாடசாலைப்படிப்புமுதலாக பல்கலைப் படிப்புமுதல் பர்யந்தம் சகலவிசயங்களையும் கற்று தேர்ந்து அதன் வழிநின்று மாபெரும் மேதையாக டாக்டர், கலாநிதி, ஓவியக்கலைஞர் என்னும்பல பட்டங்களைத் தன்னுள் சேர்த்து இந்த மேடையில் நிற்கின்றார் என்றால் இவரின் தாய்தந்தையர் என்ன புண்ணியம் செய்தனரோ இப்படியுள்ள இவருக்கு எல்லாம் வல்ல ஜகத்தாரிணி ஜகத்காரணி ஜகன்மோகினியாகவுள்ள அம்பாளின் அருள் பரிபூரணமாகக் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திப்பதோடு ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத்பாத சுவாமிகளின் ஆசியையும் எமது பரிபூரண ஆசியையும் வழங்குகின்றோம். வாழ்க கலை! வளர்க!! இவரின் தொண்டு.

சுபம்
ஹம் ஸ்ரீ காமாச்சி அம்பாள் ஆலய ஆதீனகர்த்தா
**ஸ்ரீவித்யா உபாசகர் சிவஸ்ரீ பாஸ்கரகுருக்கள்**

## மாமதுரைக் கவிஞர் பேரவை - தமிழ் நாடு

அன்புடையீர் வணக்கம்

வெற்றிமணி ஆசிரியர் தமிழ்த்திரு மு. க. சு. சிவகுமாரன் அவர்களுக்கு கலாநிதி விருது கிடைத்த செய்தியறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். சங்கம் அமைத்த தமிழ் வளர்த்த மதுரை மண்ணில் இருந்து மாமதுரைக் கவிஞர் பேரவையின் சார்பில் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமை கொள்கிறேன். புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு மகிழ்ச்சி தரும் ஒரு இதழ் என்றால் அது -வெற்றிமணி- தான் என்பதில் அய்யம் இல்லை. பல்சுவை இதழாக இலக்கியம், கவிதை, திரைச்செய்தி, புலம் பெயர்ந்த தமிழர்களின் சாதனை இப்படி எண்ணற்ற செய்திகளை ஓவியர் கண்ணா அவர்களின் அற்புதமான புதுமை ஓவியத்துடன் வெளிவருவது உலகத் தமிழர்களுக்கு பெருமை தரக்கூடிய செய்தியாகும்.

உன் நண்பன் யார் என்று சொல் நீ யார் என்று நான் சொல்கிறேன் என்பார்கள் அதுபோல திரு. தம்பி புவனேந்திரன் நண்பராக இருப்பதால் திரு. சிவகுமாரன் அவர்களும் சிறந்த மனிதர் என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருக்காது. தமிழ் நாட்டுத் தமிழர் எல்லாம் தமிழ்வழியால் பயிலுவதை அவமானமாகக் கருதிடும் இந்தக்காலத்தில் புலம்பெயர்ந்த தமிழர்கள்தான் மறக்காமல் தமிழ் படித்தும் நல்ல தமிழ் பேசியும் வருகிறார்கள். தமிழ் அழியாமல் காப்பதில் பெரும் பங்கு வகிப்பவர்கள் இலங்கைத் தமிழர்கள் தான். இத்தகைய தமிழ்த் தொண்டு தமிழர் தொண்டு செய்துவரும் தமிழ்த் திரு மு. க. சு. சிவகுமாரன் அவர்களுக்கு கலாநிதி விருது வளங்குவதால் கலாநிதி விருது கௌரவிக்கப்பட்டது என்றுதான் சொல்ல வேண்டும். எல்லா வளங்களும் நலங்களும் பெற்று நீடுழிவாழ அன்போடு வாழ்த்துகின்றோம்.

கவிஞர். இரா. இரவி(மதுரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கின்றேன்

**திருமதி. செ. சுப்பிரமணியம்**
(இளைப்பாறிய ஆசிரியை வெற்றிமணி ஸ்தாபகரின் துணைவியார்)



**இளமைக்கு மட்டுமல்ல முதுமைக்கும் அன்னையும் பிதாவுமே வழிகாட்டி**

தானுண்டு தன் குடும்பமுண்டு என்ற சிறு வட்டத்துக்குள் மாத்திரம் நின்றுவிடாமல் தமிழ்த் தாயையும் தான் கற்ற கலையையும் மதித்து அதை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் தன் பொன்னான நேரத்தை அதற்காகச் செலவழித்தார்.
அதனால் பல இடங்களிலும் வெற்றிமணி வரவேற்கப்பட்டு நற்பயனும் அடைந்துள்ளது. இதுமாத்திரமன்றி சிவகுமாரனின் தமிழ் ஆர்வத்தையும் திறமையையும் கண்டறிந்த அறிஞர்கள் பெரியோர்கள் இவருக்கு -கலாநிதிப் பட்டமளித்து கௌரவித்துள்ளனர். இச் செய்தியை அறிந்த தாயாராகிய நான் ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்- என்பதற்கமைய பெருமகிழ்வடைவதுடன் சிவகுமாரனை மனமார வாழ்த்திப் பெருமையடைகிறேன்.
திரு. மு. க. சு. சிவகுமாரன் அவர்களின் கட்டுரைகள், கவிதைகள், சித்திரங்கள் முதலான பல ஆக்கங்களை வெற்றிமணிப் பத்திரிகையில் வாசித்தேன். அதில் அவரது சிந்தனைத் திறனையும் மதிநுட்பத்தையும் தமிழ்ப்பற்றையும் அவதானித்து பெருமிதமடைவதுடன் அளவற்ற மகிழ்ச்சி யடைகிறேன்.
இவைமட்டுமன்றி அவர் வெளிநாட்டில் வாழ்ந்தாலும் தான் பிறந்த மண்ணையும் அங்குள்ள அறிஞர்கள் பெரியார்களையும் மறந்துவிடாது பெருமைப் படுத்துவதையும் மதிப்பதையும் அவரது வெற்றிமணியில்அவதானிக்க முடிந்தது. இவரது இத்தகைய திறமைகளுக்கெல்லாம் வித்திட்டவர் இவரது தந்தையாரே.
சிவகுமாரனின் செல்லப்பெயர் கண்ணன். இவர் சிறுவயதில் கண்ணன் என்ற பெயருக்கமைய குறும்புத்தனமுடையவராகவும் தனது கதையினால் எல்லோரையும் சிரிக்கவைத்து எல்லாரது உள்ளங்களையும் கவரக்கூடிய கதைத்திறமை உள்ளவராகவும் விளங்கினார். மற்றப் பிள்ளைகளை விட இவர் கற்பனைத் திறனும் சிந்தனைத் திறனுமுள்ளவராக காணப்பட்டார்.
இதனால் இவரது தந்தையார் இவரது மனப்போக்கிற்கும் கற்பனைத் திறத்திற்கும் அமைவான நுண்கலைத்துறையில் படிக்கவைத்தார்.
அவர் திறமையுடன் கற்று பட்டமும் பெற்றார்.

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் எனுஞ் சொல்-

என்னும் குறளுக்கமைய சிவகுமாரனின் தந்தையான மு.க. சுப்பிரமணியம் அவர்களுக்கு பெருமதிப்பையும் மகிழ்ச்சியையும் தேடிக் கொடுத்தார்.
தந்தையின் மறைவிற்குப் பின் தந்தையால் நடாத்தப்பட்ட வெற்றிமணி என்னும் சிறுவர் பத்திரிகையை நடாத்தி தந்தைக்குப் பெரும் கௌரவமளிப்பதுடன் தனது அறிவு ஆற்றலையும் அதன் மூலம் வளர்த்துக் கொண்டார் என்பதை எண்ணி பெருமை யடைகிறேன்

-அரிது அரிது மானிட ராதலரிது- அரிதாகக் கிடைத்த இம்மானிட வாழ்வை வீணாக்காமல் தன்னை உணர்ந்து அதாவது, இறைவனின் சக்திதான் ஆன்மா என்ற உணர்வுடன் எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல் நேசித்து அன்பும் அறனும் பொருந்திய நல் வாழ்வு வாழ வேண்டுமென்று இறைவனை வேண்டி எனது வாழ்த்துக்களைப் பலமுறை தெரிவிக்கிறேன்.



## கலாநிதிக்குக் கலாநிதிப் பட்டம்!

ஓவியக் கூடத்தில்
ஒத்திருக்க மேலுமோர் ஓவியம் -

சித்திரத் தேரில்
சிறந்திருக்க இன்னுமொரு தெய்வச் சிலை -

மணிமகுடத்துக்கு மதிப்பளிக்க
மற்றுமொரு மரகதக்கல் -

புகழ்மலைக்குப் பொலிவு செய்யப்
புதிதாக ஒரு பூமாலை -

கலாநிதிக்குக் கிடைத்திருக்கிறது
கலாநிதிப் பட்டம்!

கலையுலகம் மெச்சி மகிழ்ந்திருக்கும்!
கலைமகளின் உச்சி குளிர்ந்திருக்கும்!

வாழ்க உலகப் பல்கலைக் கழகம்!
வளர்க குரும்பசிட்டியின் தவக்குமாரன்
ஓவியக்கலைவேள் சிவகுமாரன்!

**கலாநிதி கவிஞர் வி. கந்தவனம்**



## 1981இல் கலாநிதியின் கலையும் விடுதலையும்

காலநிதி மு.க.சு.சிவகுமாரன் 1981 ஆடி மாதம் முதலாம் திகதி யேர்மனிக்குள் காலடி எடுத்து வைத்தார்.சரியாக மூன்று திங்களில் தான் இருந்த இல்லத்தை அகதிகள் முகாம் என்று அழைப்பதை நிறுத்தி தமிழீழம்,சுதந்திரம்,விடுதலை வேட்கைமிக்கோர் வாழும் இல்லம் என மாற்றினார்.
அதற்கமைய அவர் இல்லத்தின் வாயிலில் விடுதலை வேட்கைச் சிற்பத்தை அமைத்து, பத்திரிகையாளர்களையும் அழைத்து, அச்சிலையைத்திறந்து வைத்தார். இதன் மூலம் அச்சிலையும் ஈழமக்களின் இலட்சிய வேட்கையும் 9.9.1981 Franken und Bayern என்னும் பத்தரிகையில் வெளிவந்தது. அதனால் ஈழத்தமிழர்கள் பொருளாதார அகதிகள் என்ற குற்றச்சாட்டு யேர்மன் மக்கள் மத்தியில் (குறிப்பாக அவர் வாழ்ந்த மக்கள் மத்தியில்) கிழித்தெறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல ஊர்வலங்களை ஈழமக்கள் பாதிக்கப் பட்டவேளையில் எல்லாம் தன்னுடன் இருந்த இளைஞர்களின் பேராதரவுடன் நடாத்தி முடித்தார். கலைஞர்கள் என்றும் அகதியாவதில்லை என்பதை வாழ்வில் செயலில் காட்டியவர்,காட்டுபவர் கலாநிதி.மு.க.சு.சிவகுமாரன் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மு.க.சு.சிவகுமாரன் பெற்ற விருதுகள்

Degree of Bachelor of Fine Arts (B.F.A.)
University of kelaniya-Srilank -March 1989

| | |
|---|---|
| **தமிழ்பணி விருது** | தமிழர்தகவல் -கனடா 1999 |
| **ஓவியக் கலைவேள்** | எழுத்தாளர் இணையம் -கனடா 1999 |
| **பல்கலைச் செல்வர்** | வெற்றிமணி பொன் விழாவில் -உதயன் கனடா 2000 |
| **வியன்கலை வித்தகர்** | விநாயக விருது - யேர்மனி 2002 |
| **கலை ஞானமணி** | சர்வதேச இந்துமத குருபீடம் கொழும்பு (யேர்மனி-2002) |
| **கலாநிதி** | (கவின் கலைக்கான விருது) உலகப் பல்கலைக்கழகம் - அமெரிக்கா-2002 |

# நூல்களும் வெளியீடுகளும்






யேர்மனியில் முதலாவது சிற்பக் கண்காட்சி லூட்விக்ஸ்ரட் 1981. நகர உதவி மேயருடன் சிவகுமாரன் வடித்த நகரதேவதைச் சிற்பம்

## மு.க.சு.சிவகுமாரன் எழுதிய நூல்கள்

1. **ஒரே ஒரு தெய்வம்** வெளியீடு: - குரும்பசிட்டி சன்மார்க்க இளைஞர் சங்கம் -29.04.1973
2. **புதிய வடிவங்கள்** சித்திரத் திரட்டு - யேர்மனி 1990
3. **வண்ணப் பயிற்சி** ( மண்ணை நினைவூட்டும் ஒரு முயற்சி) வெளியீடு:உலகத் தமிழர் இயக்கம் - யேர்மனி 1996
4. **இடைவெளி** (சிறு கதைத்தொகுதி) வெளியீடு: வெற்றிமணி-2000-
5. **யேர்மனியில் கலாநிதி கந்தவனம்** (தொகுப்பு) வெளியீடு: வெற்றிமணி 2002
6. **தமிழே காதல்** வெளியீடு: -2003
7. **அது என்பது இதுவா** வெளியீடு: குரும்பசிட்டி சன்மாக்கசபை 2003
8. **கோடுகளும் கோலங்களும்** 2003(அச்சில்)

### வெளியீடுகள்

**வெற்றிமணி** பத்திரிகை வெளியீடு: வெற்றிமணி நிறுவனம் யேர்மனி
**ஓவியா** வெற்றிமணியின் சிறப்பு மலர்
**எழுத்தாளன்** -கலாநிதி கவிஞர்-வி.கந்தவனம் வெளியீடு: வெற்றிமணி யேர்மனி-1995
**மாறன் மணிக்கதைகள்** (சிறுவர் சிறுகதைகள்)திரு.பொ.கனகசபாபதி வெளியீடு: வெற்றிமணி 2000
**பால்குடி மறந்த கையோடு** (மெல்லிசைப் பேழை) செல்வன் சஞ்ஜீவன் சிவகுமாரன் - வெளியீடு: வெற்றிமணி 2000

### நாடகங்கள்

தாலாட்டுப் பாடமாட்டேன் -தமிழீழ நாடக வட்டம் -யேர்மனி -1995-கனடா01
தேன் வந்து பாயுது காதினிலே - வெற்றிமணி பொன்விழா-13.05.2000
பொட்டு - (வானொலி நாடகம்) கீதவாணி -கனடா 2000
படலை - (வானொலி நாடகம்) கீதவாணி -கனடா 2001



சிறுவர்களுக்கு சித்திரம் பயிற்றவும், அவர்களிடம் பயிலவும், முடியும் என்கிறார் சிவகுமாரன் -1985



கண்காட்சி - டோட்முண்ட் -யேர்மனி 1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

# சிவகுமாரனுக்கு சிவத்தமிழ்ச் செல்வியின் ஆசியும், வாழ்த்தும்

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை இலங்கை



-உலக சேவையே உத்தமன் பூசையாம்- என்ற வாக்குக் கேற்ப எமது நாட்டு மக்கள் பலர் கடல்கடந்து சென்றும் எமது மண்ணை மறவாது ஆற்றும் சேவைகள் அளப்பரியது. இந்த வகையில் கலைப்பணியும், தமிழ்ப்பணியும் ஆற்றி வருபவர் திரு. மு. க. சு. சிவகுமாரன் அவர்கள். அவர்தம் பணியின் உயர்வாக இன்று உலகப் பல்கலைக் கழகம் 'கலாநிதி' ப் பட்டமளித்துக் கௌர வித்துள்ளது. இதனை அறிந்து தமிழ் மக்களாகிய நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

திருவாளர். சு. சிவகுமாரன் அவர்கள் எமது ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது தந்தையின் வழிகாட்டலிலும், தன் பாடசாலையின் வழிகாட்டலிலும், குருவின் வழிகாட்டலிலும் நின்று ஒழுகி இன்று ஒரு உயர்ந்த நிலையை அடைந்திருக்கின்றார். கவிதை, சிறுகதை, ஓவியம், சிற்பம், பத்திரிகை என்ற சகல கலைத்துறைகளிலும் தனது காலடியைப் பதித்துக் கொண்டவர் இவர். இன்று உலகம் முழுவதும் கலை என்ற அழகியலில் மூழ்கிக் கிடக்கின்றது. நாட்டிலும், வீட்டிலும் நல்ல அமைதியான சூழ்நிலை அமைகின்ற போதுதான் கலை உருவாகமுடியும். கலை என்பது அழகின் செறிவு, கருத்தின் பதிவு, கவற்சியின் நிறைவு, மகிழ்ச்சியின் உறைவிடம், பண்பாட்டின் சிகரம், இவ்வண்ணம் எல்லாமாகி இருப்பது தான் கலை. இத்தகைய கலைவண்ணத்தில் மூழ்க உண்மைக் கலைஞனாலேயே முடியும். இத்தகைய கலை வண்ணத்தில் தன்னை ஈடுபடுத்தி தமிழ் மக்களின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டவர் தான் திருவாளர் சிவகுமாரன் அவர்கள்.

சிறிது காலத்திற்கு முன்பு எமது தேவஸ்தானத்துக்கு வருகை தந்து அம்பாளைத் தரிசித்து எம்மோடும் உரையாடிச் சென்ற அந்த மகிழ்ச்சியான நிகழ்வை இப்பொழுது நான் நினைவு கூர்ந்து பார்க்கின்றேன். தனது பேச்சு, மூச்சு இரண்டும் தமிழுக்கே என்றபடி இவராற்றும் பணிகளை யாவரும் விதந்துரைப்பர். எமது ஈழநாட்டில் முதன் முதலாக நுண்கலைத் துறையில் பட்டம் பெற்று வெளியேறி இன்று உலகப் பல்கலைக்கழகமே -கவின்கலைக்கோர் கலாநிதியாக- இவரை உயர்த்திக் கௌரவித்துள்ளமை உலகத் தமிழர்கள் அனைவருக்குமே பெருமை தருகின்ற விடையமாகும்.

-வெற்றிமணி- என்னும் தமிழ்ப் பத்திரிகையை ஜேர்மனி நாட்டில் நடாத்தி தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்றவர் இவர். நமது நாட்டுப் பெருமக்களை இப்பத்திரிகை மூலமாகக் கௌரவித்த பெருமையும் இவரைச் சாரும். இத்தகைய சிறந்த கலைஞனாக விளங்கும் திரு. மு. க. சு. சிவகுமாரன் அவர்கள் மேலும் மேலும் உயர்வடைந்து நிற்க எம்பெருமாட்டி துர்க்காதேவியைப் பிரார்த்தித்து எனது வாழ்த்தையும் தெரிவித்து விழாக்குழுவினருக்கும் சிறப்பாக சமூகஜோதி திரு. தம்பி புவனேந்திரன் அவர்களுக்கும் வாழ்த்துக் கூறி அமைகின்றேன்.

கலாநிதி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி

# முத்தான முதல்வர்

திரு எஸ்.திருச்செல்வம்
(பிரதம ஆசிரியர் தமிழர்தகவல் கனடா)

நண்பர் மு.க.சு.சிவகுமாரனுக்குப் பல 'முதல்' கள் உண்டு. இதனால் அவரை 'முதல்' களின் சொந்தக்காரர் எனலாம்.

தந்தையினால் ஆரம்பிக்கப்பட்ட வெற்றிமணிப் பத்திரிகையைத் தொலைந்துபோக விடாது, தொடர்ந்து வெளியிட்டு அதன் பொன்விழா இதழை புலம்பெயர் நாட்டில் வெளியிட்ட பெருமைக்குரிய 'முதல்' வர் இவர்.

ஓவியனாய், சிற்பக் கலைஞனாய் பட்டம் பெற்றதுடன் நின்றுவிடாது, அதன் மகத்துவத்தை மாற்றார் வியக்கும் வகையில் புகலிட மண்ணில் சாதனை புரிவதில் 'முதல்' வர் இவர்

கண் வெட்டும் கணத்துள் மின் வெட்டும் 'ரஸ'ங்களை 'விடாய்' க் கவிதைகளாய் அள்ளிப் பருகத் தரும் நவீன பிரமாக்களில் 'முதல்' வர் இவர்.

தமிழைக் காதலித்தவர்கள் பலர். ஆனால் 'தமிழே காதல்' ஆனவர் இவர். இதனால், தமிழால் காதல் செய்வதிலும் கூட 'முதல்' வர் இவர்.

இப்போது ,உலகப் பல்கலைக்கழகத்தின் கவின்கலைக் கலாநிதிப் பட்டம் பெற்ற 'முதல்' ஈழத் தமிழர் ஆகவும் கௌரவம் கிடைத்துள்ளது.

1999ம் ஆண்டில் 'தமிழர் தகவல்' தகுதி கண்டு விருது வழங்கிக் கௌரவிக்கப் பெற்ற திரு.மு.க.சு.சிவகுமாரன் அவர்களை,அமெரிக்க நாட்டிலுள்ள உலகப் பல்கலைக் கழகம் இனங்கண்டு கலாநிதிப் பட்டம் வழங்கித் தனக்குப் பெருமை சேர்த்துள்ளது. இதனையிட்டு 'தமிழர் தகவல்' வெளியீட்டகம் பெருமிதமடைகிறது.

எழுத்தாளர்,கவிஞர்,ஓவியர்,பத்திரிகையாளர்,வெளியீட்டாளர் எனப் பல தகுதிகளின் 'முதல்' வராக விளங்கும் திரு.சிவகுமாரன் அவர்கள் தமிழின் காதலர்: தமிழ்க்கலையின் காவலர்:தமிழ்மண்ணின் பற்றாளர்: தமிழீழ உணர்வாளர்.

நண்பர் சிவகுமாரன் அவர்களுக்கு கலாநிதிப் பட்டம் கிடைத்ததால் மகிழ்ந்த யேர்மன் உறவுகள் எடுக்கும் பாராட்டு விழா அவருக்கு ஊட்டச் சத்தாகி, மேலும் பல படிகளுக்கு அவர் பணிகளை உயர்த்திச் சென்று முத்தான முதல்வராக்குமென நம்பலாம்.




கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்

07.02.1999 (கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியக் கலைவேளுக்கு மீண்டும் ஓர் மகுடம்



கலை என்ற கடலுக்குள், கண்டெடுத்த முத்தொன்று, கன்னித்தமிழின் சொத்தாகிறது. வித்திட்ட வேந்தனின் வெற்றிமணியாய் ஒலிக்கிறது. மு. க. சுப்பிரமணியம் அவர்களின் இலக்கியப் பயணம் பொன்விழாக்கண்டு தொடர்கிறது.

தொடரும் மைந்தனின் சேவை கண்டு பட்டமும் பதவியும் தேடிவருகிறது. உண்மைக்கும் உழைப்பிற்கும் உலகப் பல்கலைக்கழகம் வழங்கிய உன்னதம்.

பல்கலைச் செல்வர் திரு. மு. க. சு. சிவகுமாரன் அவர்கட்கு கலாநிதிப்பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தியதையிட்டு வானதி வாணி நர்த்தனாலயமும், அதன் மணவ மணிகளும், அவர்களின் பெற்றோரும், நிறுவனர் என்ற முறையில் நானும் எனது குடும்பமும் மகிழ்வுறுவதோடு மனதார வாழ்துகின்றோம். எனது வானதி வாணி நர்த்தனாலயம் என்ற குடும்பத்தின் ஆரம்ப அங்கத்தவர் அவர்.

எம் நடனப்பள்ளியின் உயர்வில் நட்புடன் நல்ல அரிய பல ஆலோசனைகள் தந்து உயர்த்தியவர். எம் மாணவர்களின் அரங்கேற்றங்கள் பலவற்றில் தலமை தாங்கியதோடு, சிறப்புவிருந்தினராகவும் ஆசிகள் வழங்கி அம்மாணவர்களின் உயர்விற்கு வித்திட்டவர். அவர்களின் கலையின் பற்றுதல் அதனை வெளிப்படுத்தும் திறன் இன்று கலாநிதி மு. க. சு. சிவகுமாரன் என்று மிளிர வைத்திருக்கிறது. என் அன்புச் சகோதரனின் உயர்வு கண்டு என் மனம் ஆனந்தக்களிநடம் புரிகின்றது. நீண்ட ஆயுளும், நிறைவான செல்வமும், ஆண்டவன் அருளால் அவருக்குக் கிடைக்க எல்லாம் வல்ல இறைவனை வணங்கி வாழ்த்துக்கூறி விடைபெறாது அவரின் இந்த ஆனந்தத்தில் நாங்களும் துணையாய் இருக்கின்றோம்.

நன்றியுடன்
**வானதி வாணி நர்த்தனாலயம்** (யேர்மனி)

# மனமுவந்து வாழ்த்துவதில் மனம் நிறைந்து நிற்கிறேன்!

### சிந்தனைச் செல்வர்- எழிலன்

மாங்கனி உருசியானது என்றும் மல்லிகை மணம் வீசும் என்றும் தென்றல் இதமாயிருக்கும் என்றும் மயில் அழகாயிருக்கும் என்றும் மாலை கடற்கரை எழிலாக இருக்கும் என்றும் யாராவது யாரையாவது எழுதித் தரும்படி கேட்டுக்கொண்டால் இயற்கையான இவற்றின் அருமையை நாம் சொல்லித்தான் தெரியவர வேண்டும், என்ற தயக்கமும், சந்தேகமும் ஏற்படும் அல்லவா? அதுபோலத்தான் இருந்தது எனதினிய நண்பர் பல்கலை வேந்தன் உயர்திரு. மு. க. சு. சிவகுமாரன் அவர்களை பற்றி ஒரு கட்டுரை எழுதித்தர நான் கேட்கப்பட்டபோது, எனக்கு ஒருமனிதரில் இருக்கும் ஒரு திறமையைப் பார்த்ததும் தான் அவர் இவர் என்று அறிந்து கொள்வது இயல்பு. ஆனால் ஒருவரில் பல திறமைகள் முழுமைபெற்று இருக்கும் வியப்பைக் கேள்விப்பட்டால் மிக இலகுவாக அவர் மு. க. சு. சிவகுமாரன் என்று மட்டுமே சொல்லிக் கொள்ளலாமா? கொள்ளலாம் என்றே நான் சொல்லுவேன்.

எழுத்தாளராக, பத்திரிகை அசிரியராக, கவிஞராக, ஓவியராக, சிற்பியாக, சிந்தனையாளராக, பேச்சாளராக, பட்டதாரியாக என்று அந்த ஆறுமுகனான சிவகுமாரனாகவே பலமுகங்களுடன் அதாவது பலவிதமான திறமைகளினதும் பிம்பங்களுடன் திகழ்கின்ற அவரது தனித்துவத்தின் சிறப்பைத்தான் இக்கட்டுரையின் முதல்வரிகளில் குறிப்பிட்டிருக்கிறேன்.

அவரது வெற்றிமணி ஏட்டில் அவர் எழுதிவரும் கோடுகளும் கோலங்களும் ஓர் ஓவியனின் அறிமுகமாக மட்டுமல்ல ஒரு உயிரோட்டமுள்ள எழுத்தாளனின் அழுத்தத்துடனும் சிறந்த சிந்தனையாளனின் சமுதாயக் கண்ணோட்டத்துடனும் வடிக்கப்பட்டிருக்கும் இனிய தமிழின் நடையோட்டமாகவும் மிளிர்வதைக் கண்டு நான் சொக்கிப்போனதுண்டு. ஆங்காங்கே வடிவான கவிதைகள் இருக்கும் யாரடா இந்த அற்புதமான கற்பனையாளன் என்று வியப்பேன். பேசக் கிடைக்கும்போது விசாரிப்பேன். பாட்டும் நானே பாவமும் நானே என்று சொல்லாமல் சொல்லுவார். அதிர்ச்சி தரும் மகிழ்ச்சி அது.

மனிதரை அளக்கத்தக்க சரியான அளவுகோல் அவர்களின் நண்பர்களே என்பார்கள். எல்லாருடனும் நட்புறவுடன் இருக்கலாம். ஆனால் எல்லாரையும் நண்பர்களாக வைத்திருக்க இயலாது. இந்த இடத்தில் தான் ஓரினப் பறவைகளே ஒன்றாய்ச் சேரும் என்ற உண்மை தெரியவருகின்றது. இனிய என் நண்பரும் கண்ணா என எழுத்துலகில் அழைக்கப் படுபவருமான சிவகுமாரனவர்களின் தொடர்புகளை ஆய்ந்தால் அவர் சான்றோரைச் சார்ந்து நிற்கும் நற்பழக்கத்துடன் இருப்பது தெரியும். தரமான மனிதர்களின் தொடர்புகள் நெருங்குவது தரமான மனிதர்களுடன் மட்டுமே தான் என்பதை இவரது பண்பும் பணிவும் தலைக்கனமற்ற தன்மையும் எனக்கு நன்கு புலப்படுத்தியிருக்கின்றது.

வள்ளுவன் வழியில் தமது தந்தைக்கு அவர் வழியில் பெருமை தேடித்தந்த, தமிழினத்துக்கு அறிவிலும் கலையிலும் கற்பனை வளத்திலும் உரம்சேர்க்க விழையும் ஓர் உயர் மனிதராக இவரை நான் வெறுமனே காணவில்லை. பழகி உணர்ந்திருக்கிறேன். அதற்காக இவ்வேளையில் பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நேர்மையான கடமையுணர்வு இவரது இரத்தத்தில் ஊறிய பண்பாக வளர்ந்திருப்பது இவரது பெற்றோருக்கும் குடும்பத்தினர்க்கும் மட்டுமல்ல, நமக்கும்தான் பெரிய பெருமை என்றால் அது மிகையன்று. வெற்றிமணியில் எழுதுவதற்கு இவர் என்னை அழைத்தபோது, முதலில் இருந்த தயக்கம் இப்போது இல்லை எனக்கு. ஏனென்றால் பணம் பண்ணும் வெறும் நோக்கற்ற, மனம் வளர்க்கும் ஓர் உத்தமரின் ஏட்டில் எழுதுகிறேன் என்ற உணர்வு என்னில் ஓங்கி இருக்கின்றது.



சிந்தனைச் செல்வர்- எழிலன்

சத்தியம் தழைத்தோங்கும் உத்தம உள்ளங்களின்
அத்தனை பணிகளிலும் நிச்சயம் பலனிருக்கும்
எத்துணை இடர்வரினும் அயர்வுறா பெருந்திறனும்
நித்தியம் ஒளிஉமிழும் பகலனாய் புகழுயர்த்தும்
உத்தமர் எனதினிய ஓவியர், எழுத்தாளர்
சித்திர அழகினையே கவியில்தரும் பெருங் கவிஞர்
கல்வியின் பெரும் பலனைப் பகிர்ந்திடுநல் பெருமகனாம்
பல்கலை வேந்த னெங்கள் சிவகுமாரன் வாழியவே!

தமது கௌரவப் பட்டத்தினால் தமிழன்னைக்கும் தமிழினத்துக்கும் இவர் சேர்த்துள்ள பெருமைக்காக இவரை என் இதயம் நிறைந்த வாழ்த்துக்களால் பாராட்டுகிறேன்.

## எல்லா மதங்களையும் மதிக்கும் சிவகுமாரனின் இதமான தூரிகை!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வும் கலையும்










தேசத்தின் நேசக்கலை







## சுவர்ச்சித்திரப் போட்டி -1992

சாதனைக் கலை

முதலாம் இடம்!



யேர்மனியில் வேலையில்லாத் திண்டாட்டம் 1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


'தமிழர் தகவல்' விருது -கனடா 1999


பூவரசு விழா -2001 யேர்மனி

# வாழ்வும் கலையும்


மாறன் மணிக்கதைகள் வெளியீட்டு விழா- கனடா 2000


தாயகத்தில் அருட்திரு ஜெயசேகரம் அடிகளாருடன் ஒரு சந்திப்பு


சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அருள் நிழலில்


'தினக்குரல்' பிரதம ஆசிரியர் வழங்கிய கௌரவம் - கொழும்பு-06.10.2002


பரதநாட்டிய அரங்கேற்றங்களில்...


கண்ணாவின் கைவண்ணத்திற்கு சொல்வண்ணம் தந்த கலாநிதி அ.சண்முகதாஸ் அவர்களுடன் தாய்மண் முற்றத்தில் இன்று. 2002


சிவகுமாரனின் சித்திரத்தை இலக்கிய நந்தவனமாக்கிய கலாநிதி கவிஞர் வி கந்தவனம் அவர்களின் பாராட்டுவிழாவில்.. - சுவிஸ் 2002



சிறப்புரை-கனடா-1999

குரும்பசிட்டி சன்மார்கசபை எடுத்த பாராட்டு விழாவில் கலைப்பேரசு ஏ.ரீ.பொன்னுத்துரை அவர்கள் வழங்கிய கௌரவம் தாய் முற்றத்தில் 2002



தன்னைத் தமிழாய் படைத்த தாயுடன் - வாழ்வின் வெற்றி மணிக்கு உயிர் கொடுத்த தந்தைக்கு ஒளியேற்றி விழா எடுக்கும் மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகத்திற்கு பெருமை சேர்த்த கலைஞர்

**உலகத் தமிழர் இயக்கம் - பொறுப்பாளர். திரு. இரா. நாகலிங்கம். (யேர்மனி)**

அருள்மிகு ஆலயங்களையும் அறிவொளி பரப்பும் கல்வி, கலைக்கூடங்களையும் பல்துறைப் புத்தியீவிகளையும் தன்னகத்தே கொண்டு யாழ் வலிவடக்கமைந்த பேரூர்தான் குரும்பசிட்டி எனும் நல் ஊர் இவ்வூரில் பொன் பரமானந்த வித்தியாசாலை அதிபராகவும் வெற்றிமணிப் பத்திரிகையின் தாபகராகவும் -கிளாக்கர்- என பொதுமக்களால் அன்பாக அழைக்கப்பட்டவருமாகிய திரு. மு. க. சுப்பிரமணியம் அவர்களை நன்கு அறிவேன். தமாசாக சிரித்துப் பேசும் அன்புள்ளம் கொண்டவர். அனைவரையும் அரவணைத்து உதவும் சுபாவமுடையவர். அன்னாரின் மூத்த புதல்வரான கண்ணா என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் திரு. சு. சிவகுமாரன் தந்தைவழியில் தன்னடக்கத்துடன் அனைவருடனும் சிரித்துப் பேசும் பண்பாளர்.

சிறுபராயம்முதலே ஓவியத்துறையில் நாட்டங்கொண்ட இவர், அத்துறையிலேயே உயர்கல்வி பயின்று களனிப் பல்கலைக்கழகத்தில் கவின்கலைப்பட்டதாரியாக வெளியேறிய முதல் தமிழராவார் என்பது குறிப்பிடத்தக்கது. புலம்பெயர் மண்ணில் இவர் வினைத்திறனில் விளைந்த ஓவிய சிற்பக் கண்காட்சி ஒன்றை டொட்மூண்ட் நகரிலே கரிதாஸ் மண்டபத்திலே சிலநாள் நடாத்தியபோது பலநூற்றுக்கணக்கானோர் கண்டு களித்ததுடன், நானும் பார்த்து வியப்படைந்தேன். பல வெளிநாட்டவர்களும் அவற்றைப் பாராட்டினர். இன்று அவரது திறனை சர்வதேசமே பாராட்டும் அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதை அறியும் போது தமிழ் கூறும் நல்லுலகமே பெருமைப்படுகின்றது.

-துணை நலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்-

என்றார் பெருநாவலர். ஒருவர் துணைவரால் செல்வத்தை மட்டும் பெற்றுக்கொள்ளலாம் ஆனால் ஒருவர் தனது செய்தொழிலின் சிறப்பால் வேண்டிய எல்லாச் செல்வங்களையும் பெற்றுக்கொள்ளமுடியும் என்கின்றார். இதற்கமைய இன்று திரு. சு. சிவகுமாரன் அவர்கள் தன் ஓவியத் திறமையால் சாதனைபடைத்து, அத்துறையில் என்றும் புகழப்படும் ஒருவராக எல்லாச் செல்வங்களையும் வரித்து இனங்காட்டி நிற்பதை க்காணலாம்.




**ஓவியப் போட்டியில் பரிசுபெற்ற சிறுவனை வாழ்த்தும் கவின் கலைக் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்**

தனது நவீன ஓவியங்கள் மூலம் தாயகவிடுதலையையும், அங்குள்ள அவலங்களையும் புலப்படுத்தி புலம்பெயர்வாழ் மக்கள் மனங்களில் மாற்றங்களையும் தாயக உணர்வுகளையும் ஊட்டியவர் யேர்மனியில் இளையதலைமுறையினரிடையே தான் கற்ற வித்தையை பரப்பி போட்டிகள் பலவற்றை நடாத்தியதுடன் பல ஓவியப் போட்டிகளில் நடுவராகவும் பணியாற்றியவர்.

இன்று யேர்மனியில் அநேக மாணவர்கள் இவரது சேவையினால் திறமை மிக்க ஓவியங்களைப் படைக்கக்கூடியவர்களாக பயிற்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.




**வெற்றிமணி விழா 1996. உலகத்தமிழ் இயக்க கல்விப்பணிப் பொறுப்பாளர் திரு. இரா. நாகலிங்கம் அவர்களுக்கு வெற்றிமணி மு.க.சு.சிவகுமாரன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார்.**

விடுதலைப்புலிகளின் சர்வதேச வெளியீடான எரிமலைப் பத்திரிகையின் மூலம் நவீன ஓவிய மரபொன்றைப் பிரசவித்த பெருமை திரு. சு. சிவகுமாரனுக்கே உரியது. உலகத் தமிழர் இயக்கக் கல்விப்பணியினால் நடாத்தப்படும் தமிழாலய மாணவர்களுக்கு எமது பாரம்பரியப் பண்பாடு, பழக்கவழக்கச் செயற்பாடுகளை வெளிப்படுத்தும் நோக்கமாக பற்பல காட்சிகள் தொழில்கள், விழாக்கள், பாவனைப்பொருள்கள் போன்றவற்றை புலப்படுத்தும் வண்ணப்படப்புத்தகம் ஒன்றை ஆக்கி மாணவர் மத்தியில் புத்துணர்வை ஏற்படுத்தியுள்ளார்.இத்தகைய ஒப்பற்ற ஓவியக்கலைஞர் தமிழினத்திற்குக் கிடைத்த பெரிய பொக்குசமாகும்.

இன்று அவரின் திறனை அறிந்து அமெரிக்காவிலுள்ள உலகப்பல்கலைக்கழகம் அன்னாரின் கவின்கலைச் சேவையைப்பாராட்டி உயர்கலாநிதிப்பட்டம் என்னும் விருதினை வழங்கி கௌரவித்துள்ளது என்றால் இது உலகத் தமிழருக்கும், குறிப்பாக ஈழத்தமிழருக்கும் கிடைத்த பெருமையாகும்.

ஒப்பற்ற இந்த ஓவியக்கலைஞர் திரு. சு. சிவகுமாரனை உலகத்தமிழர் இயக்கத்தின் சார்பிலே வாழ்த்துவதில் பெருமை அடைகின்றோம்.

## சிவகுமாரனின் சொல் வண்ணம்

## பசி வந்தால் பத்தும் பறக்காது!



பிக்காஸோ

ஒருவன் தன் இலட்சியத்தில் வெற்றி பெறவேண்டும் என்றால் அவன் உண்ணும் போதும், உறங்கும் போதும் சிந்தனை அதுவாகவே இருக்கவேண்டும். இலட்சியத்தை பகுதி நேர வேலைபோல் செய்ய முடியாது. சிந்தனை ஒரு முகப்படுத்தப்பட்டு அதனை நடை முறைப்படுத்துபவன் உலகை வெல்கிறான்!. அந்த உலகால், உலகு உள்ள வரை பேசப்படுகிறான்.

நவீன ஓவியத்தின் தந்தை பிக்காஸோ உணவு உண்ண மேசைக்கு வருகிறார். பசி வந்தால் பத்தும் பறந்துபோகும் என்பர்.ஆனால் கலைஞனுக்கு கலையைத்தவிர எல்லாமே மறந்து போகிறது. நீள்வான பாணைக் கண்டதும் அதனை விரல்களாக எண்ணிக்கொள்கிறார். பின் அதனை தனக்கே விரல்களாக்கிவிட்டு அமர்ந்திருக்கிறார். பாணை விரலாக எண்ண பலர் இருக்கலாம்.ஆனால் அதனையே தனது விரல்களாக மாற்றும் எண்ணம் பெறுபவர்கள் எத்தனைபேர்? அதா? இதா? என்று தடுமாற்றம் தரும் பொருட்களை அந்த அந்த இடத்தில் வைப்பதன் மூலம் அதனை அதுவாகவே மாற்றிவிடலாம் என்ற கலைத் தத்துவத்தைக் காட்டி நிற்கிறது இந்தப் பிக்காஸோ .அருகில் இங்கு தன்னை தான் எடுத்துக்கொண்ட புகைப்படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னிசை வேந்தரின் இனிய வாழ்த்து

பிரபல ஓவியக் கலைஞரும் வெற்றிமணி ஆசிரியருமாகிய திரு. மு. க. சு. சிவகுமாரன் அவர்களுக்கு உலகப் பல்கலைக் கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் அளித்திருப்பது குறித்து அளவிலா மகிழ்ச்சி அடைகிறேன்.
திரு. சிவகுமாரன் அவர்கள் பெரிய கலைஞர். ஓவியம், சிற்பம் ஆகிய அருங் கலைகளிற் பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர். இக்கலைகளில் யேர்மனியில் பல காட்சிகளை நடத்தித் தமிழர் மத்தியில் மட்டுமல்லாது யேர்மனியர் மத்தியிலும் அதிக அளவிற் புகழ் பெற்றவர்.
இவர் ஒரு சிறந்த பத்திரிகையாளருமாவார். ஓவியத்தைப் பத்திரிகைக் கலையுடன் கலந்து வெற்றிமணிப் பத்திரிகையை வித்தியாசமாக நடத்திவரும் வித்தகர்.
தமது அரிய கலைத்திறமைகளைத் தமிழ் மக்களின் நலனுக்கும் வளர்ச்சிக்கும் பயன்படுத்தி வரும் பெரிய சமூகசேவையாளராகவும் இவர் விளங்குகின்றார். நான் யேர்மனியில் கலந்து கொண்ட எல்லா நிகழ்ச்சிகளிலும் இவரும் பங்குபற்றி இருப்பதைப் பார்த்துப் பழகி மகிழ்ந்திருக்கிறேன். யேர்மனியில் தலைவராகவோ பிரதம விருந்தினராகவோ அழைக்கப்பெற்று விழாவினைச் சிறப்பிக்கும் பேச்சாளராகவும் இவர் பவனிவருகின்றார்.
இத்தகைய பெருமகன் உலகப் பல்கலைக் கழகத்தின் கலாநிதிப்பட்டத்திற்கு எல்லாவகையிலும் பொருத்தமானவர். இக்கௌரவம் அவர் பிறந்த பதியாகிய குரும்பசிட்டிக்கும் அவர் புகுந்த நாடாகிய யேர்மனிவாழ் தமிழ் மக்களுக்கும் பெருமை தருவதோடு தமிழ் இனம் முழுவதற்குமே மகிழ்ச்சி தரும் மதிப்பாகவும் அமைகின்றது.
கலாநிதி சிவகுமாரன் அவர்களின் பணிகள் தொடர்ந்து வளரவும் மேலும் பல கௌரவங்கள் அவருக்குக் கிடைக்கவும் மனதார வாழ்த்துகின்றேன்.

**பொன் சுந்தரலிங்கம்**
ரொறன்ரோ கனடா
01.03.2003



**யேர்மனியில் (11.10.1998) செல்வன் மு.முரளீதரனின் மிருதங்க அரங்கேற்றவைபவத்தில் திரு.பொன் சுந்தரலிங்கம் அவர்கள் வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்களால் பொன்னாடை போற்றிக் கௌரவிக்கப்படும் காட்சி**

# நுண்கலைத்துறை கலாநிதியே நீடுழி வாழ்க!

## உதயன் - கனடா

அன்பரும் கலைத்துறை நண்பருமான
கலாநிதி சிவகுமாரன் அவர்களுக்கு
அமெரிக்காவில் இயங்கிவரும் உலகப் பல்கலைக் கழகத்தினால் தாங்கள் நுண்கலைக் கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட செய்தி அறிந்து மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றோம் .இந்த கலாநிதிப் பட்டத்தை பெறும் வரையில் தாங்கள் கலைத்துறைக்கும் தமிழ் இலக்கியத்துறைக்கும் ஆற்றிய சேவையானது உலகெங்கும் பரந்து வாழும தமிழ் மக்களால் அறியப்பட்ட ஒன்றாகையால் அந்த செய்தியானது உலகளவில் ஒரு அங்கீகாரத்தை தங்களுக்கு வழங்கியுள்ளது என்றே நாம் கருதுகினறோம்.



### பல்கலைச் செல்வர்

யேர்மனியில் (13.05.2000) வெற்றிமணியின் பொன்விழாவில், கனடா உதயன் பத்திரிகை வழங்கிய பல்கலைச் செல்வர் என்னும் பட்டத்தை விழாவிற்கு தலைமை தாங்கிய கலாநிதி கவிஞர் வி.கந்தவனம் அவர்கள் மு.க.சு.சிவகுமாரன் அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கின்றார்.

அன்ப, தாங்கள் தற்போது ஜேர்மனிய மண்ணில் புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் தங்கள் பத்திரிகையான வெற்றிமணி மூலமும் ஏனைய பொதுப்பணிகள் மூலமும் தங்களை ஒரு சமூகவாதியாகவும் கலைஞராகவும் இலக்கியவாதியாகவும் தமிழ் பேசும் நல்லுலகம் நன்கு அறிந்துவைத்துள்ளது.தங்களுக்கு நுண்கலைத்துறையில் கலாநிதிப் பட்டம் கிடைத்தது குறித்து உலகத்தமிழர்கள் அனைவரும் மகிழ்ந்து போயிருப்பார்கள் என்பதுகூட நிதர்சனமாகும்.



### ஓவியக் கலைவேள்

கனடாவில் எழுத்தாளர் இணையம் மு.க.சு.சிவகுமாரன் அவர்களுக்கு ஓவியக் கலைவேள் என்னும் பட்டத்தைச்சூட்ட அதனை உதயன் ஆசிரியர் வழங்கி மகிழ்கின்றார்.

எனவே தங்களின் வெற்றிகள் குறித்தும் சாதனைகள் குறித்தும் கனடா வாழ் தமிழ் மக்களுக்கு அவ்வப்போது செய்திகளை தந்த வண்ணம் தங்களோடு இணைந்து பணியாற்றுகின்ற நாம் தங்களுக்கு கலாநிதிப் பட்டம் கிடைத்தது குறித்து இங்கு குதூகலிக்கின்றோம். எம்மில் ஒருவர் சர்வதேச கழகத்தினால் பாராட்டப்படுவதும் கௌரவிக்கப்படுவதும் கனடாவாழ் தமிழர் சமூகத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கின்றது என்ற செய்தியை உங்களுக்கு தெரிவிப்பதில் பெருமையடைகின்றோம். தங்களின் எதிர்கால வெற்றிகளுக்கும் எமது வாழ்த்துக்கள்

**ஆர். என். லோகேந்திரலிங்கம்**
பிரதம ஆசிரியர் உதயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிவகுமாரனின்

# கைவண்ணமும் சொல்வண்ணமும் வாழ்த்துக்குரியன





பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் தலைவர் தமிழ்த்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஈழத்திலே தோன்றிய சிற்றேடாகிய -வெற்றிமணி- உலகவலம் வருகின்றது. மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி என்றவகையில் தந்தையின் பெயரை உலகமயமாக்கியுள்ளார் கலாநிதி மு. க. சு. சிவகுமாரன். இவருடைய தந்தையார், வெற்றிமணியின் தொடக்கமுதல்வர் திரு. மு. க. சுப்பிரமணியம் அவர்களை நான் நன்கு அறிவேன். அவருடைய மகன் வெற்றிமணியின் இன்றைய ஆசிரியர் சிலமாதங்களுக்கு முன் எங்கள் வீட்டிற்கு வந்தார். -வெற்றிமணி- இதழ்கள் சிலவற்றையும் தன்னுடைய கவிதைத் தொகுதி ஒன்றினையும் அன்பளிப்புச் செய்தார். கண்ணுக்குக் குளிர்ச்சியான கோடுகளும் கோலங்களும் வர்ணங்களும் பொதிந்தவையாக அவை இருந்தன.

கோடுகளாலும் கோலங்களாலும் எண்ணற்ற கோலங்களை உண்டாக்கி மகிழ்பவர், எம்மை மகிழ்விப்பவர் திரு. சிவகுமாரன். அவர் இக்கலையிலே நிபுணத்துவம் வாய்ந்த பட்டத்தினைப் பெற்றிருக்கின்றார். இதன் வளர்ச்சிநிலையே அவருக்கு வழங்கப்பட்ட கவின்கலைக் கலாநிதிப்பட்டம் ஆகும். இப்பட்டத்திற்காக மட்டும் அவரை நான் வாழ்த்தவில்லை.அவர் இதுபோன்று பல பட்டங்களைப் பெறும் திருவுடையவராக உள்ளார். அவரிடம் இயற்கையாகவே அமைந்துள்ள கலையாக்கத் திறன், நல்ல கவிபுனையும் ஆற்றல், சிறந்த சிற்றேட்டினைத் தயாரித்து வழங்கும் முகாமைத்துவ முயற்சி என்பனவே எங்கள் பாராட்டுக்குரியன, வாழ்த்துக்குரியன.


மேலைத்தேயக் கலையினையும்கீழைத்தேயக் கலையினையும் இணைத்து அமைதிகாணும் ஆற்றல் அவர் கைவண்ணத்திலே உண்டு. அவர் அமைக்கும் கோடுகளுக்கும் கோலங்களுக்கும் ஏற்ற சொல்வண்ணம் அவரிடம் உண்டு. அவருடைய குறுங்கவிதைகள் ஆழ்மன உணர்வுகளையும் இனிய அன்பு உணர்வுகளையும் கோடுகளும் கோலங்களும் போலக் காட்சிப்படுத்துவன. உண்மைகளை எவ்வித மறைப்புமின்றிக் கூறிவிடுவார். வெளிநாட்டில் உள்ள தமிழர் எதையும் செய்யவில்லை என எண்ணுபவரும் உளர். அதுபற்றி -நக்கலடிக்கும்- பேர்வழியை மனத்திலே கொண்டு,

அவரில் குற்றமில்லை
எம்மில்தான் குறையுண்டு
எனவே சொல்லுங்கள்!
செய்ததைச்
சொல்லுங்கள்!!
எதுவும் செய்யாவிட்டால்
செய்தவர்களையாவது சொல்லுங்கள்.

கலைஞன், இதழாசிரியன், அறிஞன் ஒருவனுக்கிருக்கும் மன உரமும் பணிவும் டாக்டர் சிவகுமாரனிடம் இருக்கின்றன. 90 ஆவது வெற்றிமணி இதழ் வெளிவந்த போது அவர் எழுதிய எழுத்து என் மனதைக் கவர்ந்தது.

-இது வெற்றிமணியின் 90 வது இதழ். எனக்கே நம்பமுடியவில்லை இதனைச் செய்து முடித்தது நான் என்று. இந்த நானுக்குள் அகம்பாவமோ! ஆணவமோ! இல்லை. அவன்தான் இருக்கிறான். அந்த இறைவன் தந்த தன்னம்பிக்கையே இதனைச் சாதிக்கவைத்தது... வாசகர்களே உங்களுக்குரிய ஒரு அரிய பணி உண்டு... உங்களுக்குக் கிடைக்கும் வெற்றிமணியை பிறர்க்கும் கொடுத்து அவர்களையும் வாசகர்களாக்குவதே அந்தப் பெரும்பணி. இலவசம் என்பதற்காக உங்கள் பணியினை உங்களுடன் சுருக்கிக்கொள்ளாதீர்கள். நதியும் காற்றும் இலவசம்தான். ஆனால்! அவை ஒருவரையே சுற்றி நிற்பதும் இல்லை. அந்த ஒருவரோடு அழிவதும் இல்லை. அதேபோல்தான் வெற்றிமணியும்.

தமிழுக்குப் புத்தொளி பாய்ச்சுபவர்கள் என்றுமே பாராட்டுக்கும் வாழ்த்துக்குமுரியவர் எனவே, சிவகுமாரன் பாராட்டுக்கும் வாழ்த்துக்குமுரியவர். அவர் திறன் மேலும் உயர்வுபெற பார்வதி உடனுறை ஆடவல்லானை வேண்டி இச்சிறு வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன்.



Benz,B.M.W ஆகியவற்றின் மின் உதிரிப்பாகங்களினால் சிவகுமாரன் தயாரித்த ஒரு உழைப்பாளியின் படகுச் சிற்பம். பெறுமதி 6 இலட்சம் ரூபாய்




## தீயணைக்கும் படைக்குப் படைத்த சிற்பம்!

1981ம் ஆண்டு யேர்மனியில் லுட்விக்ஸ்ரட் நகரில் வாழ்ந்த காலத்தில். அந்த நகரத்தின் நகரசபைத் தீயணைக்கும் படையினருக்கு அமைத்துக் கொடுத்த சிற்பம் இது. இதனை சிவகுமாரன் உலோகம் சிமெந்து என்பவற்றின் கலைவையாக வடித்திருந்தார்.தமிழ்மகனின் கை வண்ணத்தில் உருவான முதலாவது மேற்கத்தியச் சிலையிது. யேர்மனியர்களின் பாணியில் சென்று,பின் தன்பாணிக்கு அழைத்து வந்து தமிழ்விருந்து அளித்து மகிழ்ந்தவர் எங்கள் கலாநிதி.மு.க.சு.சிவகுமாரன் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sehr geehrte Herr Dr. Sivakumaran, kurz
meine Damen und Herren,
es ist für mich viel leichter den Künstler Herrn Dr. Sivakumaran zu beschreiben denn, ich genieße das Privileg ihn sowohl als Künstler wie auch als Mensch kennen gelernt zu haben.


# Der Liebesbote



-Earth - Eade பூமி

Im Gegensatz zu einer allgemeine Tendenz, das künstlerische Werk jedes Künstlers von sein Verhalten im Alltag zu trennen, vertrete ich eine andere Meinung.
**Ich verbinden doch alles miteinander.**
Also,
für mich ist der Künstler tatsächlich was er sagt,
malt,
zeichnet,
gestaltet.
In die Werken des Künstlers,
ob Plastiken,
Malerei
oder Skizzen, erkenne ich das herrschende Element.
**Die Liebe!**
Die Frau und ihr Körper, (meistens als Hauptfigur) und der Mann (überwiegend als Nebendarsteller),
erweisen sie sich als zwei Faktoren im Dienst einer gestrebten Vollkommenheit.

**Vollkommen kann nur die Liebe sein,**
und dieser Künstler sendet damit eindeutige Signale.
Gewiss, er erspart sich nicht den Weg Fragen zu stellen,
jedoch gleichzeitig bietet er Antworten, Alternativen,
Optionen, Visionen an.
Uns bleibt ratsam seinen Gedankenfaden solange es wir können zu folgen, um an unsere Seele das versteinerte Lächeln wieder blühen zu spüren, blühen zu sehen.



Sehr geehrte Herr Dr. Sivakumaran,
liebe "Siva",
ich wünsche Dir vom Herz dass die Götter auf dem Weg der Existenz immer beistehen.

**Leonidas Panagiotidis**

Im Jahr 1985 lernten wir die Familie Sivakumaran kennen.
Sie fand in unserer Evangelisch- Freikirchlichen Gemeinde Altena - Grünewiese ein Zuhause und Geborgenheit. Bei vielen notwendigen Entscheidungen für das Einleben in unseren Kindergruppen konnte Sivakumaran Anleitungen zum künstlerischen Malen geben.
Auch haben wir ihn bei Ausstelllungen, die das hohe künstlerische Talent von Herrn Sivakumaran unter beweisen stellten, unterstützt. Wir haben die ganze Familie lieb gewonnen und freuen uns noch heute, wenn wir mit allen zusammen sein dürfen. Es freut uns ganz besonders, dass das große Engagement von Herrn Sivakumaran auf vielen Gebieten bis hin zu der Herausgabe einer nahe zu einmaligen Ausgabe eines international gefragten INFO- Blatt für Tamilen in vielen Teilen der Welt, große Resonanz findet. Zu der Verleihung der Ehrendoktorwürde für unseren tamilischen Freund gratulieren wir sehr herzlich!





Ruth und Friedhelm Gerdes
Evangelisch- Freikirchliche Gemeinde
58762 Altena

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகுமாரனின் சித்திரங்கள்

அருந்ததி சபாநாதன்
(நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)

இலங்கை உதயம் சஞ்சிகையில் 1994 சித்திரை மாத இதழில் வெளிவந்த விமர்சனம்.

ஜேர்மனியில் வாழும் யாழ்பாணத் தமிழரான திரு. சு. சிவகுமாரன் அவர்களின் சில ஓவியங்களையும், சிற்பங்களையும் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது.

இயற்கை தட்டிக்கொடுக்கும் உணர்வைக் கொண்டு கலையைப்படைத்தல் என்பதில் நம்பிக்கை கொண்டிருக்கும் இக்கலைஞனின் படைப்புக்கள் காட்சியையோ, பொருளையோ இயற்கையாக உள்ளது போன்றே படைக்காமல் தன்னுணர்வை அதிலிருந்து தான் பெற்ற அனுபவத்தை தன்படைப்புக்களில் கொண்டு வருகின்றார்.

இயற்கையின் ஒவ்வொருவடிவமும் ஒவ்வொருவருக்கும் தனித்தனி அனுபவங்களையே தருகின்றன. தான் பெறும் அனுபவத்தை ஒரு கலை வடிவூடாகக் கொடுக்க வல்லவனே கலைஞன்.

இவரது சிற்பங்களில் இடைவெளியின் கையாள்கை அற்புதமாக அமைந்திருக்கின்றது. இயற்கையில் உள்ள பெருட்கள் மட்டுமல்ல இவரது சிற்பங்களும் எண்ணங்களைப் பலவாறும் தூண்டுவனவாய் அமைகின்றன. குறியீட்டுத் தன்மையின் பொருளைக்கொண்டு வரல் இவர் பண்பாக அமைகின்றது. சிற்பங்களில் இடைவெளி பெறும் முதன்மை சுருள் வடிவங்களும் பெற்றுக் கொள்கின்றன. ஒவ்வோர் ஓவியனுக்கும் தனக்கென தனித்துவமான வர்ணங்கள் அமைந்திருப்பது போன்று இவரது சிற்பங்களில் காட்டப்பட்டிருக்கும் வளைவு சுளிவுகள் இவரது படைப்பை தனித்துவமாக எடுத்துக் காட்டுகின்றது.



முற்றுமுழுதான சிதைவுகள், விகாரங்கள் என்பவற்றை உட்படுத்தாத ஆனால் தட்டைத்தன்மையற்ற போக்கு இவர் ஓவியங்களில் காணப்படுகின்றது. ஓவியத்தின் முன்னணியுடன் இணைந்து பின்னிக்கோடுகள் வெளிப்பட்டாலும் வர்ணப்பயன்பாடு அவற்றைப்பிரித்துக் காட்டுகின்றது.

மேலும் கறுப்பு அல்லது கபிலநிற வெளிக்கோட்டுக் (Outline) கையாழ்கை இலங்கை ஓவியங்களுக்குரிய தனித்துவமாகும்.அந்த வகையில் சிகிரியா ஓவியங்களிலும் தொடர்ந்து வந்த சுவர் ஓவியங்களிலும் கடும் வர்ணத்தாலான வெளிக் கோடுகள் முதன்மை பெறுகின்றன. இப்பண்பு இலங்கையின் பழைமையான ஓவியங்களுக்குரிய தனிப்பண்பாய் அமைந்ததுடன் மட்டுமல்லாமல், நவீன ஓவியர்களும் வெளிக் கோட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்தலை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக இலங்கையின் நவீன ஓவியர் ஜோர்ஜ் கீற்றின் ஓவியங்கள் இதற்கு நல்ல உதாரணமாக விளங்குகின்றன. இவ்வாறான கோட்டின் கையாள்கை இவரது ஓவியங்களிலும் காணமுடிகின்றது. வளைந்த கோடுகளைவிட முறிவுகளுடனான கோடுகளை இவர் மிகவும் நேர்த்தியாகக் கையாண்டிருக்கின்றார்.

ஓவியங்களின் விடயம் தமிழ் மரபு சார்ந்து நிற்பதாகவே அமைந்திருந்தாலும், எனக்குப் பார்க்கக் கிடைத்த ஓவியங்களின் விடையங்களில் அதிகம் நவீனத்தை அதாவது சமகாலத்தை தரிசிக்க முடியவில்லை. காவடியாட்டம், காதலர் போன்ற விடயங்கள் மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டாதவை. விடுதலை என்ற தலைப்பில் வெண்புறாவின் குறியீட்டுடன் வரைந்த ஓவியமும் கூட வரைதிறனிலும் வர்ணப் பாவனையிலும் சிறப்புப் பெறுகின்றது. கலப்பு வர்ணங்களைவிட மஞ்சள், சிவப்பு, நீலம் போன்ற வர்ணங்கள் இவர் ஓவியங்களை ஆக்கிரமிக்கின்றன. பச்சை, செம்மஞ்சள் ஆங்காங்கே இடம் பெற்றாலும் பொதுவாக மஞ்சளும், கபிலமும் இவர் ஓவியங்களுக்குரிய நிறமாக அமைந்து விடுகின்றது.





பொதுவாக ஓவியங்களுக்குரிய பொதுப்பண்பைப்பற்றிக் குறிப்பிடுவதாயின் படைப்புக்கள் தமிழியல் பண்பை உருவங்கள் மூலமும் வர்ணங்கள் மூலமும் கொண்டு வருகின்றன. குறிப்பாக உருவங்களின் பக்கப் பார்வையும் நீண்ட கண் அமைப்பும் இந்திய இலங்கை ஓவியப் பாணியை வெளிப்படுத்தினாலும், இந்திய ஓவியங்களின் கூர் மூக்கு விடுபட்டு நிற்பது இந்தியத்துவத்தை இவர் ஓவியங்களில் விலத்திவிடுகின்றது:

அனேகமான ஓவியங்கள் கோடுகளால் நிறைக்கப்பட்டனவாக காணப்படுகின்றன. அத்துடன் இலங்கையின் ஏனைய ஓவியர்களுடன் ஒப்பிட்டு நோக்கும் போது ரமணியும், அ.மாற்குவும் சிலசில இடங்களில் ஞாபகப்படுத்தப்படுகிறார்கள். இருந்தாலும் ஓவியத்தின் தரம் இவரது எந்தவொரு ஓவியத்திலும் விடுபட்டுப்போகவில்லை என்றே கூறவேண்டும். மேலும் ஓவியங்கள் ஒரு தமிழரின் படைப்புக்கள் என்பதைப் பார்த்ததும் எடுத்துக் காட்டுவனவாக விளங்குகின்றன. தன் தனித்துவத்தையும் அடையாளத்தையும் தனது படைப்புகளில் கொண்டு வருதல் ஒவ்வொரு படைப்பாளிக்கும் உரிய கடமையாகும். இதனை சு. சிவகுமாரனின் கலைப்படைப்புகளில் முழுமையாகக் காணமுடிகின்றது

## உலகத்தமிழ் வானொலி கீதவாணி



கனடா

அன்புச் சகோதரர்!

கலை உள்ளம் தாய் உள்ளத்திற்கு சரிநிகர் என்பர் கலைஉணர்ந்தோர். இவ்வகையில் உங்கள் உயர்வு கண்டு இறும்பூதெய்துகிறேன். தங்கள் திறன் கண்டு அதிசயித்த பலருள் நானும் ஒருவன். சரியான தருணத்தில், சரியான முறையில் கிடைத்த கௌரவம் உங்கள் கலாநிதி தகைமை என்றால் மிகையில்லை.

தகுதி கொண்டோரும் தான் பிறந்த இனத்தின் மீது தாளாத அன்பு கொண்டோரும் இந்த உலகத்தின் மீது மக்கள் மீது மாறாத அன்பு கொண்டோரும் போற்றப்பட வேண்டும் ஏற்றம் பெறவேண்டும் என்பதில் எனக்கு இருவேறு கருத்திற்கு என்றும் இடம் கிடையாது.

உங்கள் நிறைவும் உயர்வும் கண்டு மீண்டும் மீண்டும் மகிழ்கிறேன். என்குடும்பத்தில் அனைவரும் இணைந்து வாழ்த்துகிறோம். மேலும் உயர இறையருளைப் பிரார்த்திக்கிறோம்.

வாழ்க தமிழ்
வாழ்க கவின் கலைகள்
வாழ்க உலகம்

அன்பன்
**நடா. ஆர். ராஜ்குமார்**
அதிபர் உலகத்தமிழ் வானொலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம் பெயர்நாட்டில் 22 வருடங்கள்
# கலை உலா வரும் பெருமகன்
# கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்

**ஆன்மீகத்தென்றல் த..புவநேந்திரன்** (யேர்மனி)

உலக அரங்கில் இன்று தமிழனுக்கு ஒரு கௌரவம் திடீர் எனத் தோன்றியுள்ளது. ஈழத் தமிழனுக்கு ஏதோ அதிட்டக்காற்று வீசுகிறது. என்பது போன்ற பல கருத்துக்கள் காற்றோடு செய்தியாகித் தினம் கரைகின்றன.

கனி ஒன்று பூக்காமல்!
காய்க்காமல்!!
பழுப்பதுண்டா!!!

வயலில் உழவனின் மணியான வியர்வை சிந்தப்பட்ட பின்னல்லவா நெல்மணிகள் அசைந்தாடுகின்றன. இது இயற்கை காட்டும் கட்டியங்கள்.

எனவே ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னரும் ஒவ்வொரு உழைப்புண்டு. இந்த உழைப்பின் அறுவடையே இன்றைய ஈழத்தமிழர்களின் வெற்றியும் கௌரவமும்.

யேர்மனியில் தமிழரது கலைச் சொத்தான ஓவியத்தையும், சிற்பத்தையும், நவீன பாணியில் எமது பண்பாடு குறையாது, யேர்மனியருக்கு கண்காட்சிகள் முலம் 1981 இல் இருந்து எடுத்துக்காட்டி, இன்று பத்திரிகை, ஓவியம், சிற்பம், சிறுகதை, கவிதை, பேச்சு என பல்கலைகளுக்குள்ளும் உலாவரும் திரு.மு.க.சு.சிவகுமாரன் அவர்களுக்கு உலகப் பல்கலைக்கழகம் அவரது கவின்கலைச் சேவையை பாராட்டி (Cultural Doctorate in Fine Arts -U.S.A) என்னும் உயர் கௌரவமான கலாநிதி என்னும் விருதினைக் கொடுத்து மகிழ்ந்துள்ளது.

கவின் கலையில், காலாநிதி என்னும் முதல் கௌரவம் பெற்ற மு.க.சு.சிவகுமாரன் அவர்கள், இலங்கைப் பல்கலைக் கழகம் (களனி) முதல் முதல் வெளி வந்த ஓவிய சிற்பப் பட்டதாரிகளில் ஒருவர் என்பதும், கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்களின் மாணவன் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1981 இல் இருந்து தமிழ் மக்களின் விடுதலை உணர்வையும், தாயகத்தின் அவலங்களையும் ஓவியமாகவும் சிற்பமாகவும் யேர்மன் மக்கள் முன் நடமிடவைத்தவர். இவரது ஓவியங்கள் நீண்டகாலமாக எரிமலை சஞ்சிகையில் தமிழனின் உணர்வை பிரசவித்தன. (கண்ணா என்னும் பெயரில்) யேர்மனியில் பிலபெட் தமிழாலயத்தில் 5 வருடங்களுக்கு மேலாக ஓவியத்தைக் கற்பித்து நமது சிறுவர்களை நமது மண்ணோடு ஒட்டிய கலையை மேற்கத்திய உத்திகளோடு அரங்கேற வைத்தவர்.

நம்மவர்க்கு மட்டுமன்றி 1985ம் ஆண்டுகளில் யேர்மன் சிறுவர்களுக்கும் அவர்களது பாடசாலைகளில் ஓவியத்தை புகட்டும் பேறுபெற்றவர். 1992 இல் யேர்மன் பத்திரிகை ஒன்று நடாத்திய சுவர்ச்சித்திரப் போட்டியில் பெரும்பான்மை வாக்குகளால் முதலிடத்தைப் பெற்றவர்.

இவர் இவரது தந்தை அமரர் குரும்பசிட்டி மு.க.சுப்பிரமணியம் அவர்களால் 1950 இல் தாயகத்தில் ஆரம்பிக்கப்பட்ட வெற்றிமணி என்னும் பத்திரிகையை 1994 முதல் யேர்மனியில் வண்ணத்தமிழ் இலவசப் பத்திரிகையாக வெளியிட்டு வருகின்றார்.

அத்துடன் வெற்றிமணி வெளியீடுகளாக கலாநிதி வி.கந்தவனம் அவர்களின் 'எழுத்தாளன்' என்னும் நூலையும், மகாஜனாக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு.பொ.கனகசபாபதி அவர்களின் 'மாறன் மணிக்கதைகள்' என்னும் சிறுவர் சிறுகதைத் தொகுதியையும், தனது (மாதவி) இடைவெளி என்னும் சிறுகதைத் தொகுதியையும், யேர்மனியில் கலாநிதி வி.கந்தவனம் என்னும் தொகுப்பு நூலையும் வெளியிட்டவர்.

தற்போது 'தமிழே காதல் ' என்னும் சித்திரக்கவிதைத் தொகுதியும், 'அது என்பது இதுவா' என்னும் அனுபவ அலசல்களும், 'கோடுகளும் கோலங்களும் ' என்னும் தனது 21 வருட கலைப் பதிவுகளையும் உள்ளடக்கி வெளிவரத் தயார் நிலையில் உள்ளன.



**செல்வி காயத்திரி சற்குணசிங்கம் அவர்களின் அரங்கேற்ற வைபவத்தில் வெற்றிமணி மு.க.சு.சிவகுமாரன் அவர்களை, ஆன்மீகத்தென்றல் த.புவனேந்திரன் கௌரவிக்கின்றார்.**

இவரது தமிழே காதல் ஈழத் தமிழனின் நூல்களில் புதிய வடிவ மைப்புக்கும், நவீன ஓவியத் திற்கும், வெளிநாட்டவர் களது யுக்திகளை எமது கலை களுக்குள்ளும் பேசவைத்த சித்தி ரமாக முதல் முதல் தமிழே காதல் வெளிவருகிறது.

அண்மையில் வெற்றிமணியும் அதன் வெளியீடுகளும். யாழ் பாணத்திலும் கொழும்பிலும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு புலம் பெயர்ந்து வாழும் மக்களின் தமிழ்பற்றையும், தாயகத்தின் மீதான காதலையும் வெளிப் படுத்தினார்.

இவரது திறமைகளை 1999 இல் எடைபோட்டு அவருக்கு சிறந்த தமிழ்பணி விருதினை கனடாவில் இருந்து வெளிவரும் தமிழர் தகவல் சஞ்சிகை வழங்கிக் கௌரவித்தது. அத்துடன் கனடா எழுத்தாளர் இணையம் ஓவியக் கலைவேள் என்னும் பட்ட த்தினையும்,

யேர்மனியில் நடைபெற்ற வெற்றிமணி பொன்விழாவில் கனடா உதயன் பத்திரிகை நிறுவனம் 'பல்கலைச் செல்வர் ' என்னும் பட்டத்தினையும்.

இலங்கை சர்வதேச இந்து சமய குரு பீடம் 'கலை ஞான மணி' என்கின்ற கௌரவத்தையும் கொடுத்தனர்.

இன்று உலகப் பல்கலைக் கழகம் கலாநிதி என்னும் கௌரவம் கொடுத்தமை, இது வரை திரு.மு.க.சு.சிவகுமாரன் அவர்களை கௌரவித்தவர்களை கௌரவிப்பதாகவும் அமைகின்றது.

கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் தான் கல்விகற்ற, கற்பித்த மகாஜனக்கல்லூரியை மறவாது இந்த இனிய செய்தியை. மகாஜனாக்கல்லூரிக்கு நேரே சென்று அங்கு மகாஜனா மாதாவின் பாதங்களில் முதல் முதலாகச் சொல்லி அர்ச்சித்தவர்.

அன்றைய தினம் மகாஜனக்கல்லூரி உலகப் பல்கலைக் கழகத்திற்கு ஒரு கவின்கலையில் ஒரு கலாநிதியைக் கொடுத்த பெருமையுடன் நிமிர்ந்து நின்றது. இந்த நிமிர்வானது ஒரு கல்லூரிக்கு மட்டுமன்றி அனைத்துக் கலைஞர்களுக்குமே உரித்தான ஒன்றானது.

தான் பிறந்த ஊரான குரும்பசிட்டி பற்றிக் குறிப்பிடுகையில் குரும்பசிட்டி என்னும் கலைப்பரப்பின் ஒரு பிடி மண்தான் இந்தக் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் என்கின்றார்.

திக்கெட்டும் பரவட்டும் நம்
கலைஞரின் புகழ்!
சுற்றட்டும் இனி உலகம்.
தமிழனின் பெருமைகளைச் சுமந்தபடி.

# உழைப்புக்கும் முயற்சிக்கும் கிடைத்த கௌரவம்!

**'இலக்கியச் செம்மல்' இந்துமகேஷ்**
'பூவரசு' ஆசிரியர் யேர்மனி

இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டின் இறுதி வாரத்தில் இனிப்பான செய்தியொன்று இதயத்தை மகிழ்வித்தது.

வண்ணங்களில் எண்ணங்களைக் குழைத்து மனதைக் கொள்ளையிடும் எங்கள் கண்ணாவிற்கு உலகப் பல்கலைக்கழகம் கலாநிதி மகிடமிட்டுக் கௌரவித்த அந்தச் செய்தியே அது.

இந்த உயர் கௌரவம் அவருக்குக் கிடைப்பதற்கு முக்கிய காரணமாக இருந்தது எது. அவரது ஓவியங்களா? இல்லை அவற்றைப் படைப்பதில் அவர் எடுத்துக் கொண்டிருக்கும் அயராத முயற்சியும் உழைப்புமா?

இரண்டும்தான்.

இது அவரது திறமைக்குக் கிடைத்துள்ள உயர் கௌரவ விருது. ஓவியர் கண்ணா என்று உள்ளங்களைக் கொள்ளையிட்டாலும். இவர் ஒரு சிறந்த எழுத்தாளர். கவிஞர், ஓவியர், சிற்பி, பத்திரிகையாளர், நாடகாசிரியர் என்று இவரது திறமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஆனாலும் ஓவியங்கள் என்னும் போது அது மொழிகடந்து இனம் கடந்து எல்லா மக்களையும் ஈர்த்துக்கொண்டு தன்னை வெளிப்படுத்தும் என்பதால் அதில் தன்னை ஐக்கியப் படுத்திக் கொள்ளும் ஒரு கலைஞன் ஏனைய படைப்பாளர்களைவிடவும் முன்னிலை வகிப்பவன்.


அதில் தேர்ச்சிபெறுவது என்பது தன்னை தனது படைப்புகளில் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளும் ஒரு கலைஞனுக்கே இயலுமானது.

பல்கலைச் செல்வரும் வெற்றிமணி ஆசிரியரும் ஓவியர் கண்ணாவுமான திரு.மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் The World University வழங்கிய The Cultural Doctorate in Fine Arts என்னும் உயர் விருதால் Dr.மு.க.சு.சிவகுமாரனாக உயர்வு பெற்றிருப்பதற்காய் மனம் நிறைந்து வாழ்த்துவதோடு அவரது கலை,இலக்கியப் பணிக்குக் கிடைத்த மணிமகுடமாக இதனைப் போற்றி வரவேற்கிறோம்.

டாக்டர் சிவகுமாரன் அவர்களுக்கு நண்பனாக மட்டுமல்ல அவரது இரசிகனாகவும் நின்று வாழ்த்துகின்றேன்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி சிவகுமாரன் குரும்பசிட்டியின் தவக்குமாரன்



1979இல் சித்திரக்கூடத்தில் வரைந்த சித்திரம்

**பொ.கனகசபாபதி** (முன்னாள் அதிபர்: மகாஜனக்கல்லூரி )

செய்தி இனிக்கிறது.செகத்தினில் நமது மகாஜனா மாணவர்கள் திறனறிந்து கௌரவிக்கப் படுகிறார் எனக்காண உளம் இறும்பூதெய்துகிறது. கௌரவம் பெற்றவரின் ஆற்றல் தெரிந்தவர்கள், "ஆம்" இக் கௌரவத்தை உலகப் பல்கலைக் கழகம் அவருக்கு வழங்குவதால் பெருமை பெறுகிறது எனக் கூறுவதைக் கேட்க மனது பேருவகை கொள்கிறது. அரிசோனா மாநிலத்து உலகப் பல்கலைக் கழகம் "பல்கலைச்செல்வன்" மு.க.சு சிவகுமாரன் அவரகளுக்கு கலைத்துறைச் சாதனைக்காய கலாநிதி பட்டம் அளித்துக் கௌரவித்ததை கேட்டதும் என் மனம் 25 வருடங்கள் பின்நோக்கிச் செல்கிறது.
கலாகேசரி தம்பித்துரை ஈழத்தின் அதியற்புதக் கலைஞர்களில் முதன்மையானவர் எனலாம். அவரது திறனுக்கு ஈடாக இன்னொருதர் இருந்தாரோ, இருப்பாரோ என்பது கேள்விக் குறியே. மகாஜனக் கல்லூரியல் ஆசிரியராகக் கடமையாற்றிப் பின்னர் சித்திரக் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றார். நானும் அவரும் நல்ல நண்பர்கள்.
அவருக்குச் சூட்டப் பட்ட கலாகேசரி விருதினைத் தெரிவதிலும் பெரும் பங்கு எடுத்தேன். எனது மைத்துனர் மாத்தளையில் கடமையாற்றிய பொழுது மாத்தளை முத்துமாரி அம்மனுக்கு தேர் செய்ய சிற்பாசாரி ஒருவர் தேவை என்ற பொழுது நானே திரு தம்பித்துரையைச் சிபாரிசு செய்தேன். தம்பித்துரை சிறப்பாக அந்த வேலையைச் செய்து எல்லோரது பாராட்டையும் பெற்றார்.



மகாஜனக் கல்லூரி

நான் மகாஜனாவில் பதவி ஏற்ற போது "பபூன்" எனப் பட்டப் பெயருடன் பெரிய நகைச்சுவை நடிகராக விளங்கிய சுந்தரமூர்த்தி ஆசிரியர் அங்கு சித்திர ஆசிரியராகக் கடமையாற்றினார்.அவர் ஓய்வு பெற்ற போது கல்லூரியில் சித்திர ஆசிரியர் வேலை காலியானது.சித்திர போதனாசிரியர்களைக் கண்டு பிடிப்பது மிகவும் கடினம்.கல்விப் பகுதி இதில் பெரும் அளவில் உதவமாட்டாது.கல்வித் திணைக்கள உதவியை எதிர் பாரத்தால் மாணவரின் உடனடித்தேவையை எப்படி ஈடு செய்வது. பொதுவாகவே இப்படியான சந்தர்ப்பங்களிலே நான் வசதிக் கட்டணத்தில் ஆசிரியர்களை நியமிப்பது வழக்கம். ஏறக்குறையப் பத்து ஆசிரியர்கள் வரை வசதிக் கட்டணத்தில் சேவையாற்றினர் இதனால் பெரும் தொகை பணம் விரையமானாலும் கூட மாணவர் தேவைகள் ஈடு செய்யப் பட்டன.
சுந்தரமூர்த்தி ஆசிரியரின் இடத்திற்கு என்ன செய்வது என்று நான் மலைத்து நின்ற சமயம் வரப்பிரசாதமாய் நண்பர் தம்பித்துரை ஒருநாள் இளைஞர் ஒருவருடன் என் அலுவலகம் வந்தார்.வழமையான குசல விசாரிப்புக்குப் பின்னர் தன்னுடன் வந்தவரை அறிமுகப் படுத்தினார்.
அவர் சிவகுமாரன். சிவகுமாரன் மகாஜனா மணவராயிருந்த போதிலும் அவர் கலைத்துறையில் கற்றமையால் என்னிடம் கல்வி கற்கவில்லை.
ஆனால் அவர் தம்பி சிவராஜா எனது அபிமான மாணவர். அவர் சகோதரி அப்பொழுது அங்கே கல்வி கற்றுக் கொண்டிருந்தார். அவர் தந்தை சுப்பிரமணியம் ஆசிரியர் எனக்குப் பரிச்சயமானவர்.

இவர் மகாஜனாவில் இருந்து களனியா பல்கலைக்கழகம் புகுந்து நுண்கலை துறையில் பட்டம் பெற்ற பின் கொழும்பு நுண்கலைக் கல்லூரியில் நுண் கலைமானி மேற்றகமை ஈட்டியுள்ளார்.
இங்கு சுந்தரமூர்த்தி ஆசிரியர் ஓய்வு பெற்றமையால் அவரிடத்திற்கு ஒருவர் தேவை என அறிந்து தான் கற்ற கலையைத் தன் சமூகத்தினுக்கு நல்க வேண்டும் என்ற வேட்கையின் காரணமாக தொழிலாற்ற மகாஜனக் கல்லூரியைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

எனவே அவரை இங்கே கூட்டி வந்தேன்.
அவரை நியமிக்கலாம்தானே" என்றார்.
தம்பித்துரை எப்பொழுதும் நண்பர்களுக்குக் கட்டளை போட்டமாதிரியே பேசுவார். நான் சிவகுமாரின் சுயவிபரக் கோவையைப் பார்த்தேன். இவ்வளவு தகமையுடையவர் யாழ்ப்பாணத்திலேயே இவர் ஒருவராகத் தான் இருக்க வேண்டும்.
பழம் நழுவிப் பாலில் வீழ்ந்தது போல இருந்தது.ஆனால் இவர் எமது பாடசாலையில் நீடித்து நிற்பாரோ என்ற சந்தேகமும் எழுந்தது. பல்கலைக் கழகம் கூட இவரை விட்டு வைக்க மாட்டாதே? இவர் ஏன் அதை எல்லாம் விட்டு விட்டு இங்கே வருகிறார் என மனம் சம்சயப் பட்டது. எனவே, அந்தச் சந்தேகத்தையும் கேட்டுவிட்டேன் தன்னை வளர்த்த மகாஜனக் கல்லூரிக்குத் தன்னால் ஆற்றக் கூடிய பணியினைத் தொடர்ந்து ஆற்ற வேண்டும் என்ற பெருவேட்கையுடன்தான் அவர் இங்கே வந்துள்ளார் என்றார் தம்பித்துரை. அவரின் நன்றியுணர்வு என்னை பெரிதும் கவர்ந்தது. மறு வார்த்தையின்றி உடனடியாகவே அவரை ஆசிரியராக நியமித்தேன்.
மறுநாளே மகாஜனா புதுப் பொலிவு பெற்றது என்றால் அது மிகையான கூற்றல்ல.கல்வி கற்ற பாடசாலை எனவே, சூழல் அவருக்குப் புதிதல்ல. பல ஆசிரியர்கள் அவருக்கு ஏற்கனவே பரிச்சயமானவர்கள். பலர் அவரது புகழ் பெற்ற தந்தை யாரின் நண்பர்கள். எனவே பாடசாலைச்சூழல் பழக்கப் பட்ட சூழல். எனினும் அவரது கூச்ச சுபாவம் ஆசிரிய அறைப்பக்கம் அவர் வருவதற்குத் தடையாக அமைந்தது. அதுவும் நன்மைக்கே. சித்திரம் கற்பிப்பதற்கென வகுப்பறை ஒன்று இருந்தது. சிவகுமாரன் பாடசாலையில் இருந்த முழு நேரத்தையும் அந்த வகுப்பறையினுள்ளேயே செலவழித்தார். அது இது நாள் வரை வெறுமனே வகுப்பறையாகவே இருந்தது."நாளொரு வண்ணம் பொழுதொரு மேனி" என்பார்களே, அதனை அங்கே காணக் கூடியதாக இருந்தது. சுவர் எங்கும் கலைநயமிக்க அழகு ஓவியங்கள் மெல்ல மெல்ல எட்டிப் பாரக்கத் தொடங்கின.
சித்திர வகுப்பறை இப்போ ஒரு ஓவிய கூடமாகப் பரிணாமம் பெற்றது. அண்மையில் மகாஜனா சென்ற சிவகுமாரன் முதலில் ஓடோடிச் சென்று அதனையே, கன்றினைப் பிரிந்த தாய்ப் பசுவின் உணர்வுடன் சென்று பார்த்துள்ளார். அவ்வோவியங்கள் சிதையாமல் இருப்பது கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்துள்ளார். எவ்வளவு நேரம் அதனை தடவித் தடவி அனுபவித்தாரோ தெரியவில்லை. மன நிறைவுடன் வந்து என்னிடம் கூறிய பொழுது அவரது உணர்வுகளை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.
பாடசாலை ஒன்றின் அதிபராயிருப்பவர், எப்பொழுதும் பாடசாலைக்கு முதலில் செல்பவராகவும் கடைசியாக வெளியேறுபவராகவும் இருக்க வேண்டும் என்ற தீவிர கொள்ளையுடன் நான் வாழ்ந்தேன்.
அதனைப் பெரும் அளவில் நிறைவேற்றியும் உள்ளேன். சிவகுமாரன் பாசாலைக்கு ஆசிரியராக நியமிக்கப் பட்ட பின்னர் எனது தீர்மானத்தை நிறைவேற்றுதல் கொஞ்சம் கடினமாக இருந்தது.
காலை 7:45க்கு நான் பாடசலைக்குச் செல்வேன் அங்கே சிரித்தபடி என்னை வரவேற்பார் சிவகுமாரன். மாலை விளையாட்டுப் பயிற்சி முடிந்ததும், விடுதிச்சாலையைப் பார்த்து விட்டு ஏழு மணிவரையில் நான் வீடு ஏகுகின்ற பொழுதும் சித்திரகூடத்தில் விளக்கு எரியும்.
சிவகுமாரின் அர்ப்பணிப்பும் கடமையுணர்வும் என்னைப் பெரிதும் கவர்ந்தது. ஆசிரியர் கூட்டத்தில் கூட இதனை நான் எடுத்துக் கூறியுள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காலத்தின் கொடுமை. நான் நைஜீரியா சென்று கனடா வந்தேன்.சிவகுமார் ஜெர்மனியில் குடியேறினார்.நாம் மீண்டும் 1995ல் ஜெர்மனியில் சந்தித்தோம். எமது நாட்டின் போர் எத்தனை எத்தனை அறிவு ஜீவிகளை நாட்டை விட்டு அகல வைத்துள்ளது என எண்ணினேன். நாட்டு நிலை சுயமாக இருந்தாலும் கூட ஒரு சில தொழிற்நிறத்தோர் ( professionals) நாட்டைவிட்டுச் சென்றிருப்பர் என்பது உண்மையே. ஆனால் சிவகுமாரன் நிச்சயமாக அங்கு வாழ்ந்தேயிருப்பார் என அடித்துக் கூறுவேன்.அவர் போன்ற பெரும் கலைஞர் நாட்டை விட்டு வெளியேறியது ஈடு செய்ய முடியாத பேரிழப்பு என்றே நான் கருதுகிறேன். இது சத்தியம் நிறைந்த உண்மை.ஈழத்தின் இழப்பு ஜெர்மனியின் ஆதாயம் ஆனது.
ஜேர்மனி சென்ற சிவகுமாரன் அங்கே சும்மாயிருக்க வில்லை. தன்திறமையை வளர்த்தார். மற்றையோரும் மெச்சும்படி சாதனைகள் செய்தார். வள்ளுவன் தெரியாமலா சொன்னான்,

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

( குறள் -396)

தோண்டத் தோண்ட ஊற்றுநீர் கிடைப்பது போலத் தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும்.
பொதுவாகவே புகலிட நாடுகளிலே எம்மவர்களுக்குக் கிடைக்கும் முதல் தொழில் தொழிற்சாலை உதவியாளர் பதவிதானே.அதுவே தான் சிவகுமாரனுக்கும் கிடைத்தது. ஆனால் மிக விரைவிலேயே அவர்மேதாவிலாசத்தை நிரிவாகம் உணரக் கூடிய முறையில் சிவகுமாரன் செயற்பட்டார். புலமை என்பது வெறும் நூல்களைக் கற்பதால் மாத்திரம் பெறுவ தில்லை. நூல்களைக் கற்பதால் ஆரம்ப அறிவு ஏற்படுகிறது. அந்த அறிவுடன், பெற்ற அனுபவம், அவதானம், செயற்திறன் இவை
யாவற்றுடன் சிந்தனைத் திறன் சேரும் பொழுதுதான் வித்து வம் துலங்குகிறது. இதனையே வள்ளுவன் தோண்டத், தோண்ட என்பதற்கு உவமானமாக்கினான்.ஒரு கலைஞனுக்கோ சிந்த னைத்திறன் வாய்க்காவிட்டால் பரிணமிக்கவே முடியாது.
சிவகுமாரன் வேலைக்குச் சேர்ந்த தொழிற்சாலை BMW மற்றும் Mercedes Benz எனும் பிரபல கார் தயாரிப்பு நிறுவனங்களுக்கு மின் உதிரிப் பாகங்கள் செய்து கொடுப்பவர்கள்.
நிறுவன முதலாளியின் ஐம்பதாவது பிறந்த தினம் வரவிருந்தது. அதைச்சிறப்பாகக் கொண்டாட ஊழியர்கள் திட்டமிட்டனர். சிவகுமாரின் கவிதை உள்ளம் தீவிரமாச் சிந்தித்தது. ஏதாயினும் வித்தியாசமான முறையிலே செய்ய வேண்டும் என மனம் கங்கணம் கட்டி நின்றது. தொழிற் சாலையில் அங்கும் இங்கும் இறைந்து கிடந்த உடைந்த உதிரிப் பாகங்கள் அவர்கண்களில் பட்டன. கவிஞனின் கற்பனை கொடிகட்டிப் பறந்தது. இப்படிச் செய்தால் என்ன? என மனம் ஒரு தீர்மானம் எடுத்தது. அடுத்த சில நாட்கள் சிவகுமாரன் உணவை விடுத்தார். உறக்கத்தை நீத்தார், உலகையே மறந்தார். அவர் எண்ணம் செயலப்பட்டது. நிறுவனரின் பிறந்த தினத்தன்று அவருக்கு உதிரிப் பாகங்களால் முழுமையாக உருவாக்கப் பட்ட ஒரு அற்புதமான சிலை பரிசளிக்கப் பட்டது. சிலை ஒரு பெண். ஒருமீற்றர் உயரம். தொழிற்சாலையில் 89 % பெண்கள் வேலை செய்கின்றனர் .அவர்களின் உழைப்பினை எடுத்துக் காட்டு முகமாகவே சிலை பெண்ணாக உருப்பெற்றது.ஓவியன் சிற்பியாக உருமாற்றம் பெற்று நின்றான். அவன் படைப்பு "அற்புதம்" என வியக்கப் பட்டது. இத்தகைய முயற்சி ஒன்றினை இதுநாள் வரை எவரும் முனைந்ததில்லை எனப் போற்றினர் .அது தொழிற்சாலையின் முற்கூடத்தில் கண்ணாடிப் பேழையில் வைக்கப் பட்டு அங்கு வருவோர் பார்வைக்கு சிவகுமாரனின் புலமைக்கு எடுத்துக் காட்டாய்ப் பட்டொழி பரப்பி நிற்கிறது. எதை எடுத்தாலும் அதனை அர்ப்பணிப்பு ஈடுபாட்டுடன் செய்யும் சிவகுமாரன் ஆறு முகத்தனாய் எனக்குக் காட்சி தருகிறார்.சிவகுமாரன் அல்லவா? பின் எப்படி இருப்பார். ஓவியனாய், சிற்பியாய் அடைந்த புகழுக்கு ஈடாக பத்திரிகை யாளனாய், கவிஞனாய், சிறுகதை எழுத்தாளனாய், கட்டுரை யாளனாய் பரிணமிக்கிறார். தந்தை தொடங்கிய "வெற்றிமணியை" ஜெர்மனியில் தொடர்ந்து பிரசுரித்து அகிலமெல்லாம் அதனை வெற்றிநடை போடவைத்தமை, "இவன் தந்தை எனநோற்றான் கொல்" எனச் சொல்ல வைக்கிறது

உரை முடிவு காணான் இளமையோன் என்ற
நரை முது மக்கள் உவப்ப- நரை முடித்துச்
சொல்லால் முறை செய்தான் சோழன் கலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.

என்கிறது பழைய பாடல் ஒன்று. அதன் படிக்கு குல வித்தை கற்காமலேயே கை வரப் பெறுமாம். தந்தையைப் போன்ற சீரிய நோக்கு தனயனுக்கும் ஏற்பட்டதில் வியப்பில்லை! குரும்பசிட்டி எனும் பொதிகையில் உருவாகி யாழ்ப்பாணம் எங்கும் பாய்ந்தோடி ஈழத்தின் ஏனைய பகுதிகளுக்கும் சென்றோடிய கங்கையை சிவகுமாரன் எனும் பகீரதன் ஜெர்மனிக்கு தன் தவ வலிமையால்க் கொண்டு வந்துவிட்டான். வெற்றிமணி இப்போ காட்டாற்றுப் பிரவாகத்துடன் ஐரோப்பா, கனடா எல்லாம் பாய்ந்து செல்கிறது கண் கொள்ளாக் காட்சி. மீண்டும் அது ஈழத்தின் வீடுகளை அலங்கரிப்பதைக் காண அமரர் சுப்பிரமணியம் விண்ணில் இருந்து மண்ணுக்கு வந்தார் என்றால் அதன் அழகைக் கண்டு விண்ணுக்கும் அனுப்புமாறு விண்ணப்பிப்பார் என்பது உறுதி.
சிவகுமாரன் சிறுகதை எழுதத் தெரிந்த முகம் "மாதவி". 1971ல் அவரது குறு நாவல் " ஒரே ஒரு தெய்வம்" எனும் தலைப்பில் வெளி வந்தது. 29 ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் " இடைவெளி" எனும் சிறுகதைத் தொகுதி வெளி வந்துள்ளது." விவேகம் மிகுந்த கதைகளுக்கு எமது நாட்டில் எஸ்.பொ.வும், தமிழ் நாட்டில் சுஜாதாவும் பெயர் பெற்றவர்கள்."என்றும் மாதவி" என்ற சிறுகதையில் சிவகுமாரனின் விவேகம் உச்சத்தில் நிற்கிறது. திட்டமிடப்பட்ட உத்திமுறையில் உயர்ந்து நிற்கும் இக்கதை சிவகுமாரன் ஒரு தலைசிறந்த கதாசிரியர் என்பதைத் தமிழ் உலகத்துக்கு என்றென்றும் கூறிக்கொண்டேயிருக்கப் போகிறது என்பது நிச்சயம்" எனக் கவிநாயகர் கந்தவனம் அவர்கள் "இடைவெளி" தொகுதிக்கு எழுதிய மதிப்புரையில் குறிப்பிட்டுள்ளார். இது போதும். நான் சொல்ல என்ன உள்ளது.
கவிதைக்கு சிவகுமாரன் கண்ட முகம் " நிலாமகள்". அவரின் " தமிழே காதல்" அண்மையில் வெளிவந்துள்ளது.அட்டகாசமான படைப்பு. இதுநாள்வரை தமிழில் வந்த கவிதைத் தொகுப்புகளில் எழிலார்ந்ததாக இரு ஆண்டுகட்கு முன் வெளிவந்த ரா. பார்த்திபனின் " கிறுக்கல்கள்" நூலினைச் சொல்வார்கள்.அது எந்த மூலைக்கு என நிலாமகள் சொல்ல வைத்து விட்டது." சித்திரத் தமிழிற்கு முத்தாரம் இடும் நிலாமகளின் காதல் கவிகள் காலத்தால் அழியாதவை" என்கிறார் செ. அசோகமூர்த்தி. ஆம் சிறு, சிறு கவிதைகள். அவைசொல்லும் செய்திகளோ ஏராளம், ஏராளம்.
சிவகுமாரன் ஓவியம் வரையப் புகுந்த முகம் " கண்ணா".நம்மூர் மாணவர்கள் மாத்திரமல்ல ஜெர்மன் இளைஞர்களுமே ஆவலுடன் அவரிடம் பாடம் கேட்க ஆவலுடன் ஓடிவருகிறார்கள். அவரின் புதுமை ஓவியங்கள் பரவசப் படுத்தும் திறனுடையவை. "வெற்றி மணி"யின் வெற்றிக்கும் "தமிழே காதல்" காட்டி நிற்கும் எழிலார் தோற்றத்திற்கும் கண்ணா காரணராகிறார். "கண்ணாவின் சித்திரத்தில் பரதத்தின் அபிநயங்களையும் அவர் தமிழில் நிலாமகளின் அழகையும் காண்கிறேன;"என்கிறார் புகழ் பெற்ற பரதநாட்டிய வித்தகி பரதமாதேவி வானதி தேசிங்குராஜா அவர்கள். சிவகுமாரன் ஏற்கனவே பட்டங்கள் பல பெற்றுள்ளார்.யாவும் அவர் திறமைகளுக்காகக் கொடுக்கப் பட்டவை. அரிசோனாவில் உள்ள உலகப் பல்கலைக் கழகம் இப்பொழுது அவரைக் கலாநிதி என அழைத்து தன்கௌரவத்தை உயர்த்தி உள்ளது. எத்துறைக்கு அவரைக் கௌரவிக்கலாம் என்ற சிக்கல் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம். எனவே பொதுவாகக் கலைத்துறை என அழைத்து விட்டனர் போலும்.



யேர்மன் ஆரம்பப்பாடசாலையில் சிறவர்களுடன் சித்திரம் பேசுகிறது

குரும்பசிட்டி பெயரளவில் சிறு கிராமம் ஆனால் பெயர் பெற்ற கிராமம். ஈழகேசரி பொன்னையா, மகாஉபாத்தியாயர் கணேசய்யா,போன்றோர் அவதரித்த புண்ணிய பூமி. அக்கிராமத்தின் முடியில் சிவகுமாரன் இன்னோர் இறக்கை சூட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியம் மட்டும் வரையவில்லை சாதனைகளையும் வரைகின்றார்!

**கலாநிதி கவிஞர் வி.கந்தவனம்**

கனடிய தமிழ் உலகத்திற்கு முக்கியமாக பத்திரிகை, இலக்கிய உலகத்திற்கு சிவகுமாரனைத் தெரியாமல் இருக்கமுடியாது. அவரது வெற்றிமணிப் பத்திரிகை மாதந்தோறும் கனடாவிலும் விநியோகிக்கப்பட்டுவருகிறது.

யேர்மனியில் மிகவும் பிரபலமான தமிழர், கலைஞர் திரு. சிவகுமாரன் அவர்கள். ஓவியக் கலை அவரது உயிர்க் கலை. குறிப்பாக ஓவியம் சிற்பம் சார்ந்த நுண்கலைத்துறைக்கும் சிறப்பாக அவரது கலைச்சேவைக்கும் கௌரவம் அளிக்கும் வகையில் அமெரிக்காவில் உள்ள உலகப் பல்கலைக்கழகம் அவருக்கு கலாநிதிப்பட்டம் வழங்கியிருக்கிறது.

கலாநிதி மு. க. சு. சிவகுமாரன் அவர்கள் ஈழகேசரி நா. பொன்னையா பிறந்த குரும்பசிட்டியில் பாடசாலை அதிபரும் வெற்றிமணி ஆசிரியருமாகிய திரு. மு. க. சுப்பிரமணியம் அவர்களின் மூத்த மகன் ஆவார். மகாஜனாக்கல்லூரியில் படித்து இலங்கைப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைத்துறையில் B. F. A பட்டமும் பெற்றவர்.

சிவகுமாரன் ஓவியங்களை மட்டும் வரையவில்லை. சாதனைச் சரித்திரங்களையும் வரைந்து கொண்டிருக்கிறார். இவர் படிக்கும் காலத்தில் மகாஜனாக் கல்லூரி வகுப்பறை ஒன்றில் வரைந்த ஓவியம் ஒன்று கல்லூரி கண்ட சேதங்களின் மத்தியிலும் சிதைவுறாது இன்றும் அப்படியே இருக்கின்றது. யேர்மனியில் இவர் வைத்த ஓவிய சிற்ப காட்சிகளை விதந்து யேர்மன் பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன.

பத்திரிகை ஒன்று நடத்திய ஓவியப் போட்டியில் முதற் பரிசும் பெற்றிருக்கிறார். உலகத் தமிழர் இயக்கத்தால் நடத்தப்படும் பாடசாலைகளில் ஓவியத்தைக் கற்பித்துப் பல ஓவியர்களை உருவாக்கியிருக்கிறார். இவர் உலகத்தமிழ் இயக்கத்திற்கு ஆக்கிக் கொடுத்த வண்ணப்படப் பயிற்சிப் புத்தகம் தமிழ் கூறும் நல்லுலகத்திற் பெரு வரவேற்பைப் பெற்றிருக்கின்றது.

இவர் சிறந்ததோர் எழுத்தாளரும் கூட. கட்டுரை, கவிதை, சிறுகதை ஆகிய துறைகளில் தனது தனித்துவச் சிந்தனையை நிலைநாட்டிவருகின்றார். 1971 ம் ஆண்டிலேயே அதாவது இவரது பத்தொன்பதாவது வயதிலேயே இவரது முதற் சிறுகதைத் தொகுதி தாயகத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் யேர்மனியில் இடைவெளி என்ற பெயரில் மற்றுமொரு சிறுகதைத்தொகுதி வெளிவந்துள்ளது. தமிழே காதல் என்பது இவரது கவிதைத் தொகுதி.



**1999 கனடா - குரும்பசிட்டி நலன் புரிசபை நடாத்திய விருந்துபசாரத்தில்**

தந்தையார் அமரர் திரு. மு. க. சுப்பிரமணியம் அவர்கள் நடத்திய வெற்றிமணி என்னும் மாத இதழை வித்தியாசமான முறையில் காலத்திற்கேற்ற கோலத்துடன் யேர்மனியில் வெளியிட்டு வருகின்றார். இது பிற ஐரோப்பிய நாடுகளிலும் கனடா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளிலும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. யேர்மனியில் இவருக்கு உரிய கௌரவங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. கனடாவில் தமிழர் தகவலும் இவரைக் கௌரவித்து விருது வழங்கியிருக்கின்றது. அதனைத் தொடர்ந்து கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையமும் இவரைக் கௌரவித்து -ஓவியக்கலைவேள்- என்ற பட்டத்தையும் சூட்டியது. குரும்பசிட்டி நலன்புரிசபையும் இவருக்கு விருந்துபசாரக் கூட்டம் ஒன்றை நடத்தியது. இரண்டு ஆண்டுகள் கழித்து எழுத்தாளர் இணையம் இவரது -இடைவெளி- என்ற சிறுகதைத்தொகுதிக்கு ஓர் அறிமுகக் கூட்டமும் வைத்தது.



**பிலபெல்ட் தமிழாலயத்தில்**
**சித்திரவகுப்பு மாணவர்களுடன்..1999**

இன்றும் திரு. சிவகுமாரன் அவர்கள் குரும்பசிட்டி நலன்புரி சபை, தமிழர் தகவல், எழுத்தாளர் ஒன்றியம், உதயன் பத்திரிகை, மகாஜனாக்கல்லூரி, கீதவாணி போன்ற அமைப்புக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு நல்லுறவை வளர்த்து வருவதுடன் இங்கு நடைபெறும் நிகழ்ச்சிகள் தொடர்பான செய்திகளைத் தமது பத்திரிகையில் வெளியிட்டுவருகின்றார். தமிழர் எங்கிருந்தாலும் வாழவேண்டும். தமிழ்க்கலைகள் வளரவேண்டும் என்னும் நல்லெண்ணத்துடன் உழைத்துவரும் இக்கலைஞரைக் கௌரவித்து உலகப் பல்கலைக்கழகம் பெருமை பெற்றதையிட்டு நாமும் மகிழ்வடைந்து பட்டம் பெற்றவரையும் பட்டம் வழங்கிய பல்கலைக்கழகத்தையும் வாழ்த்துவோமாக!

## சொடுக்கியால் (Maus) வரைந்த கண்ணாவின் கணனி ஓவியம்!



# தமிழ்த் தாய்க்குப் பெருமை!

**குரு அரவிந்தன் - கனடா.**

அருமை நண்பர் கலாநிதி சிவகுமாரன் அவர்களுக்கு வணக்கம்!

கணினியை உயிர்ப்பித்து மின்னஞ்சலுக்குள் நுழைந்ததும் நீங்கள் அனுப்பிய அந்த இனிய செய்திதான் முதலில் என் கண்ணில் பட்டது.

உங்களுக்குக் கிடைத்த இந்த (கவின் கலையில்) "கலாநிதி" என்னும் கௌரவம் தமிழ் இனத்திற்கே கிடைத்த கௌரவம் போன்று கனடாவில் இருக்கும் எங்களுக்கும் பெருமையாக இருக்கின்றது. ஈன்றபொழுதிலும் பெரிதுவப்பாள் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய் உங்கள் தாய் மட்டுமல்ல தமிழ்த்தாயே இன்று உங்கள் சாதனையை நினைத்துப் பெருமைப் படுகிறாள். இத்தனை காலமாய் சொந்த விருப்பு வெறுப்புக்களை எல்லாம் மறந்து நீங்கள் எங்கள் இனத்தின் மேம்பாட்டிற்காக உழைத்த உழைப்பிற்கு இன்றுதான் நல்ல பலன் கிடைத் திருக்கின்றது. இந்த உழைப்பும் நீங்கள் தமிழ் மீது வைத்திருக்கும் அளவற்ற பற்றும் இதுபோன்று காலமெல்லாம் தொடரவேண்டும் என்று மனதார வாழ்த்துகிறேன். தாங்களும் தங்கள் குடும்பமும் நீடூழி வாழ்கவென எனது குடும்பத்தின் சார்பில் மீண்டும் வாழ்த்தி வணங்கி விடைபெறுகிறேன்.

வாழ்க! வளர்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படைப்பில் சர்வதேச நேர்த்தி! நடையில் செந்தமிழின் அழகு!!!

மணிமேகலைப் பிரசுரம்
நிர்வாக இயக்குநர்
மணிமேகலைப்பிரசுரம்
7 தணிகாசலம் சாலை
தியாகராய நகர்
சென்னை -600 017

**ரவி தமிழ்வாணன்**

வணக்கம் வாழிய நலம்

கடந்த 5 ஆண்டுகளாக எங்கள் மணிமேகலைப் பிரசுரத்தில் புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் நூறுக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டிருக்கிறோம். இதன்காரணமாக புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழரைக்காண்பதற்காகவும், இப் புத்தகங்களை அறிமுகப் படுத்துவதற்காகவும் பல்வேறு நாடுகளுக்கு பலமுறை சென்று வந்திருக்கிறேன். இந்நாடுகளுள் ஜெர்மனியும் ஒன்று.

14. 04. 02அன்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய ஊர்களுக்கும் சென்று வந்தேன். எனவே ஈழத் தமிழர்களோடு நெருங்கிய பரிச்சயம் எப்போதும் உண்டு.

இந்த வகையில் திரு. சிவகுமாரனுக்கு கிடைத்திருக்கும் இந்த கௌரவம் பெருமையை அளிக்கிறது. திரு. சிவகுமாரன் ஒரு பேராளர், அறிவாளர் மட்டுமன்று பல்துறை வல்லுநரும் கூட. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இவர் செய்துவரும் சாதனைகள் பலப்பல. அறுபத்து நான்கு கலைகளுக்கும் அதிகலையாக விளங்கும் ஓவியக் கலைக்கு உயிரூட்டிவருகிறார். வெற்றிமணி பத்திரிகை மூலம் செந்தமிழுக்கு சிறந்த தொண்டாற்றி வருவதோடு சிற்பக் கலையிலும் தனது சிந்தையைச் செலுத்திச் சிறப்புச் செய்து வருகிறார். எனவே உலகப் பல்கலைக்கழகம் இவருக்கு கவின் கலையின் கலாநிதி என்னும் கௌரவப் பட்டம் கொடுத்து சிறப்பித்திருப்பது மிகவும் பொருத்தமானதே!

வெற்றிமணியின் பல இதழ்களை நான் படித்திருக்கிறேன். விஷயம்மட்டுமல்ல அச்சும், தாளும் சர்வதேச நேர்த்தி. கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என்று கலைமகளே கவலையுடன் கையில் ஏட்டைவைத்து எப்போதும் படித்துக் கொண்டிருப்பதாக ஔவை மூதாட்டி குறிப்பிடுகின்றார். அந்த கலைமகளே பார்த்துப் பெருமைப்படும் வண்ணம் தனது கல்வித்திறனையும், கலைப் பெருமையையும் உலகறியச் செய்து வரும் திரு. சிவகுமாரன் அவர்களுக்கு கவின் கலையின் கலாநிதி என்னும் கௌரவ பட்டத்தை உலகப் பல்கலைக் கழகம் வழங்கிய நிலையில் அவருக்காக ஒரு சிறப்பு மலரினை வெளியிடுவது சிந்தையை நிறைப்பதாக உள்ளது.

சிவகுமாரின் சீரிய கலைப் பணிகள் செகந்தோறும் பரவி, மேலும் மேலும் மக்களுக்குப் பயன்பட வேண்டும் என மனம் நிறைய இன்னும் பெருமைகளைப் பெற வாழ்த்துகிறேன்.

அன்புடன்
**ரவி தமிழ்வாணன்**



# எழில் சித்திரத்தை வாழ்த்தும் வரிகள்

கண்ணனுக்கு கலாநிதி ஓவியக்
கலைவேளுக்கு கலாநிதி வியன்
கலைவித்தகருக்கு கலாநிதி ஞான
கலைமணிக்கு கலாநிதி பல்
கலைச் செல்வருக்கு கலாநிதி தமிழே
காதல், இடைவெளிக்கு கலாநிதி உலகவெற்றி
மணி நிலாமகள், மாதவிக்கு கலாநிதி யேர்மனியில்
மகாஜனமாணவனுக்கு கலாநிதி தெல்லி
மகாஜன ஆசானுக்கு கலாநிதி குரும்பசிட்டி
மண்ணின் மைந்தனுக்கு கலாநிதி சுப்பிர
மணியன் மகனுக்கு கலாநிதி ஜெயபவானி
மங்கை மணாளனுக்கு கலாநிதி உலகப்பல்
கலைக்கழகம் அரிசோனா கலாநிதி கௌரவம்
கவிஞன் சிவகுமாருக்கு **கலாநிதி கதிர்துரை**
**காதோடுகாதாக கனடாவில்** இருந்து

**கதிர் துரைசிங்கம் கனடா**



# ஏற்ற நம் ஈழம் தந்த எழில் சிவகுமாரன் வாழி

**இளங்கம்பன் (தமிழ்நாடு)**

சீர்மிகு சிவகுமாரன்
செந்தமிழ் போல் வாழ்க!
ஈழத்தில் கற்கும் போதே
இதயத்தில் ஒளியைக் கொண்டே
ஆழமார் திறனைப் பெற்றே
அனைத்திலும் முதன்மை கொண்டோன்
வாழ்நிலம் மாறினாலும்
வனப்புறு தாய் மண்ணிற்குச்
சூழ்புகழ் சேர்க்கும் இந்தச்
சுந்தரக் கலைஞன் வாழ்க!

தந்தையின் வழியில் நின்றே
தமிழ்ப்பணி ஆற்று கின்றோன்
விந்தைசேர் கலைஞன் மற்றும்
வியப்புறு நூல்கள் ஆக்கி
தந்தவர் இதழுக் காசான்
தமிழ்க்கலை வளர்க்கும் பண்ணை
செந்தமிழ் ஒன்றே செப்பும்
உயிரென ஓதும் நண்பன்

ஓவியத் திறனால் போற்றும்
உயர்சிற்ப வளத்தினாலே
மேவிய புகழை இந்த
மேதினி எங்கும் பெற்றோன்
பாவியல் நலமும் பெற்றோன்
பகர் வெற்றிமணியின் ஆசான்
தேவியின் அருளைப் பெற்றே
திகழ்கின்ற அன்பின் ஆழி

புலம்பெயர்ந்தே வாழ்ந்தாலும்
புகழ்மிகு ஈழம் கொண்ட
நலமிகு ஒழுகலாற்றை
நாடோறும் போற்றி இங்கே
இலங்கிடும் இனிய நண்பன்
இணையிலா உழைப்பைக் கொண்டோன்
நிலைபெறும் புகழால் என்றன்
நெஞ்சத்தில் வாழும் அன்பன்.

கவின்கலை வரலாறதனில்
காணரும் மேதையாகி
புவிபுகழ் கழகத்தின் நல்
போற்றிடும் பட்டம் பெற்றே
செவிகளும் இனிக்கும் அந்தச்
செய்தியைத் தந்த செல்வன்
குவித்திடும் புகழோன் வாழி
குளிர் சிவகுமாரன் வாழி

மேற்கினைக் கலையால் வென்ற
மேதையை புகழ்ந்து நாமும்
போற்றியே புகழ வேண்டும்
புகலரும் கலை வளத்தில்
ஆற்றில் உயர்ந்தார் தம்மை
அவனியே போற்றுமன்றோ?
ஏற்ற நம் ஈழம் தந்த
எழில் சிவகுமாரன் வாழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஓவியக் கலைவேளும் கலைவிளக்கும்

1990ஆண்டு டோட்மூண்ட் நகரில் சிவகுமாரனின் சித்திர சிற்பக் கண்காட்சி இடம்பெற்றது. இக்கண் காட்சி யேர்மனியில் தமிழர் மத்தியில் இடம் பெற்ற முதலாவது கண்காட்சியாக அமைந்தபோதும், பெரும் திரளான யேர்மனியர்கள் இதனைக் கண்டு இரசித்தனர். டோட்மூண்ட் கரிதாஸ் நிறுவன அதிகாரி திருமதி மார்லீஸ் கார்மன் அவர்கள் காட்சியைத் திறந்துவைத்து தமிழர் கலைக்கு பெருமைசேர்த்தார். இந்த அரிய கண்காட்சி சிறப்பாக நடைபெற கலைவிளக்கு ஆசிரியர் திரு.சு.பாக்கியநாதன் அவர்கள் பெரிதும் துணை நின்றார். யேர்மனியர்கள் மத்தியில் தமிழர் கலைகளைச் சித்தரித்து நின்ற சிவகுமாரனை நம்மவர் பக்கம் பார்க்கவைத்த பெருமை திரு சு.பாக்கியநாதன் அவர்களுக்கும் உண்டு. அத்துடன் புதிய வடிவங்கள் என்னும் கண்காட்சிச் சிறப்பு மலர் ஒன்றும் அன்று வெளியிடப்பட்டது. இம்மலரே நேர்த்தியான அச்சுப்பதிப்பில் யேர்மனியில் வெளிவந்த முதலாவது வண்ணமலராகும். (1990 சித்திரை) இவர்களது கலைப்பாலம் பின்னர் பத்திரிகை வடிவத்துள்ளும் பிரவேசித்தது. 1993ம் ஆண்டு ஈழமணி என்னும் பத்திரிகையை மாதம் இருமுறை வெளியிடவும் வைத்தது. அதன் ஆசிரியராக திரு.மு.க.சு.சிவகுமாரனும், துணை யாசிரியராக திருமதி விக்னா பக்கியநாதன் அவர்களும் திகழ்ந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# தூரிகைச் சித்தரே வாழி!

'தமிழ்மணி' திருமதி விக்னா பாக்கியநாதன் B.A.



**1990 இல் டோட்மூண்ட் நகரில்**
**கரிதாஸ் மண்டபத்தில்**
**நடைபெற்ற சிவகுமாரனின்**
**சித்திர, சிற்பக் கண்காட்சியின் போது...**

ஓவியக் கலைதனை உடலிலோடும் உதிரமாக்கி - தம்
உள்ளக் கருத்தினை காட்சிப் படுத்துபவரே!
தாவியே அந்நிய நாடதிற் தஞ்சமடைந்த போதில் - எம்
தாகங்களுக் கில்லை கட்டுப்பாடு என்றே
மேவிய சிற்ப சித்திரங்கள் செதுக்கியும் தீட்டியும் - இம்
மக்கள் மனத்தோட்டமதில் ஓவியமலரானாயே
நாவினுக் கினிய நல்லுணவு வகைகள் போன்ற - நின்
நளினமான சிந்தனைத் தூரிகைக் கிறுக்கல்

அற்புதம் ததும்ப அனைத்தையும் கைக்குள்ளாக்கி - தனி
எழில் கக்கிடும் நின் நவீன ஓவியங்கள்!
சொற்கள் ஏதுமின்றியே சேதிகள் பல சொல்லும் - ஒரு
சீவனுள்ள ஓவியத்தால் பற்பல வியப்புகள்!
கற்கள் காகிதங்கள் மரங்கள் தகரங்கள் என்றவை - உம்
கரம் பட உறவாடிப் பேசும் பல கதைகள்!
சிற்பத்தில் நினது புரட்சிச் சிந்தனையை நுளைத்து - எமை
சிந்திக்க வைக்கும் கலைச் சித்தரே வாழி!

உலகப் பல்கலைக்கழகம் உனை உவந்தேற்றி - இன்று
ஓவிய நதிக்களித்த கௌரவம் கலாநிதி
பல்கலை வல்லுநராக புலத்தில் பல துறையிலே - பாதம்
பதித்த நின்பணிகள் தமிழுக்குச் சேமநிதி
புலத்தில் என்னூல் அழகுற அட்டைப்படம் போர்த்து - அதை
பதிய வைத்த நின்பணிக்கு ஒப்பு எந்த நிதி?
நிலப்பற்று நம்மொழிப் பற்று கலைப்பற்று தனையே - நிதம்
நினைவாக்கிய கர்மவீர ஓவியநதியே வாழி!

கனடாவிற் சிலநாள் பின் ஜேர்மனியிற் பலநாள் - என
காற்றைக் கிழித்துப் பறப்பதுவும் வருவதுவும்
என்னடா! இவருக்கு எப்படி எல்லாமே முடியும்?- என
அதிசயித்து அண்ணாந்து வாய்பிளந்து நிற்க
இன்றுதான் புரிந்த திந்தப் பல்கலைக்கழக விருது - இவர்
உயிர்க் கலைக்கு கௌரவம் கலாநிதி ஆகிட
நன்றா யளித்த விருதுடன் -தூரிகைச் சித்தர்- என - நாம்
நாமமளித்து விதந்தேற்றி வாழ்த்துகிறோம்! வாழி!

டோற்மூண்ட்- ஜேர்மனி
22. 03. 2003


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலமரத்து விழுதுகள்

செ. அசோகமூர்த்தி
(தலைவர் குரும்பசிட்டி நலன்புரிசபை -கனடா)

சித்திரமும் செந்தமிழும் ஆறாக ஓடும், அந்த குக்கிராமம் இன்று களபலி ஆக்கப்பட்டு இருந்தாலும் அக்கிராமத்தின் விழுதுகள் அலைகடல்களுக்கு அப்பாலும் ஆழமாக வேரூன்றி தளிர்விட்டு பிரகாசிக்கின்றன. ஆம்! அதுதான் குரும்பசிட்டி என்னும் மாதிரிக் கிராமம். இவ்வழகிய ஊரில் ஆசிரியர்களுக்குக் குறைவில்லை.ஆறடிக்கு ஒரு அசிரியர் வீடு இருக்கும். அங்குதான் கலைகள் சங்கமிக்கின்றன. 'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்' இச் செம்பாட்டு மண்ணிற்கு நூற்றுக்கு நூறு பொருந்தும். இச்சூழலில் உதிர்ந்த ஒரு ஆசிரிய, கலைக் குடும்பத்தின் வாரிசுதான் இன்று ஓவியத்துறையில் கலாநிதியாக உயர்ந்து நிற்கும் மு. க. சு. சிவகுமாரன் அவர்கள்.

**குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் வித்தியாசாலையின் 75ம் ஆண்டு நிறைவின்போது மு.க.சு.சிவகுமாரனின் சித்திர, சிற்பக்கண்காட்சி இடம் பெற்றது. வடமாநில சித்திர வித்தியாதரிசி கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்களும், இரசிகமணி கனக செந்திநாதன் அவர்களும் பார்வையிடுகின்றார்கள்.**



**சித்திர சிற்பக் கண்காட்சி 1975**

தூரிகையைத் தொட்டவுடன் ஓவியனின் உள்ளத்தில் ஆயிரம் அயிரம் கற்பனைகள் தடம்புரண்டு ஓடும். அதற்கு ஓவியன் உயிரூட்டுவான். அவனின் கற்பனைகளை முழுமையாக ஒருவராலும் கூறிவிடமுடியாது. அக்கலை வடிவங்களை கண்டு ரசிப்பவர்கள் கதைகள் ஆயிரம் சொல்வர். ஆனால் அவ் ஓவியன் மட்டும் அமைதியாக ரசித்துக் கொண்டே இருப்பான் அவனது எண்ணக் கருவூலங்கள் ஆலவிருட்சமாக வளர்ந்து கொண்டே இருக்கும். இந்த வகையில் ஒருபடி மேலே சென்று, ஓவியத்து உத்திகளை தமிழ் என்னும் கடலில் தவழவிட, சிவகுமாரன் போன்ற ஒரு சிலரால்தான் முடியும்.

கோடுகளும் கோலங்களிலும் நாம் கண்ட இலக்கிய சுவையை, நிலாமகளின் காதலில் நனைந்த கவித்துவத்தை, நேராகப் படம் பிடித்து ஓவியத்தில் காட்ட ஒருவரால் முடியும் என்றால் அது நிச்சயம் -மாதவி- என்னும் சிவகுமாரனால் தான்முடியும். அத்துடன் நில்லாது பத்திரிகைத் துறையிலும் (வெற்றிமணி) முத்திரை பதிக்க முடியுமா? இதற்கான பதிலை உங்களிடம் விட்டுவிடுகின்றேன்.

குரும்பசிட்டி சன்மார்க்க இளைஞர் சங்க வெளியீடான -சன்மார்க்க தீபம்- எனும் கையெழுத்துப் பத்திரிகையில் கால் பதித்து இன்று கலாநிதியாக வளர்ந்து நிற்கும் திரு. சிவகுமாரனுக்கு ஜேர்மனிவாழ் தமிழ் உள்ளங்கள் பெருவிழா எடுப்பது கண்டு நாம் பெருமிதம் அடைகின்றோம். பல்கலைச் செல்வர் பட்டம் பெறும் விழா பலநூறு கலைஞர்கள் உருவாக்க ஒரு களமாக அமையவேண்டும் என்பதே குரும்பசிட்டி நலன்புரிச் சபையினரின் பேராவலாகும்.

வாழ்க அவர் சேவை! வளர்க தமிழர்!

# ஒரு வாசகியின் வாழ்த்து!!!



கலைக்கு அதிபதியாக
கண்ணா எனும் பெயரில்
சிலைகளுக்கெலாம்
உயிர் கொடுத்தீர்.
பல்கலைச் செல்வருக்கு
உலகப்பல்கலைக்கழகமே
டாக்டர் பட்டம் கொடுத்து
கௌரவித்திருப்பதும்
தமிழர் எமக்கே
விருந்தாய் அணிகிறோம்.
முழுதாய் உம்பணி மூச்சில்
தமிழும் கலையும்
தளர்வில்லாது தவழ்கிறதே
உமது கரங்களிலே.
விழிகள் யாவும் வியப்பில்
பெருமைகள் யாவும் உமக்காய்
மேலும் பல சிறப்பு சேர்ந்திட
வாழிய வாழிய வளமுடன்

வாழ்த்துவது
**சுகந்தினி. சுதர்சன் -யேர்மனி**

# இறைவன் கொடுத்த வரம்



ஆயகலைகள் அறுபத்தி நான்கு. அதில் பல கலைகளையும் தன்ன கத்தே வைத்திருப்பார் சிவகுமாரன் என்று கூறினால் அது மிகை அல்ல. கலைஞர்கள் இப்புவியில் உருவாக்கப் படுபவர்கள் அல்ல. அவர்கள் தரணியில் பிரசவிக்கும் போதே இறைவன் கொடுத்த வாழ்த்தும், வரமும் ஆகும். அதனை நிறைவாகப் பெற்றவர் சிவகுமாரன்.

சிறுவயதிலேயே குரங்கு ஒன்றை நினைத்து ஆற்றங்கரை மண்ணை பிசைந்து உருவாக்கப் பார்த்தார் அது பிள்ளையார் உருவாக வந்தது. ஆனால் நாங்கள் பிள்ளையார் பிடித்தால் குரங்கு தான் வரும். சிற்பம் ஓவியக் கலைகளைப் படிக்குமுன்பே இவருக்கு இந்த ஞானம் கிடைத்துள்ளது. பிக்காசோ மற்றும் இந்தியாவின் ராஜா ரவிவர்மா போன்று, நமது தாயகத்தில் ஒரு ஓவியர் கண்டம் விட்டு கண்டம் தாண்டி பல சாதனை முத்திரைகளை பதிப்பதில் முதல்வராக இருக்கிறார்.

இவருக்கு ஓவியத்துக்கான கலாநிதி என்னும் கௌரவம் கிடைத்ததையிட்டு நாம் மகிழ் வடைகிறோம்.

-என்கடன் பணிசெய்து கிடப்பதே- என்று கலைவாழ்வில் வாழ்ந்துவரும் கலாநிதி சிவகுமாரனை வாழ்க வளர்க என வாழ்த்துகின்றோம்.

அன்புடன்
சிவகுருநாதன். சக்திவேல்
(யேர்மனி)

# கலை என்னும் கண்கள்

கலையும் கலாச்சாரமம் இரு கண்களாய்க்கொண்ட கண்ணா! ஒருவனைப்போல் ஏழுபேரைப்படைக்கும் பிரமனே உனக்குக் கீழே! ஏனெனில் ஒரு ஓவியத்தில் வரைந்த கோடுகள் இன்னொரு ஓவியத்தில் கூடும் அல்லது குறையும். ஈருடல் ஓருயிர் என்ற காதல் மொழியில் உயிர் என்னும் மேலோங்கி நிற்பதுபோல் உங்களது கலையில் ஓவியம் என்றும் ஓங்கி நிலைத்து நிற்கும்.

தங்களுக்கு கலாநிதி என்னும் உயர் கௌரவம் கிடைத்ததையிட்டு ஈழத்தமிழராகிய நாம் மட்டற்ற மகிழ்ச் சியும், பெருமையும் கொள்கிறோம்.

நல்லாசியுடன்.
**திரு.திருமதி பரராசசேகரன்**
Lüdenscheid

## தேன் வந்து பாயுது காதினிலே!

ஓவியம் சிற்பம் இலக்கியம் என்று தன் அற்றலை வளப் படுத்திக்கொண்ட திரு.மு.க.சு.சிவகுமாரனுக்கு உலகப்ப பல்கலைக் கழகம் காலநிதி பட்டம் கொடுத்துக் கௌரவித்திருப்பது சாலப்பொருத்தமானதே. மேலும் அவர் எழுதி வெற்றிமணி பொன்விழாவில் அரங்கேற்றிய தேன்வந்து பாயுது காதினிலே என்ற நாடகம் மக்கள் மனதைத் தொட்டது. அந்த நாடகத்தில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்த நாங்கள், அந்த நினைவகளை அசை போடுகின்றபோது இன்றும் தேன்வந்து பாயுது நம் நெஞ்சினிலே. பல்கலைச்செல்வர் பல்லாண்டு சுகமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

அன்புடன்
**திரு.திருமதி செ.ராஜமனோகரன்.**
லூடின்சைட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்

**கந்தையா முருகதாசன்** ( ஆசிரியர், ஏலையா)

ஓவியக் கலைஞரும் வெற்றிமணிப் பத்திரிகையின் ஆசிரியருமான திரு. மு. க. சு. சிவகுமாரன் அவர்களுக்கு உலகப் பல்கலைக்கழகம் ஓவிய சிற்ப கலைக்கான கலாநிதிப் பட்டத்தைக் கொடுத்து கௌரவித்தமை எமக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது. 1988 ம் ஆண்டளவில் புதிய வடிவம் என்ற ஓவியம் தழுவிய சிற்பக் கண்காட்சி நடைபெற விருப்பதாகவும், அதற்கான விளம்பரத்தை ஏலையாவில் பிரசுரிக்குமாறு கலைவிளக்கு சஞ்சிகையாளர் அனுப்பிவைத்திருந்தனர். அக்கண் காட்சிக்கான விளம்பரத்தை மகிழ்வுடன் பிரசுரித்தோம். பயேன் மாநிலத்தில் கலைமணம் பரப்பிய கண்ணா என்றழைக்கப்படும் திரு. மு. க. சு. சிவகுமாரன் அவர்களை கலை இலக்கியப் பரப்பினில் யேர்மனனியில் வட மாநிலத்தில் முன் நிறுத்த பெரும் பங்கு வகித்தவர்களில் கலைவிளக்கு சஞ்சிகையாளர்கள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர்கள். ஓவியக் கலைஞர் திரு. மு. க. சு. சிவகுமாரன் அவர்களுக்கு கிடைத்த இக்கௌரவம் ஈழத்தமிழர்களுக்கும், அவர் பிறந்து வளர்ந்த குரும்பசிட்டிக் கிராமத்திற்கும், கல்வி கற்ற நமது மகாஜனாக் கல்லூரிக்கும், ஓவியக்கலையைக் கற்றுக் கொண்ட பல்கலைக் கழகத்துக்கும், புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும் கிடைத்த பெரும் கௌரவமாகும்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலான அவரது சிற்ப ஓவியக்கலைக்கூடான அனுபவமே இன்று அவருக்கு கலாநிதிப் பட்டத்தைப்பெற்றுக் கொடுத்துள்ளது:. சிந்தனைப் பரப்பு, தேடல் நோக்கிய கற்பனா சக்தி ஆகியவற்றை அவரது ஓவியங்களில் காணலாம். கோடுகளுக்குள்ளும், வர்ணங்களுக்குள்ளும் பலநூறு அர்த்தங்கள் பொதிந்திருக்கும். வெற்றிமணிப் பத்திரிகை என்கைக்குக் கிடைத்ததும் அதில் வரும் ஓவியங்களையே முதலில் பார்ப்பேன். சின்னஞ் சிறு ஓவியங்களுக்குள் கூட எத்தனையோ அர்த்தங்கள் பொதிந்திருக்கும். விளம்பரங்களை மனங் கொள்ளத்தக்க விதத்தில் அழகாக வடிவமைப்பவர். இத்தனை சிறப்புக்களைக் கொண்ட ஓவியக் கலைஞர் திரு மு. க. சு. சிவகுமாரன் அவர்களுக்கு கிடைத்த கௌரவத்தின் பெருமை உணர்ந்து, வரவேற்று, இறுமாந்து பாராட்டி ஏலையா மகிழ்வுடன் வாழ்த்துகின்றது.

இவருக்குக் கிடைக்கும் பாராட்டுக்கள் அவரது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் உரித்தானதாகும் கலாநிதி ஓவிய சிற்பக்கலைஞர் திரு. சிவகுமாரன் அவர்களின் ஆளுமையையும் ஆற்றலையும் வளர்த்தெடுப்பதற்கு உணர்வுகளின் உரிமைகளை மதித்து ஊக்கம் கொடுத்த அவரது மனைவி திருமதி ஜெயபவானி சிவகுமாரனை ஏலையா வணக்கத்துடன் பாராட்டுகின்றது:.

# போற்றுதலில் புளகாங்கிதமே



கவின் கலைக்கோர் கலாநிதி சிவகுமாரன்- உலக
பல்கலைக்கழக உருத்திட்ட சேதி தோதானதே,
வெற்றிமணி ஆசிரியர் இவர்கள் தமிழ்
பற்றுடன் பல்கலைப்பலம் பணி புரிபவர்!

வித்தகரை விரும்பியே விருந்தளிப்பவர்,
சற்று காலமாகவே அறியும் வாய்ப்புற்றேன்,
சொற்திறன் கைத்திறன் கலைத்திறன்
கொண்டதானதொரு ஆழுமை ஓவியர்!

காவியம் பேசும் ஓவியங்கள் கற்பித்து நிற்கும்
சீரியம் கண்டு நாம் வியந்ததுண்டு!
கவிதைக்கும் கதைக்கும் கட்டுரைக்குமாக
கற்பனையற்ற கைங்கரியம் பார்த்து இரசித்ததுண்டு!

கலைக்குமாக கல்விக்குமாக கலாச்சாரத்துக்குமாக
விலையற்ற பொன் பொழுதை வீண்டிக்கா நிமிர்த்தியவர்,
பல்கலைபடையலிட தன்பொருளை தத்துக்கொடுத்தவர்,
தளராது நிலத்திலும் புலத்திலும் தரங்கொண்ட கலைஞர்!

வெற்றிமணி மலரை விரிக்க தன்சத்தினைக் கரைத்து,
இலவசமாக இதழை வழங்கும் ஈகையாளர் இவர்,
ஈழ முத்தென முகிழும் முனைவராய் முளைத்திடவே
கவின் கலைக்கோர் கலாநிதியை போற்றலில் புளகாங்கிதமே!

**கவிதாமணி கோசல்யா சொர்ணலிங்கம்**
முல்கைம் ஜேர்மனி
சுண்டிக்குளி யாழ்,
14.04.2003

# ஞானக் கிறுக்கன்



பல்லோடு
பற்கள் போர் தொடுக்கும்
பனிப்பாறை தேசத்திலே ஒரு தமிழோவியன் ...

உதடோடு
உதடுகளை உச்சரிக்க வைத்த
நவீன மின்னல் கீற்றகன் ...

பனிக்குளிரிலே
உன் கரங்களும் தூரிகைகளும்
பேசிக்கொண்டன ...

வர்ணங்களும்
வளைகோடுகளும் உரசிக் கொண்டன ...

அழகை
தரிசித்த விழிகள்
அதை ஓவியத்திலே மொழிபெயர்த்தன .

வெண்ணை திருட வந்த கண்ணன் அல்ல
எம் கண்ணை திருட வந்த கண்ணன் இவன் ...

தூரிகைகள்
தவமிருக்கும் உன் தொடுதலிற்காய்
வர்ணங்கள் வரமிருக்கும் உன் வ(ர)ரைவுக்காய் ...?

மௌனம்
மொழி ஓவியங்கள்
மனதோடு முத்தமிடும்.
ஒரு
கலைஞனின் குறும்பும்
சிலவேளை எட்டிப் பார்க்கும்

இவர்
ஓவியங்களை கண்டு செல்கையிலே
என் கண்களை விட்டு விட்டுச் சென்றிருக்கின்றேன் ...?

எனக்குத்
தெரிந்த பிக்காசோ ...!
தமிழ் தெரிந்த டாவின்சி ...!

ஓவியம்
ஒரு பொதுமொழி
அந்த கனிய மொழி சொல்லும் பித்தன் இவன் .

இலக்கியங்களை பதிந்தான் ஒரு மாதவியாய்
கவிதைகளை விதைத்தான் நிலாமகளாய்
ஓவிய ரேகைகளை பொறித்தான் கண்ணனாய் ...

இன்னும்
பேச்சாளனாய் விமர்சகனாய்
தமிழ்த் தொண்டனாய் வெற்றிமணி ஆசிரியனாய்
காணுமிடமெல்லாம் நீக்க மறைவின்றி காண்கின்றேன் .

அந்த
தத்துவ ஞானியை
தந்த தாயையும் தந்தையையும்
வாழ்த்த நினைக்கிறது உள்ளம் .

அந்தப் பல்கலை வித்தகனுக்கு கலாநிதி விருது
கேட்கையிலே காது இனிக்கிறது
நெஞ்சம் மகிழ்கிறது
விருதுக்கு விருதா வியந்து பார்க்கிறேன் ...?

அவன்
தொண்டு தொடர
அந்த ஞானக்கிறுக்கனுக்கு
இந்தத் தமிழ் பித்தனின் வாழ்த்துக்கள்.

**மட்டுவில் ஞானக்குமாரன். (யேர்மனி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-முற்றத்து மல்லிகையும் மணக்கும்-

**ஈழவர் திரைக்கலை மன்றம் (ஜேர்மன் கிளை)**

Prasident
Kandiah Murugathasan
Bromberger Str 8 - 46145 Oberhausen
Tel: 0208607635
Sekretar Thambiah Rajan (Rasu) Tel: 04215796195- Treasurer Balasingam Balasubramaniam Tel:069 50839977

# வாழ்த்திப் பாராட்டுகின்றோம்

வெற்றிமணிப்பத்திரிகையின் ஆசிரியரும், நவீன தேடலை நோக்கிய ஓவியப் படைப்பாளியுமாகிய ஓவியக் கலைஞர் திரு. மு.க.சு.சிவகுமாரன் அவர்களுக்கு, அவரது ஓவியப் படைப்புக்களை ஆய்ந்தறிந்து உலகப் பல்கலைக் கழகம் அவருக்குக் கலாநிதி எனும் உயர் கௌரவ விருந்தளித்து கௌரவித்தமை கண்டு, எமது முற்றத்து மல்லிகை ஒன்று புகழ் பூத்து நிற்பதை அறிந்து, பெருமையுடன் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். அவருக்குக் கிடைத்த இக்கௌரவம் ஈழத் தமிழருக்கு கிடைத்த கௌரவமாகும். கலாநிதி ஓவியக் கலைஞர் திரு. மு. க.சு. சிவகுமாரன் அவர்களை மகிழ்ந்து வாழ்த்திப் பாராட்டுவதுடன் அவரின் ஆளுமையை வளர்த்தெடுக்க ஊக்கம் கொடுத்த அவரது குடும்பத்தினரையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

அன்புடன்

**தம்பையா இராஜன்**
செயலாளர்

**கந்தையா முருகதாசன்**
தலைவர்

## ஒலிக்கட்டும் வெற்றிமணி!

புலம் பெயர்ந்த ஜேர்மனிய மண்ணில் சமூகப்பணி செய்வது எவ்வளவு கடினம் என்பதை நன்கு அறிவேன். அதிலும் பத்திரிகையாளனாக இருப்பது சிரமம். பத்திரிகையாளனாக இருப்பது நெருப்பில் நடப்பது போன்றது என்றார் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார். இந்த மகத்தான பணியை ஆற்றும் அண்ணன் சிவகுமாரன் வாழ்த்தப்பட வேண்டியவர். கௌரவிக்கப்பட வேண்டியவர்.

அவருடைய அறிவு, உழைப்பு, சேவையின் நிமித்தம் கிடைக்கும் -கலாநிதி- பட்டம் இவரால் பெருமை கொள்கிறது.

ஒலிக்கட்டும் வெற்றிமணி!
தொடரட்டும் அவர் தமிழ்ப்பணி!
வாழ்க! பல்லாண்டு



தமிழன் வழிகாட்டி
**செந்தி**
கனடா

## கலாநிதியை வாழ்த்தி மகிழ்கிறோம்

பட்டதாரியாய் ஓவிய சிறப்ப கலைஞனாய்
புலம் பெயர்ந்தாலும் ஈழத்து வெற்றிமணியை
புலத்திலும் தமிழ்வாழ் மண் எங்கும் தித்திக்கும்
தமிழை வெற்றிமணி பத்திரிகையாய் வெளியிட்டு
தமிழுக்கு புகழ் சேர்க்கும் மு. க. சு. சிவகுமாரனை
உலகப் பல் கலைக்கழகம் கலாநிதி சிவகுமாரன்
என கௌரவித்ததையிட்டு தமிழீழத் தமிழ் மகனின்
பெருமையும் புகழும் கண்டு நாங்களும் வாழ்த்தி
மகிழ்கின்றோம்.

அன்புடன்,
**குமரன் ,சாந்தி குமரன்**
(பிறேமன்)

## நாடறிந்த படைப்பாளி.



கலையும் தமிழும் கனிப்பொருளாய் விளைந்து, தாயகம் முழுவதும் தமிழ் இலக்கியங்களை ஏற்றுமதி செய்து பல இலக்கிய வாதிகளால் புகழாரம் செய்யப்பட்ட கிராமம் எங்கள் குரும்பசிட்டி.

இந்த செம்மண்ணில் வாழ்ந்த செம்மல்கள் அனைவரும் ஒவ்வோர் துறையில் வல்லுநர்களாய் வாழுந்ததை நாம் அறிவோம். வானத்து விடிவெள்ளிகளாய் வாழ்ந்த எங்கள் வாழ்க்கையில் மழைகாலக் கருமேகங்கள் எம் கலைஒளியை மறைக்கத் தலைப்பட்டன. எனினும் நாம் தளரவில்லை, எம்கலைக் களத்தை விட்டே விரட்டியடித்தன.

நாலாபக்கமும் ஓடினோம் ஆனால் நாம் எம் பணியை விட்டு ஓயவில்லை. அதனால்தான் அகிலஉலகப் பல்கலைக்கழகங்கள் இன்று பட்டங்கள் தருகின்றன. அந்தவகையில் கலாநிதியாக இன்று வெளியேறுபவர் குரும்பசிட்டி மு. க. சு. சிவகுமாரன் ஆவார். இவரைப்பற்றி நான் அதிகம் கூறத்தேவையில்லை. ஏனென்றால் நான் அறிந்தவகையில் நாடறிந்தபடைப்பாளி. சிறியவர் முதல் பெரியவர் வரை அவரின் பாணியில் நகைச்சுவையுடன் நாசுக்காகத் தன் கருத்தைத் திணிப்பவர். பல ஆக்கங்களை பல புனைபெயர்களில் வெளியிட்டுள்ளார். எவ்விடர் வரினும் கைவிடேன் என வெற்றிமணிப் பத்திரிகையைத் தொடர்ந்து நடாத்தி வருபவர். சுருக்கமாகக் கூறினால் பல்கலையும் தெரிந்தவர். அதனால் தான் கனடா உதயன் பத்திரிகை இவரிற்கு -பல்கலைச் செல்வர்- எனப்பட்டமளித்து கௌரவித்துள்ளது. வாழ்க பல்லாண்டுகள்! வளமுடன் என்றும்

**குரும்பசிட்டி செ. சோ. கதிர்ச்செல்வன்**
( ஓயாத அலைகள் நாடக மன்றம் ஜேர்மனி)
(0049) 2311763754

## கலாநிதி. மு. க. சு. சிவகுமாரன் ஒரு கலைச்சோலை

மொழியில்லாத கலை, ஒரு இனத்தின் குறியீடாக அமைந்து விடுவதோடு, மண்வாசனையையும் கொண்டிருக்கும். தமிழரின் குருதியோடு கலந்துவிட்ட கலைகள் அவன் உருவாக்கும் கலைவடிவங்களிலும் ஓடும் என்பதற்குச் சிவகுமாரனின் சிந்தனைச் செல்வங்கள் சான்று பகரும்.



கலையைக் கணமும் சுவாசிக்கும் மு. க. சு. சி , உலகத்து எழிலை எல்லாம் வெளிக் கொணரும் ஓவியங்களைக் கால மென்னும் கடல் கடந்து நிலைத்து வாழவைத்த முருகுக் கலைமேதை - பிக்காசோ- பற்றிய சிந்தனைகளைத் தூண்டி நிற்கிறார்.

நூல்கள் பலகற்று நுட்பங்களைச் சாதனையாக்கும் கலைஞர்கள் உலகை வலம் வருவர் என்பது கண்கூடு.

பல்கலைகளையும் உள்வாங்கி காந்த மணம்வீசும் வரலாற்றுக் கோலங்களையும் கோடுகளையும் படைத்தளிக்கும் மு. க. சு. சி போன்றோரின் புகழ் தாய் மண்ணின் வாசம்போல் என்றும் மணம் பரப்பும்.


வாழ்க நுண்கலைகள்

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ் அல்லால்
பொன்றாது நிற்பது ஒன்றில
குறளமுது

**க.வை.தனேஸ்வரன்**
முன்னாள் பிரதி
அதிபர்(ஸ்ரான்லி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் வீடு மாறுகிறாள்.



மாதவி

இந்தப் பெரிய வீடு இருக்கு, குளிக்க சுடுதண்ணி, வெட்கை என்றால் குளிர் காற்று. குளிர் என்றால் வெட்பக் காற்று, வேலிப் பொட்டுக்குப் பதிலாய் இங்கு போன். அதுதான் தொலைபேசி. இதற்கு மேலேயும் எப்ப பார்த்தாலும் வீட்டை விட்டுவிட்டு வந்திட்டேன்! வீட்டை விட்டிட்டு வந்திட்டேன் என்ற ஒப்பாரிவேறு. எணே அம்மா! கொஞ்சம் காலத்தோடு அனுசரித்து போங்கோவேன். வீடு என்ன உயர் திணையா? அது அ்.திணைதானே ஏதோ உயிர் போல இங்குவந்து ஏழுவருடமாய் கட்டி அழுகிறியள் அதே நினைப்பில்.

இங்கு கிடைக்காத எந்த சுகத்தை அங்கே பெரிசா அனுபவித்துப் போட்டியள்.

எங்குபோவது என்றாலும் காலுக்கை காரும், பஸ்சும், நாரிக்குள் நோகுது என்று திரும்புவதற்கு முன்னே டாக்குத்தர் முன்னுக்கு நிற்பர். இப்படி என்னதான் குறை. வயசு இது எங்கு இருந்தாலும் போகும்தானே!." இவ்வளவும் மகள் கவிதா தன் தாய் மரகதத்திற்கு மனதை மாற்ற அடிக்கடி ஏற்றிய ஊசிகள்.

தன் தாயோடு பட்டிமன்றம் நடாத்திய அந்த பெரிய அறை அப்படியே அமைதியாக இருக்கிறது. குளிப்பாட்டிய அந்த குளியல் அறை வற்றிய தடாகம்போல் காட்சியளிக்கிறது. சிறிய சமையலுக்கும் ஏதோ தான் இல்லாவிட்டால் ஒன்றுமே இவளால் முடிக்க இயலாது என்று பக்கத்தில் இருமிக்கொண்டும் ஒரு நாள் முழுக்க இருந்து மூன்று வெங்காயம் நறுக்கும் தாயின் அந்தச் சின்னக் கத்தியும் மழுங்கிப்போய்க் கிடக்கிறது.

ஒவ்வொரு நாளும் திட்டமிட்டு ஒவ்வொரு பொருட்களாக கட்டிக்கட்டி ஒரு பெரிய பெட்டிக்குள் அடுக்கி புதுவீட்டுக்கு அனுப்பியாச்சு. எனக்கு அம்மாவின் நினைப்பை எந்தப்பெட்டிக்குள் கட்டுவது என்று தெரியவில்லை. அது என் நெஞ்சுக்குள் ஈரமாய்க் கசிந்துகொண்டிருந்தது. வேலையால் வந்ததும் எனக்கு எரிஞ்சு விழுவதற்கு முகம் கொடுத்து அமைதிகாத்து, என்ன பிள்ளை, தேத்தண்ணி ஊத்தித்தரட்டோ! என்று கேட்கும் அந்த விழிகளை அந்த மூக்குக் கண்ணாடிக்குள்ளேயும் பிரகாசமாய் காட்டுவாயே! அந்த விழிகளை.

ஏன் காலையில் பெரிய சோபாவில் திருநீற்றுப் பூச்சோடு அமர்ந்திருக்கும் என் அன்னை, என் வயதையும்,பாரத்தையும் மறந்து இரணை மடியில் என்று என்னைச் சுமந்து தாலாட்டும் அந்த நலிந்த கால்கள் உலா வந்த, இந்த வீட்டின் அறைகளை எப்படி நான் விட்டுச்செல்வது.

அது மட்டுமா அவரை முதல் முதல் இந்த வீட்டில் அல்லவா சந்தித்தேன். அந்தச்சந்திப்பு தித்திப்பாகி பூத்துக் கனிந்து இன்று நான்கு கனிகளுடன் தோப்பாக நான் மாறிய இல்லம் அல்லவா இந்த இல்லம். இதனை எப்படி நான் விட்டுச்செல்வேன்.

அம்மா! நீ எப்படி உன் வீட்டை விட்டுவிட்டு இருபது வருடங்கள் இருந்தாய் என்பதை இப்போது உணர்கிறேன். என் பிள்ளைகள் விளையாடிய அந்தப் பொம்மைகளையும், என் மகன் விவேக். அவனுக்கு அப்போ வாங்கிக்கொடுத்த மறு நிமிடமே நாலு சில்லையும் இழந்த, அவனது விளை யாட்டு ஜீப்பையும் நான் பொறுக்கிப் பொறுக்கி கட்டி அனுப்பிவிட்டேன்.

அப்படி என்றால் குத்தரிசி இடித்துக் கொண்டு இருந்த நீ, எப்படி அம்மா எல்லா வற்றையும் விட்டுவிட்டு அந்தச் செல்மழைக் குள்ளால் யாழ்ப்பாணத்தை விட்டு வன்னிக்கு ஓடி வந்த நீ.

அப்பாவின் படத்தைக் கூட எடுக்க முடியவில்லை என்று எத்தனை நாள் இங்கும் அழுதிருப்பாய்.

மூன்று மாதமாகத் திட்டமிட்டு ஒவ்வொரு பொருளாக நான் தேடித்தேடி எடுக்கும் போதே நினைவுகளும், அம்மாவோடு வாழ்ந்த உறவுகளும் நெஞ்சை இறுக்குமென்றால்,

தாயகத்தில் எங்கள் முற்றத்தை விட்டு ஓடிவரும்போது எவ்வளவு இறுக்கு இறுக்கியிருக்கும் உன் நெஞ்சை. இந்த வீட்டுக்கு கதை பல இருக்கும் என்றால், அம்மா நீ இழந்த வீட்டுக்கு ஒரு சரித்திரம் அல்லவா இருக்கும். எங்கள் அப்பா. அவர் அப்பா அதுதான் என் தாத்தா. எங்கள் முப்பாட்டன் வாழ்ந்த முற்றம் அல்லவா அது. வீட்டின் ஒவ்வொரு கல்லிலும் என்னுடைய மனுஷன் இருகிறார் என்று சொல்லும் போது புரியாத விளக்கம் இப்போது இந்த வாடை வீட்டைவிட்டு வீடு மாறும் போது புரிகிறதே! இறுதியாக சாமான்கள் எல்லாம் ஏற்றியாகிவிட்டது. வீட்டுத்திறப்பைக் கொடுப்பதற்கு முன் ஒருமுறை ஏதும் இருக்கா என்று பார்த்துவிட்டு வரும்படி அனுப்பியவர் என்னைக் காணாமல் கீழே நின்று மணியை அழுத்துகிறார். இப்போது தான் என் நினைவு திரும்ப நான் கதவைச் சாத்துகிறேன். வீடுமாறுகின்றேன். என் உயிர், இந்த உடல் என்னும் வீட்டைவிட்டுப் பிரிவது போன்ற ஒரு வலி. கதவு மீண்டும் திறக்கும் சத்தம்கேட்டு திரும்பிப் பார்க்கின்றேன்.அது வெறும் பிரமை. நான் வேலைக்கு செல்லும் போது நான் கதவைப் பூட்டினாலும் தான் மெல்லக் கதவைத் திறந்து நான் படிவரைக்கும் பாதுகாப்பாய் போகிறேனா என்று எட்டிப் பார்க்கும் அந்த விழிகள் அந்தக்கதவுக்குள் இல்லை. இந்த உலகுக்குள்ளும் இல்லை. என் உடலை நானே தடவிக் கொள்கின்றேன். என் உயிர் வாழ உடல் என்னும் வீட்டைக் கட்டித்தந்த என் அன்னை நினைவாக.

## வானவில்



சிறுகதை வர்ணம் 1

## 'வீடு' உயர்திணை!

வீடு என்பது கல்லாலும் மணலாலும் சேர்த்துக்கட்டிய கலவை அல்ல. அன்பு, பாசம்,நல்லறம்,என்னும் நற் பண்புகளால் கட்டப்பட்ட உயிர்க்கூடே உண்மை இல்லம். வீட்டுக்கு யன்னல் போன்று அறிவொளியை அனுபவத்தால் தருபவர்கள் முதியவர்கள், மலரைப் போன்று மணம் வீசுபவர்கள் மழலைகள். தூணைப் போன்று தாங்கி நிற்பவர்கள் தலைவனும் தலைவியும்.. எனவே வீட்டில் சடப்பொருளைத் தேடினாலும் கிடைக்காது. எனவே வீடு என்பது உயர்திணையாக அல்லவா இருக்க வேண்டும்.!.

# தமிழுக்கும், தமிழருக்கும் புகழ்தேடித்தருபவர்.

செல்வி யாமினி சர்வானந்தா

ஓவியத்தில் வல்லுனர், சிற்பக்கலையில் சிறந்தவர், எழுத்துக்கலையில் சுடரற்றவர், சிறந்த கலாரசிகன் நாட்டபிமானி, இரக்ககுணம் படைத்தவர், முதியோரை மதிப்பவர் அதேசமயம் இளையோரின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்பவர். காலத்திற்கேற்பவும், சூழலுக்கேற்பவும் இணைந்து வாழும் மனப்பக்குவத்துடன் தன்னை மாற்றிக் கொள்பவர். வெளிவேடமில்லாத உண்மையான தெய்வ பக்தியுள்ளவர். பெற்றொருக்கு நற்பெயர் தேடிக்கொடுத்தவர். மாமன் மாமிக்கு மகனாகவே மாறிவிட்டவர், நல்ல கணவன், சிறந்த தகப்பன், சிறந்த ஆசிரியர் அத்தோடு மட்டுமல்ல தமிழுக்கும் தமிழருக்கும் புகழ்தேடித்தருபவர். எல்லோரையும் மதித்து உதபுபவர். எம்மோடு இணைந்து இருக்கும் இவர்யார்? எம்மில் ஒருவர் பிறந்த மண்ணை மறவாத குரும்பசிட்டி தந்த கோமகன், நான் கண்ணன் மாமா என்று அன்புடன் அழைக்கும் ஓவியக்கலாநிதி திரு. மு. க. சு. சிவகுமாரன் B.F.A அவர்கள்.



ஓவியக்கலையில் மட்டும் இவருக்கு கலாநிதிப்பட்டம் கொடுக்கப்பட்டது போதாது. இவர் நன்கு அறிந்த ஏனைய கலைகளிலும் இவருக்கு கலாநிதிப்பட்டம் கிடைத்து, இவர் குடும்பத்துடன் எல்லா நலன்களும் பெற்று நீண்ட ஆயுளுடன் சுகதேகியாக வாழ்ந்து எம்மினத்திற்கு மேலும் புகழ் தேடித்தர எல்லாம்வல்ல எம்மீசன் அருள் புரிய வேண்டுமென்று இறைஞ்சி நிற்கும் இளையவள்

யாமினி சர்வானந்தன்
ஆனந்தநர்த்தனாலயம்
ஆர்ன்ஸ்பேர்க் யேர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கற்றுத் தெளிந்து
அனுபவப் பாடத்தைக்
கரைத்துக் குடித்து - பின்
முதுமையைக் கண்டதும்
ஒதுங்கிக் கொள்ளாதே

முழுமை பெற்ற
அறிவை
முடக்க முடிவல்லவே
முதுமை

பெற்ற அறிவை
விதைக்கத் தொடங்கும்
தொடக்க இளமையே
முதுமை

முத்தமிழே!
முதுமையே - உன்
இளமையின்
காதல் இரகசியம்

பூத்துக் காய்த்து
பழுத்து வீழ்ந்த
வித்தே - உனக்கு
அது முடிவல்ல
அதுவல்லவா தொடக்கம்



# வெளிநாட்டவர் மெச்சிடும் ஓவியர் எங்கள் கலாநிதி

**நகுலா சிவநாதன்** (ஆசிரியை)

புலம்பெயர் நாடுகளில் தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும், தமது கலை கலாச்சாரத்தை பாதுகாத்து வாழ்கின்றனர். இந்த வகையில் தமிழையும் கலாச்சாரத்தையும் தன்னிகரில்லாமல் வளர்த்து வரும் சிவகுமாரன் பாராட்டப்பட வேண்டியவர். இவர் பலவருடங்களாக புலம்பெயர்ந்து யேர்மனியில் வாழ்ந்து வருபவர். நவீன ஓவியங்களையும் நுட்பமான தன் திறமையினால் வடித்து அழகுற அமைக்கும் திறன் படைத்தவர். இவருடைய ஓவியங்கள் பல வெளிநாட்டவர்களால் போற்றப்பட்டவை. காலத்தால் அழியாத கவின்கலை நுட்பர் இவர். வெற்றிமணி பத்திரிகையை கடந்த பல வருடங்களாக நடாத்தி தமிழை வளர்க்கும் அருந் தொண்டரை, நல்லாசிரியரை நாம் போற்ற வேண்டும். இந்தவகையில் சிவகுமாரனின் திறமையை வியந்து உலக பல்கலைக்கழகம் கவின்கலைக்கோர் கலாநிதியாக கௌரவித்தமை மிகவும் வரவேற்க வேண்டியதொன்று. இப்படி உயர் விருதைப்பெறும் வெற்றிமணி ஆசிரியர் சிவகுமாரனை நானும் எமது குடும்பம் சார்பாக வாழ்த்துகின்றோம். இவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து கலைஇலக்கிய உலகிற்கு நல்ல சுடரொழியாக திகழ்ந்து நல்வாழ்வு வாழ வேண்டுமென இறைவனை வேண்டுகிறோம். வளர்க உங்கள் தமிழ்ப்பணி

# ஊர் அழிந்தாலும் ஊரோடு ஒட்டிய கலை அழியவில்லை!!!

**சுப்பையா சிவபாதம்** B.A, A.I.D

பிராந்திய முகாமையாளர்,

மக்கள் வங்கி,
வன்னி, வவுனியா
17.02.2003.



## இன்று மக்கள் இல்லாத மண்

முற்றும் முளுதாக சிவநெறி செம்பாட்டு மண்ணைக் கொண்ட எமது குரும்பசிட்டிக் கிராமம் எப்படி மண்வளம் சிறப்பாக இருந்ததோ அதே போன்று இயற்கை வளமும் கமத்தொழில், கைத்தொழில், சிறப்பும் கல்வி அறிவும் கலை, கலாச்சாரம் பண்பாட்டிலும் சிறந்து விளங்கியது. குறிப்பாக கலைத் துறையைப் பொறுத்தளவில் யாழ்பாணக் குடாநாட்டில் மிகவும் சிறப்பாக விளங்கிய ஒரு கிராமம் என்பதில் எந்த வித ஐயமும் இல்லை.

நாடகம், நாட்டியம், சங்கீதம், சித்திரம், சிற்பம், போன்ற துறைகளில் நாடு போற்றும் அளவிற்கு பல கலைஞர்கள் காலத்திற்கு காலம் கிராமம் உருவாக்கியது. சம காலத்தில் கலாபூஷைணம் எ.ரி பொன்னுத்துரை அவர்கள் நாடகத்துறையிலும், கலாநிதி கவிஞர் கந்தவனம் அவர்கள் இலக்கியத் துறையிலும், நாடகத் துறையிலும், சாரதா, பாரதா சகோதரிகள் கர்நாடக சங்கீதத்திலும், மறைந்த கலாகேசரி திரு தம்பித்துரை அவர்கள், மறைந்த மாமனிதர் கலை ஞானி தியாகன் அவர்களும் சித்திரம், சிற்பத்திலும் புலம் பெயர்ந்து இடம் பெயர்ந்தும், புலம் பெயராமலும் இருக்கும் பல நங்கையர்களின் நடன அரங்கேற்றங்கள் தொடர்ந்து கொண்டிருப்பதும் எமது ஊரின் பாரம்பரியத்தை வெளிப் படுத்துவதாக உள்ளன.

தொன்று தொட்டு இன்றுவரை இத்தகைய பலகலைகளை தன்னகத்தே அடக்கிய ஒரு கலைக் குடும்பமாக எமது செம்பாட்டு மண் மிகவும் மிடுக்காக இருந்ததென்பதை யாவரும் அறிவர். காலம் செய்த கோலம் நாம் எமது கிராமத்தை விட்டு இடம் பெயர நேரிட்டது. இதில் இடம் பெயர்ந்தும் புலம் பெயர்ந்த பலர் எமது ஊரின் தனித்துவமான கலை கலாச்சாரங்களை தொடர்ந்தும் பேணிப் பாதுகாத்திருப்பதும் எமக்குப் பெருமை அளிக்கிறது. சித்திர சிற்பக் கலைஞர் மு.க.சு சிவகுமாரன் அவர்களின் பணி மிகவும் போற்றத்தக்கதாகும். இவர் களனிப் பல்கலைக்கழக பட்டதாரியாக வெளியாகி தொடர்ந்து 25 வருடங்களுக்கு மேலாக தான் கற்ற கல்வியின் மூலம் தனது கிராமத்திற்கும் நாட்டிற்கும் மட்டுமன்றி தான் புலம் பெயர்ந்து சென்ற நாடான ஜேர்மனியிலும் தனது கலைத்தினை வெளிப்படுத்தி அதன் மூலம் அவருக்கு பல்கலைச் செல்வர், கலைஞான மணி, ஓவியக் கலைவேள் என்னும் பட்டங்களையும் பெற்றுக் கொண்டார். இன்று உலகப்பல்கலைக் கழகம் அவரது கவின் கலைச் சேவையைப் பாராட்டி ( cultural Doctorate in fine Arts) என்னும் உயர் கௌரவமான கலாநிதி என்னும் விருதினைக் கொடுத்து கௌரவித்தமை எமதூர் மக்கள் எல்லோருக்கும் பெருமையை அளிக்கிறது.

நாம் எமது கிராமத்தை விட்டு புலம் பெயர்ந்தாலும் எமது மக்களுடன் ஒட்டிய கலைத்திறனை யாராலும் அழிக்க முடியாது என்பதை திரு மு.க.சு. சிவகுமாரன் அவர்களுக்கு கிடைத்த கலாநிதி பட்டம் உறுதி அளித்துள்ளது.

அவரை இச்சந்தர்ப்பத்தில் குரும்ப சிட்டி சன்மார்க்க சபை சார்பிலும், தனிப்பட்ட முறையில் என் சார்பிலும் வாழ்த்துவதில் மகிழ்ச்சி யடைகிறேன். இறைவன் அவருக்கு நீண்டகால ஆயுளையும் அவரது கலைத்திறனை சிறந்த முறையில் வளர்க்க வழங்கப் பிரார்த்திப் போமாக.




புகைப்பட உதவி.
திரு செ.விக்னேஸ்வரன்-வீற்றன் யேர்மனி

குரும்பசிட்டி அம்மன் திருவீதியுலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையின் இசையில்
மலையே வளையும்-1989



ஈழத்தமிழன் வடித்த
முதலாவது
நகர மாதா சிற்பம்
Ludwigistadt 1981





யேர்மனியரை
உருகவைத்த
காதல்.
காதலுக்கும், கலைக்கும்
மொழியில்லை என
உணரவைத்த
காதல் ஓவியம்







தாயகத்தில் ஒரு இலக்கியச் சந்திப்பு 2002

கன்னிப்பெண்ணும்
கண்ணாடியும்
1990



நம்பிக்கைப் பொங்கல் 1996
(சர்வதேசப் பிரிவு வெளியீடு - நோர்வே)





மாறன் மணிக்கதைகள் வெளியீடு-சுவிஸ் 2000



வெற்றிமணி பொன்விழாவில்
டாக்டர் சீர்காழி.சிவசிதம்பரம் -2000

சஞ்ஜீவன் சிவகுமாரனின்
மெல்லிசைப் பேழை
வெற்றிமணி வெளியீடாக...
2000-யேர்மனி






ஓவியப் போட்டி -1997 யேர்மனி



கனடா 1999

எழுத்தாளர் இணையம் விருந்துபசாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் மறவர் 1992



வெற்றிமணியின்
ஓவியா வெளியீடு 1996



நாட்டுக்கூத்து வித்தகர்
திரு எலியாஸ்பிள்ளை அவர்களை
வெற்றிமணி கௌரவிப்பு




வானுயரப் புகழவைத்த
லுட்விக்ஸ்ரட் (Luwigistadt)
நகரதேவதையின் சிற்பம்
-யேர்மனி 1981



சிலைவடித்த
பிரம்மன்
சிவகுமாரன்
1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# படலை

தெருவால் போற,வாற சைக்கிள் சத்தத்தைவிட வேறு எந்தச் சத்தமும் சண்முகத்தாருக்கு காதில் விளவில்லை. தலைவாசலுக்கை அந்த சாய்மனைக் கதிரையில் தலை வைத்துப் படுத்திருந்தாலும் அவற்றை தலை அந்தப் படலைக்கைதான் கிடந்தது.
காலமை பத்துமணிக்கு கோயிலுக்கு போன மகன் இப்ப ஆறமணியாச்சு இன்னும் வரவில்லை என்ற ஏக்கத்தில் சண்முகத்தார் சஞ்சலத்துடன் சயனிக்கிறார். சண்முகத்தாரின் பெண்டாட்டி தலை வாசலுக்குப் பின்னாலை கிடக்கும் அந்தப் பத்திக்குள் சம்பல் இடிக்கிறாள். உலக்கையைத் தூக்கி உரலுக்குள் போடுற மூச்சையும் மிஞ்சி மகனைக் காணவில்லை என்ற ஏக்க மூச்சே பெரிதாக வந்து கொண்டிருந்தது. சண்முகத் தாருக்கு பொறுமை வறுமையாப் போச்சு சாய்மனைக் கதிரை யை விட்டு எழுகிறார்.

வள்ளிப்பிள்ளை:
சரி தலைவாசலுக்கை சரிந்துகிடந்த தலை நிமிந்திட்டுது இனி அவ்வளவுதான். தம்பிக்கு வழிக்குவழி சொல்லிவிட்டனான் அப்பர் யாழ்பாணத்தாலை வாறதுக்குமுன் வந்து சேந்திடடா எண்டு
ஆனா அவன் எங்கே! வாறான் (பெருமூச்சோடு) இண்டைக்கு இஞ்சை பிரளயம்தான் நடக்கப்போகுது. இவர் முந்தி இவன்ர வயசிலை ஆடாத ஆட்டமே! அதை எங்கை இந்தமனுஷன் நினைக்கப்போகுது.

சண்முகம்:
கொஞ்சம் பொறு! கொஞ்சம் பொறு! நான் உன்னை ஏதேனும் கேட்டனானே நீயா ஏன் புறுபுறக்கிறாய்! நீ உந்த உரலுக்கை என்ன சம்பலே இடிக்கிறாய்! என்னைத்தான் இடிக்கிறாய் எண்டு வடிவாத் தெரியும்.நீ விடுற மூச்சே அதைக் காட்டுதே.!
தாய்மார் பிள்ளைகளைத் தூக்கித் தலையில் வைக்கிற தாலைதான் பிள்ளையள் தலைகால் தெரியாமல் நடக்குதுகள்.

வள்ளிப்பிள்ளை:
சரிசரி உங்கடை கொம்மா உங்களை காலுக்கையே போட்டு மிதிச்சவ? நீங்கமட்டும் கோயிலுக்கே போனதில்லையே?

சண்முகம்.:
நான் போனனான்தான் இப்படி நேரம் கெட்டே வந்த நான்.?

வள்ளி:
ஓ சரி சரி நீங்க எங்கே நேரம் கெட்டுவாறது. நீங்கள் கோயிலுக் கெண்டு சொல்லிப்போட்டு கோயிலுக்கு போனா அல்லோ நேரம் கெட்டு வாறதுக்கு. நீங்க எங்கை திரிஞ்சனீங்கள் எண்டு எனக்குத்தானே தெரியும். அப்ப நானும் கொஞ்சம் ஏமாந்திருந்தால் என்னையும்மல்லே இழுத்துக்கொண்டு திரிஞ் சிரிப்பியள்.

சண்முகம்:
உந்தப் பழங்கதையள் இஞ்சை தேவையில்லை நீ ஏன் அவனை கோயிலுக்கு விட்டனி. உனக்கு தெரியும்தானே போனவருஷம் மருதடித் தேருக்குபோய்? மண்டையிலை காயத் தோட வந்தது. உன்னை யார் விடச் சொன்னது. பாபு வரட்டும் இண்டைக்கு இரண்டிலை ஒண்டு பார்கிறேன்.

வள்ளிப்பிள்ளை:
பத்துமாசம் என்ரை வயித்துக்கை கிடந்த பாபு இவரைக் கேட்டுவிட்டே வெளியாலை வந்தவன். எனக்கும் முழசா வேண்டாம் கொஞ்சம் மெண்டாலும்,கொஞ்சமெண்டாலும் உரிமை வேண்டாமே! தொட்டதுக்கெல்லாம் அப்பனைக்கேள் அப்பனைக்கேள் எண்டால் அவன் என்னை அல்லே யார் என்று கேட்கிறான்.

சண்முகம்:
இது நீ கொடுத்த செல்லம் நீதான் வேண்டிக்கட்டவேண்டும்.

வள்ளிப்பிள்ளை:
இந்தமனுசனுக்கு எதைச் சொல்லி என்ன தான் பயன் தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்தான்.. சரி என்ன எண்டாலும் பேசித் தெலையுங்கோ ஆனா! அவன்ரை மேலிலை கைவைத்தால் என்னைக் காண மாட்டியள் அவ்வளவுதான்

சண்முகம்:
எதுக்குமே வாய்திறக்காத நீ, பிள்ளை எண்டதும் என்னையே தூக்கி எறிந்து கதைக்கிறாய். பொறு பொறு நாளைக்கு வாலைக் காட்டிப்போட்டு போகுங்கள் அப்ப நீ எங்கைபோறாய் எண்டதையும் பார்கிறேன்.

வள்ளி:
(மெல்லிய குரலில்.) இந்த மனுஷனுக்கும் நினைப்பு தன்னோடதான் இருப்பேன் எண்டு. அதுகள் வாலைக்காட்டினாலும் வாலுக்குப் பின்னாலை போவேனே ஒழிய இந்த வம்புக்குப் பின்னாலே எவள் போவாள்.

றேடியோவிலும் ஆறுமணிச் செய்தி முடிஞ்சு இப்ப ஒன்பது மணிச்செய்தி நடக்குது. அடுப்படிக்கை இருந்து தாயும், தலைவாசலுக்கை தகப்பனுமாய், நாலு கண்கள் படலையை மேய்ந்தபடி.
பொறுமை இழந்த சண்முகத்தார்.தலைவாசலைவிட்டு இறங்கி படலைக்கை போய்விட்டார்.
வள்ளிப்பிள்ளைக்கு கொஞ்சம் வாய்தான் ஆனால் செமம்பயம் மனுசனுக்கு. இண்டைக்கு என்ன நடக்குமோ என்ற ஏக்கத்தில் மருதடியானை மனசிலை நினைச்சுக்கொண்டு இருக்கிறாள்.

சண்முகம்.
இண்டைக்கு ஒண்டில் நான் இருக்கிறேன் இல்லை அவன் இருக்கட்டும். காலைக்கையை முறிக்காட்டி நான் ஆராப்போனேன் எண்டுபார்
வரட்டும் வரட்டும் சைக்கிள் வேண்டிக் கொடுக்கைக்கையே சுத்தல் வேலை சரிவாராது எண்டு சொல்லித்தான் கொடுத்தனான். வரட்டும் சைக்கிளைப் பூட்டி சாவியை அறுனாக்கொடியிலை தான் கட்டப்போறேன்.

பறுவதம் ஆச்சி:
என்ன சண்முகம் இந்த நேரத்திலை என் வேலிக்கை என்ன குழையே ஒடிக்கிறாய்.

சண்முகம்.
உனக்கு எங்கைபோனாலும் உந்தக்கிண்டல்தானே போகாது. நான் வீட்டுக்கை வேர்த்துகொட்டுது, சாப்பிட்டனான் நாலு நடை நடந்துபோட்டு போய்சரிவோம் எண்டால் நீ எனக்கு குழை அல்லோ அடிக்கிறாய்.
அது சரி நீ எங்கை இந்த நேரத்திலை?

பறுவதம்:
முதலாளிவீட்டை போறேன் பின்னேரம் கொஞ்சம் பிலாவிலை பொறுக்கினனான் அதை கொடுக்க அயத்துப்போனேன் பாவம் ஆடுகள் அதுதான் போறேன்.

சண்முகம்.
ஆச்சி நீ பொறுக்கினது பலாவிலை மட்டுமே! இண்டைக்கு ஊர்லநடந்த அத்தனை சங்கதியையும் கூடவே அல்லே பொறுக்கிகொண்டு போறாய். போ! போ!

சண்முகம்:
வரட்டும் பெடி! ஆருக்கு கெட்டகாலம்மோ நானறியேன் .
ஒழுங்கைக்கை தூரத்திலை சைக்கிள் வெளிச்சம் தெரியுது.
நிலத்திலைகிடக்கும் குழிகளை வெட்டிவெட்டி ஓடுற ஓட்டத்திலையே தெரியுது அது பாபுதான் எண்டு.
வெளிச்சம் அண்மித்ததும் அடுக்களைக்கை இருந்த வள்ளிப்பிள்ளை குடல் நடுக்கத்தோட எட்டிப் பார்கிறாள்.
படலைக்குள் மகன் வந்திட்டான்.

வள்ளி:
அடகடவுளே என்ரபெடியனை நீதான் காக்கவேண்டும்.

சண்முகம்.
தம்பி அம்மா தோசை சுட்டுப்போட்டு பாத்துக்கொண்டு நிற்கிறா கெதியாய் கைகாலை அலம்பிப்போட்டு போய்சாப்பிடு மோனை!
மகன் முன்செல்ல பின்னே மடித்துகட்டிய சறத்தையும் இறக்கிவிட்டு மகனுக்கு அடிக்க பூவரசம்கதியாலில் முறிச்ச தடியையும் வேலி ஓராமாய் போட்டுவிட்டு பின் செல்கிறார். இப்படி இவர் அடிக்க எண்டு முறிச்ச தடியிலை வளவைச் சுத்தியே வேலிபோடலாம்.
முன்குசினிக்குள் தலையைக்குனிந்து வள்ளிப்பிள்ளையைப் பார்கிறார் சண்முகம்.
வெளிச்ச முகத்தோடு கேட்கிறாள்.

வள்ளி:
என்ன பிடுங்கி அடுக்கினீங்கள், அவனைக் கண்டதும் பெட்டிபாம்பாய் அடங்கியிட்டியள்.

சண்முகம்.
நான் பயத்திலை அல்லோ கத்தினனான். நீ அவனிட்டை அப்பர் துள்ளினவர் எண்டு சொல்லிப் போடாதை!
இண்டைக்கு வெள்ளிக்கிழமைதான், அதுபோகட்டும் அவனுக்கு தோசைக்குமேலே ஒரு முட்டை ஊத்திக்கொடேன்.

வள்ளி:
(முணுமுணுத்தல்) இவர்சொல்லியே நான் போட்டுக் கொடுக்க வேண்டும். நான் மத்தியானமே பறுவம் ஆச்சிட்டை முட்டைவேண்டி வைச்சிட்டேன்.

பிள்ளைகளை விட்டுவிட்டு துடிப்போடு படலைக்குள் காத்து க்கிடக்கும் காலம் அன்று மட்டுமா? இல்லை அங்கு மட்டுமா?
இன்றும்,இங்கும் தொடர்கிறது.
தாயகத்தில் மட்டுமல்ல புலம்பெயர்ந்த மண்ணிலும் தான்.
உங்கள் பிள்ளை வரத்தாமதமா?
எட்டிப்பாருங்கள் அதே படலை உங்கள் கண்ணெதிரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# தேடினால் கிடைக்கும் அந்த சுகம்!

பிறந்த மறுவிநாடியே தேடல் ஆரம்பமாகி விடுகிறது. அதாவது குழந்தை தாயைத்தேடுகிறது! அம்மாவை கவரும் வண்ணம் குரல் எழுப்புகிறது. பசுக்கன்று தாய்ப் பசுவைத் தேடுகிறது.
ஏன் படரும் கொடியைப் பாருங்கள் அது தானாகவே தன்னைத் தாங்கிக் கொள்ளும் ஒரு கொழுகொம்பைத்தேடுகின்றது.
இப்படியாகத் தேடுதல் என்பது மனிதர்களையும் கடந்து நிற்கின்றது.
குழந்தை வளரத் தன்னை மகிழ்விக்கும் பொருட்களைத் தேடுகின்றது. அடுத்து இளமைப் பருவம் தனக்கு ஏற்ற காதலனை காதலியைத் தேடுகிறது. இதற்கு அடுத்தாற்போல் பணம், பதவி, புகழ், எனத் தேடுகிறது.
இந்தத் தேடுதலை நல்ல முறையில் பயன்படுத்துபவர்கள் வாழ்க்கையில் முன்நிலையை அடைகிறார்கள்.
விடுதலைக்கு எந்த ஆயுதம் சிறந்தது என மகாத்மாகாந்தி தேடினார் அகிம்சை ஆயுதம் கிடைத்தது.
பழம் விழுந்தால் ஏன் கிழே விழவேண்டும் ஏன் மேலே போகக்கூடாது எனத்தேடினார் இதனால் ஐசாக்நியூற்றன் புவி ஈர்ப்பைக் கண்டுபிடித்தார்.
இராமன் சீதையைக் கண்டுவிட்டார் எப்படியும் அவளை அடையவேண்டும் தனதாக்கிக் கொள்ளவேண்டும் என்று வில்லை எடுத்து வளைத்து வீரத்தை தேடினார் சீதை சீத்தா ராமனானார்.
களியாட்டங்கள் நடந்து முடிந்த தெருவீதிகளில் கிடக்கும் காசையும் ,தவறவிட்ட கைக்கடி காரங்களையும், பொன்னையும் தேடி குனிந்த நடையுடன் அலையும் மக்கள் நடுவே அன்று ஒருவர் நெளிந்த தகர டப்பாக்களையும், இனிப்பு உண்டபின் எறிந்த குச்சிகளையும் உடைந்து போன உதவாத பொருட்களையும் தேடி எடுத்துக் கொண்டு வீடு சேர்ந்தார். தான் தேடியவற்றை பரப்பிவைத்துவிட்டு அமைதியாக இருந்து தேடினார் மான் கிடைத்தது, மயில் கிடைத்தது அழகிய பெண்ணின் இடையும் கால்களும் இப்படிப் பல கிடைத்தன. மக்களால் அவனுக்குக் கிடைத்தது பைத்தியம் என்ற பட்டம்தான். இருப்பினும் விடாமுயற்சியுடன் தேடித்தேடி தான் கண்டதை ஓவியமாகவும், சிற்பமாகவும் வடித்தார். அந்தப் பயித்தியத்தின் கலைப் படைப்புகள் இன்று கோடிக்கு மேல் விலை போகிறது. அந்தக் கலைஞர் நவீன ஓவியத்தின் தந்தை எனப்படும் பிக்காஷோவே தான்.
எனவே நீங்களும் தேடுங்கள் ஒருவருக்கு மீனாகத் தெரிவது மற்றவருக்கு படுத்திருக்கும் பெண்ணாகத் தெரியலாம். பூவாகத் தெரிவது மற்றவருக்கு சூரியனாகத் தெரியலாம். முதலில் தேடப் பழகிக் கொள்ளுங்கள். பின்பு தேடியவற்றை மற்றவருக்குக் கொடுக்கப் பழகுங்கள். நீங்கள் கலைஞராகலாம்.
கலைஞராகி என்னத்தைக் கிழிக்கப் போகிறோம்! இது என்ன வருமானத்தைத் தருமா? இப்படிப் பல கேள்விகள் இன்று மட்டுமல்ல அன்று தொட்டு உண்டு. இதற்கு ஒரே விடை பணத்தால், புகழால் கிடைக்காத ஒன்றை அது நிச்சயம் தரும்.
ஆதுதான் மனதுக்கு அமைதி! இதனால் தான் கலைகளைத் தெய்வீகக் கலை என்று முன்னோர் சொன்னார்கள்.
உங்களுக்குத் துன்பம் வரும் வேளை ஒவ்வொரு கணமும் அருகில் அம்மாவோ, அப்பாவோ, கணவனோ, மனைவியோ இல்லைப் பிள்ளைகளோ பக்கத்தில் இருக்க மாட்டார்கள் ஆனால் உங்களுடன் இருக்கும் கலை உங்களுடனே இருந்து உங்கள் மனதை சாந்தப்படுத்தும்.
உணர்வின் வெளிப்பாடே கலை ,கோடுகள் மூலம் உணர்வை வெளிப்படுத்துவதே ஓவியம்.
ஊங்கள் வீட்டு தொலைபேசி அருகே ஒரு காகிதத்தையும் ஒரு பேனாவையும் வையுங்கள் யார் தொலைபேசியில் கதைத்தது? பணப் பிரச்சனையா? மனப்பிரச்சனையா? காதல் பிரச்சனையா? கல்விப்பிரச்சனையா? எதிரில் உள்ள கடதாசியில் உங்கள் பேனா உங்கள் உணர்வுகளை உங்களுக்குத் தெரியாமலேயே கோடுகள் மூலம் தீட்டும்.
அதனை ஒரு மனோதத்துவ நிபணருக்கு ஈடாக ஒரு கலைஞனால் மட்டுமே வாசித்துக் கொள்ள முடியும். இப்படிக் காகிதத்தில் கிறுக்கும் செயல் உளவியல் ரீதியாக உங்கள் மனதிற்குப் புறம்பாக உங்களைச் சாந்தப்படுத்த ,அல்லது மனதில் கிடக்கும் துயரை அல்லது கோபத்தை வெளிக் கொண்டுவந்து உள்ளத்தின் சுமையைக் குறைக்கும் செயலாகியும்விடுகிறது.
ஒரு காலத்தில் மது போதைக்கு அடிமையாக இருந்த கவிஞர் கண்ணதாசனிடம் நீங்கள் போதையில் எப்படி கவிதை புனைகிறீர்கள் எனக்கேட்டதற்கு கவிஞர் சொன்னபதில் என்னுள் உறையும் கலைவாணிக்குப் போதையில்லை என்பதே! போதைகூட கலைஞனின் கருவூலத்தை அழிப்பதில்லை. அடுத்து ஒரு கலைஞன் துன்பத்தில் துவண்டுவிடுவதில்லை. அந்த நேரத்தில் தான் அவன் மனதில் சிறந்த உணர்வுகள், படைப்புக்கள் கருத்தரிக்கின்றன உருவாகுகின்றன இது எப்படி?
தன் மனதை சாந்தப்படுத்த அவன் கலையை நாடுகிறான் கலையைக் காதலிக்கின்றான். கலையுடன் குடும்பம் நடத்துகின்றான். பல கலைச் செல்வங்களைப் பெற்றுக் கொடுக்கின்றான். புறத்தே இருந்துவரும் துன்பங்களை அவன் தனக்குள் எடுத்து புலம்பி அழுது இதயத்தைப் புண்ணாக்காமல் துன்பங்களை ஒருவித இன்பப் பண்டமாக மாற்றிக் கொள்கின்றான். துன்பத்தில் இன்பத்தைக் காண்கிறான், காட்டுகிறான்.
மின் விளக்கை நிறுத்திவிட்டு ஒரு மெழுகுதிரியை கொழுத்திவைத்துவிட்டு சோகமாக ஒரு பாடலைப் போட்டு இரவில் படுத்துக் கொண்டு கேட்டுப் பாருங்கள் அந்த சோககீதத்தில் ஒரு சுகம் இருக்கும். ஏனவே தேடுங்கள் பெற்றதைக் கொடுங்கள் கலைஞராக உருவாகுங்கள் பொன்னால், பொருளால், பெண்ணால் கிடைக்காத ஒரு சுகம் உங்களுக்கு வாழ்வில் கிடைக்கும்.

# எங்கள் குடும்பத்தின் கலைச் சொத்து!

தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பவரல்ல திரு.மு.க.சு.சிவகுமாரன் அவர்கள். அப்படி இருப்பவர்களுடன் சேர்ந்து கொள்பவரும் அல்ல. இவரைச்சுற்றி இருப்பவர்கள் என்றும் எறும்பு போல் சுறுசுறுப்பாக இருக்கவேண்டும் என்று நினைப்பவர். நினைப்பதோடு மட்டுமன்றி அவர்களையும் சுறுசுறுப்புடன் இயங்க வைப்பவர்
இவருக்கு நண்பர்களாகவோ இல்லை உறவினர்களாகவோ இருப்பவர்கள் கூட இத்தகைய இயல்பைப் பெற்றுவிடு வதைக் காணலாம். எக்காரியத்தையும், முழு நம்பிக்கையுடனும் முழுமையான உழைப்புடனும் நிறைவேற்றி மகிழ்பவர்.
காலத்துக்கேற்ற கோலங்களை தமிழிலும் கலைகளிலும் தேடுபவர்.அதனால் அவர்தமிழும் கலையும் என்றும் தமிழ்போல் இளமையாகவே இருக்கின்றன.
புலம்பெயர் நாட்டில் பொருள் சேர்க்கும் வல்லவர்கள் மத்தியில் தமிழையும் கலையையும் பெரும் பொருளாகத் தேடிக்கொண்டவர்.
கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் அவர்களை எங்கள் குடும்பத்தின் மிகப்பெரும் கலைச்சொத்தாக நாம் மதிக்கின்றோம்.
சின்னவயதில் இருந்து தமிழோடும் கலையோடும் வாழும் இவர் நம்மோடும் வாழ்வது பெரும் பேறாகும்.
அண்மையில் இவருக்கு உலகப் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் அளித்தது மிக்கமகிழ்சியே.
அந்தக் கலாநிதி கௌரவத்திற்கு ஒரு முழுமையான கலைஞன் கிடைத்தது, என்பதில் உலகப் பல்கலைக்கழகம் பெரிதும் மகிழும் என்பது திண்ணம்.
அவர் வணங்கும் விநாயகர் அருள்பெற்று, இந்த விண்ணும் மண்ணும் மலரும் வண்ணம் அவர் கலைகள் சிறக்க வாழ்த்து கின்றோம்.



அன்புடன்
**திரு. பொ.தில்லைராஜா**
**திருமதி.தி.லோகேஸ்வரி**
(வெற்றிமணி விநியோகம்,
கணனிப்பதிப்பு - ஆலோசகர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞனைச் செதுக்கிய சிற்பி கலாகேசரி

**ஒரு சிலையை வடிக்கவேண்டும் என்றால் உளியைப் பிடிக்கவேண்டும்.**

**ஓவியம் வரைய வேண்டும் என்றால் தூரிகையைப் பிடிக்க வேண்டும்.**

**ஒரு கலைஞனைச் செதுக்கவேண்டும் என்றால் உளியோ தூரிகையோ தேவை இல்லை.**
**அவனை அவன் கலை உணர்வாலே அவனாகவே அவனை வடித்துவிடலாம்.**

என் வாழ்வில் என் தூரிகையைத் தொடாது கலையுணர்வை என்னுள் நகர்த்திச்சென்றவர் கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்கள். எனது குருவும் அவரே.
தாயகத்தில் மகாஜனாக் கல்லாரியில் எனக்கு ஓவியம் கற்பித்தவர். பின்னர் வடமாகாண சித்திரவித்தியாதரிசியாக இருந்து அரும்பணி யாற்றியவர்.அத்தோடுமட்டுமன்றி தாயகத்தில் பல தேர்களை சித்திர சிற்ப அலங்காரங்களுடன் பவனிவர வடித்தபெருமைக்குரியவர்..
அவரிடம் நான் பெற்ற சில அனுபவ வர்ணங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.
அன்று இலங்கையில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியில் நான் படித்தவேளை இல்லங்களுக்கு இடையில் நடைபெறும் விளை யாட்டுப் போட்டியில் இடைவேளை நேரத்தில் விநோத உடைப்போட்டி நடைபெறுவது வழக்கம். பாடசாலையில் நிகழும் நிகழ்ச்சி களே அதிகமாக எமக்கு ஓவியத்தின் தலைப்பாக வந்து அமைந்துவிடும்.
கலாகேசரி வழமைபோல் விளையாட்டுப் போட்டியில் உங்களுக்குப் பிடித்த எதனை யென்றாலும் வரையுங்கள் என்று கூறிவிட்டு மாணவர்களுக்குப்பின்னால் நின்று நோட்ட மிட்டார்.
எல்லோருமே மாணவர்கள் ஓடுவதுபோன்றும், பின்னணியில் இல்லங்கள் அலங்கரிக்கப் பட்டிருப்பதாகவும் வரைந்து கொண்டனர். நான் விநோதஉடைப்போட்டியினை வரைந்தேன். பின்னணியில் எதுவுமே கிடையாது முழுமை யாக விநோத உடைப்போட்டியில் வந்த கிருஸ்ணன், பாதிரியார், பைத்தியக்காரன், குறத்தி இவர்களை ஒவ்வொரு உருவமும் ஒன்றோடு ஒன்று கலந்த நிலையில் வரைந்தேன்.
தூரிகை பாவிக்கவே இல்லை. மகாஜனாக் கல்லூரியின் முன் வீதியில் சூப்பிப் போட்டுப் போட்ட ஐஸ்பழத் தடிக்குப் பஞ்சமில்லை அந்தத் தடியினாலேயே மேற்படி ஓவியத்தை வரைந்தேன்.
அதேநேரம் பிறர் சூப்பிய தடியைக் கையில் எடுக்காமல் நானே வேண்டிச் சூப்பிவிட்டு அதனை எனது தூரிகையாக்கிக் கொண்டேன். (எனது தூரிகை எனதாக இருக்கவேண்டு மல்லவா?)
ஆசிரியருக்கு எல்லோரும் படங்களைக் காட்டுகிறார்கள் அவர்முகத்தில் திருப்தியின் ரேகை மறைந்திருந்தது.
என்னைப் பார்க்கிறார் நான் சற்றுப் பதட்டத் துடனேயே எடுத்துக் காட்டினேன். அவர் என்ன போட்டோ எடுக்கும்போது ஒன்றுக்குமேல் ஒன்று எடுத்த மாதிரி இருக்கிறது, என்ன பிழைத்து விட்டதா? என்றார். என்மனம் பதற ஆரம்பித்து விட்டது.
இல்லை நீங்கள் சொல்லுவது போல்தான் கீறினேன் என் மனதிற்கு அப்படிப்பட்டது அப்படியே வரைந்திருக்கிறேன். நீங்கள் அடிக்கடி சொல்லும் புதுமையைச் செய்து பார்த்திரு க்கிறேன். உங்களுக்குப் புதுமை உண்மையில் பிடிக்காதா? என்று கேட்டுமுடித்தேன்.
கலாகேசரியின் முகம் கடுகடுப்பாகிவிட்டது. புதுமையைப் படைக்கிறவன் அதனைப் புதுமை என்று சொல்லக்கூடாது.
அதனைப்பார்ப்பவர்களைப் புதுமை என்று சொல்ல வைக்க வேண்டும். எனக்கும் புதுமை ஓவியம் பற்றித் தெரியும் ஆனால் நீ வரைந்திருப்பது இரண்டுங்கெட்டான் நிலை என்றார்.




கலாகேசரி ஆ.தம்பித்துரை

இனி வரைதலில் என் மனதை ஈடுபடுத்து வதில்லை என்று முடிவெடுத்துக் கொண்டேன். பாடசாலை சென்று வீடு திரும்பியதும் நான் எடுத்த முடிவு மெல்ல மெல்லப் பின்னோக்கிச் செல்லத் தொடங்கியது.
அந்தப் படத்தை வீட்டுச் சுவரில் மாட்டிவிட்டு பார்த்துக் கொண்டிருக்கிறேன் எனக்கு அப்படத்தில் ஏதோ ஒன்று இருப்பதாகவே தோன்றியது.

என் வீட்டு வாசலில் சயிக்கிள் மணி கேட்கிறது எட்டிப் பார்க்கிறேன் கலாகேசரியேதான் என்னைக் கண்டதும் இறங்கி வீட்டினுள் வந்துவிட்டார்.
சுவரில் இருந்த அந்தப் படத்தைப் பார்க்கிறார் நீ நினைத்ததும் சரி முயன்றதும்சரி. ஆனால்! புதுமைக்கும் ஒரு ஒழுங்கு முறை உண்டு. அதைத்தான் லயம் என்று சொல்லுவது வா என் வீட்டிற்கு உனக்கு அதைக்காட்டுகிறேன் என்றார்.
என்னைத் தேடிவந்த கலை நதிக்குப்பின்னால் கடலை அடையும் வரை அவர்பின் சென்றேன். அவர் வீட்டு முற்றத்தில் மரக்குற்றிகள் பிரசவத்தை நோக்கிக் காத்துக் கிடந்தன. ஓர் இடபவாகனம் என்னைப்பார்த்துச் சிரித்தது. என் அறியாமை முன்னே கிடக்கும் மரக்குத்தி களுக்கு முன்னாலே தீப்பிடித்து எரிந்தது.

உள்ளே சென்றேன் சுவரில் ஓவியர் மார்க் வரைந்த புதுமை ஓவியம் (காவடியாட்டம்) வரவேற்கிறது.
கலாகேசரியின் இல்லத்தில் புதுமை ஓவியமா? ஒருகலைஞன் இன்னொரு கலைஞனின் ஓவியத்தை தன் வரவேற்பறையில் பெருமையாக மாட்டிக் கொண்டதை அன்று தான் கண்டேன்.
புதுமையை வரவேற்று அவர் வார்த்தைகள் பொழியவில்லை செயலில் அதனைக் காட்டினார்.
அவர் புதுமை ஓவியங்கள் பற்றி அன்று எடுத்துக் கூறிய விடயங்கள் என்னை மலைக்க வைத்தது. அவர் உலகளாவிய ஓவியர்களின் வரலாற்றை நன்கு அறிந்து வைத்திருந்தார்.
அவர் என்னுள்ளத்தில் போட்டுவைத்தகோடுகளே இன்று என் கோலங்களாக மலர்கின்றன.



அன்று 35 வருடங்களுக்கு முன் நான் வரைந்த (ஐஸ்பழத்தடி) ஓவியப்பாணியில் இன்று வரைந்த ஓவியத்தை இங்கே காண்கிறீர்கள். இதனை அவர் காணமுடியாமல் அமரத்துவம் அடைந்து விட்டார். ஆனால் இந்த ஓவியத்தினுள் அவர் சொன்ன இலயத்தைக் கண்டு இரசித்த யோமனியரின் முகத்திலும் நான் கலாகேசரியின் புன்னகையையே கண்டேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்ளத்தைத் தொட்டு வரைந்தவர்



கண்ணா

## நவீன ஓவியத்தின் தந்தை பிக்காஸோ

சிந்திக்கத்தெரிந்தவன் மனிதன் அந்தச் சிந்தனை களுக்கு வடிவம் கொடுப்பவன் கலைஞன். தன் திறமைகளை இவ்வுலகில் பதியவைக்கவேண்டும் என்றால் அவனது சிந்தனைகளும் அதன் படைப்புக்களும் மற்றவர்களது சிந்தனைகள் படைப்புக்களில் இருந்து வித்தியாசப்படும்போது அவை இந்த மண்ணில் நிலைக்கத் தலைப் படுகின்றன. இந்த வகையில் உலகில் இன்று விலைமதிப்பற்ற பொக்கிஷங்களாக தன் ஓவியங் களையும் சிற்பங்களையும் விட்டுச் சென்றவர். பிக்காஸோ.

இவர் 1881 இல் ஸ்பெயின் நாட்டில் பிறந்து பாரீஸ் நாட்டில் வாழ்ந்து, தமது ஓவிய சிற்பக் கலைகளைப் பரப்பினார். இவர் நவீன ஓவியத்தின் தந்தை எனப் போற்றப்படுவர். தனது ஆரம்ப ஓவியமே நவீன ஓவியமாக அல்லாமல் எல்லோரையும் போலவே இயற்கை எழிலை மரபுப்படியே வரைந்து வந்தார். மற்றவர்களை விட தான் புதிய பாணியில் ஓவியத்தை படைக்க வேண்டும் என்ற சிந்தனையின் வெளிப்பாடாகவே இந்த நவீன ஓவியம் அமைந்தது. இவர் தனது ஒன்பதாவது வயதில் தன் கண்களை மூடிக்கொண்டு எந்த உருவத்தையும் வரையும் ஆற்றல் பெற்றிருந்தார். அவரது நவீன ஓவியத்திற்கு ஆரம்பகாலத்தில் கடும் எதிர்ப்பும் ஏளனமும் இருந்தன. ஆனாலும் நாளடைவில் அவருடைய ஓவியங்களுக்கு பெரும் ரசிகர்கள் உருவாகி விட்டனர். பிக்காஸோவின் நவீனபாணி ஓவியப் படைப்புக்களிலே இன்றும் போற்றப்படுவது ஸ்பெயின் நாட்டின் உள்நாட்டுப் போரை ஒட்டிச் சித்தரிக்கப்பட்ட கர்னிகா என்னும் ஓவியமே. சமாதானத்தின் சின்னமாக புறாவை வரைந்தவரும் இவர்தான்.

நவீன பாணி ஓவியங்களில் யதார்த்தமான இயற்கையான அமைப்புக்கள் இல்லை என்றாலும் அவற்றினுள்ளே இயற்கையின் உன்னதமான எழுச்சிகள் அழுந்திக்கிடக்கின்றது. அதனை ரசிப்பதற்கு நல்ல ஆரோக்கியமான இரசிப் புத்தன்மை தேவை. இந்த நவீன ஓவியங்கள் மூலம் இரசிகர்களையும் சிந்திக்க தூண்டிய பெருமையைச் செய்திருக்கிறார் பிக்காஸோ.

பாரீஸ் நகரக் கலை மண்டபத்திலே பாதிக்குமேல் பிக்காஸோவின் ஓவியங்களே நிறைந்துள்ளன. நியூயார்க் பொருட்காட்சிச் சாலையில் அவருடைய ஓவியங்கள் 300 க்கு மேற்பட்டவை உள்ளன. அவரது ஒரே ஒரு ஓவியத்திற்கு இருபது இலட்சம் டொலர் வரை சுவிற்சலாந்தில் விலைபேசப் பட்டது.

ஆரம்பகாலத்தில் இவரது ஓவியங்கள் ஆழ்ந்த சோகத்தையே பிரதிபலித்தன. பிச்சைக்காரன் நோய்வாய்ப்பட்ட குழந்தை நடத்தை கெட்டவள் முதலிய விடயங்களையே அவர் ஓவியமாகத் தீட்டினார். அப்போ தெல்லாம் அவருடைய ஓவியங்களில் நீலநிற ஆதிக்கமே அதிகமாக இருந்தது. உலகிலேயே மிகப் பெரிய பணக்கார ஓவியர் இந்தப் பிக்காஸோ தான். இவ்வளவு பெரும் செல்வம் சம்பாதித்த ஓவியர் இவரைத்தவிர வேறு ஒருவர் இது வரை இருந்ததாகச் சரித்திரம் இல்லை.

பணத்துடன் புகழும் குவிந்தது அவர் புகழைச் சிறிதும் விரும்பியதில்லை. அவர் சொன்னார் 'என்னுடைய சொந்த வீட்டிலேயே நான் ஒரு கைதிபோல் இருக்கின்றேன். வீட்டின் ஒவ்வொரு கதவிற்கும் இரண்டு பூட்டுக்கள் போடப் பட்டிருக்கிறது. என்மீது சுமத்தப்பட்டிருக்கும் புகழை நான் விரும்பவில்லை. மனத்தாலும் உடலாலும் நான் பாதிக்கப் படுகின்றேன்.

மக்களை என்னிடம் இருந்து விரட்டுவதற்காக அமர்த்தப் பட்டிருக்கும் வேலைக்கார கும்பல் தான் என்னை சதா சூழ்ந்து கொண்டிருக்கிறது' என்றார்.

அவர் ஒரு ஓவியத்தைப் படைப்பதற்கு தனது கலைக் கூடத்துக்குள் சென்றால் மணிக்கணக்கில் அல்ல நாள் கணக்கு களிலும் அல்ல, பல மாதங்களின் பின்தான் வெளிவருவார்.

கலைப்படைப்பு என்பது ஒரு பிரசவமே! அந்தப் பிரசவத்துக்குரிய காலம்வரை பிக்காஸோவின் கலைத் தவம் தொடரும். அந்த நேரங்களில் அவர் எவரையும் தன் கலைக்கூடத்துக்குள் அனுமதிக்க மாட்டார்.

ஆனால்!


குழந்தைகள் மட்டும் எந்த நேரத்திலும் உள்ளே செல்லலாம். குழந்தைகளின் சந்திப்பு தனக்கு இளமையைத் தருகிறது என்கிறார்அவர், தமது 91வது வயதில்.

எனக்கு நண்பர்கள் மிகக் குறைவு, அதிலும் அதிகம் போர் இறந்துவிட்டார்கள் என்றார்அவர்.

கலைஞர்கள் பொதுவாகவே நகைச்சுவை உணர் வுடையவர்கள். ஒருதடவை நவீன ஓவியத்தை ரசிக்கத் தெரியாத ஒருவர், இது என்ன ஓவியம் ஒரே கோரமாக இருக்கிறது என்றார். பிக்காசோ நிதானமாகச் சொன்னார் அது ஓவியமல்ல, முகம் பார்க்கும் கண்ணாடி என்று.

இளைஞன் ஒருவன் தான் வரைந்த ஒரு இயற்கைக் காட்சியை பிக்காசோவிடம் காட்டி பெருமையுடன் இது சூரிய உதயமா? சூரிய அஸ்தமனமா? என்று கேட்டான். சூரிய அஸ்தமனம்தான் என்றார் அவர் அப்படி எவ்வளவு நிச்சயமாகச் சொல்லுகிறீர்கள் என்று கேட்டான் இளைஞன். நீ ஒரு நாளாவது சூரிய உதயத்தைப் பார்த்து கிடையாதே என்றார் நமட்டுச் சிரிப்புடன்.

இவரது ஓவியங்கள் கேலிக்கும் உள்ளாகி யுள்ளன. பிக்காஸோவின் நவீன ஓவியத்தை பிரபல சிற்பி ஒருவரே கேலி செய்திருக்கிறார். 1947 இல் அவரது படங்களில் ஒன்றை ரோடின் என்ற பிரபல பிரஞ்சுச் சிற்பியிடம் காட்டி இது உங்களுக்குப் பிடித் திருக்கிறதா? இது இன்னும் என் கை எழுத்துப் போடவில்லை உங்கள் விருப்பை அறிந்த பின்பே போடலாம் என்றிருக்கிறேன் என்றார்.படத்தைக் கையில் வாங்கி மேலும், கீழும் இடமும், வலமும், திருப்பித் திருப்பிப் பார்த்தார். ரோடின் கடைசியில் சொன்னார் கை எழுத்தைப் போடுங்கள் போட்டால் தான் படத்தை எப்படி மாட்டுவது என்பதைப் புரிந்து கொள்ள முடியும் என்றார். இப்படியான பல கேலிகளுக்கு உள்ளான நவீன சித்திரம் இன்று பல யுகங்கள் வாழும் உரம் பெற்று நிற்கின்றது.



பிக்காஸோவிற்கு சில மூட நம்பிக்கைகளும் இருக்கவே செய்தன. ஸ்பெயின் நாட்டில் உள்ளவர்களின் சராசரிமனிதர்களுக்கு உள்ள மூட நம்பிக்கைகள் அவரிடமும் இருந்தன. அவற்றுடன் ரஷிய நாட்டைச் சேர்ந்த அவர் மனைவி வோல்காவின் சில நம்பிக்கைகளும் தொற்றிக்கொண்டன. அன்று மூட நம்பிக்கைகள் என்று எண்ணிய சில இன்று அர்த்தமுள்ளனவாகவும் தெரிகின்றது. அதற்கு உதாரணமாக இதனைச் சொல்லலாம்.

எவர் மீதாவது ஒருவர் ஆதிக்கம் செலுத்த விரும்பினால்,அவரது நகத்தையோ, தலை மயிரையோ கைப்பற்றிக் கொள்ளவேண்டும். இது மேல் நாடுகளில் பரவலாக உள்ள ஒரு நம்பிக்கை. இது இலங்கையிலும் இருந்தது. இருக்கிறது. இதனால் அன்று எவரும் அந்த இரண்டையும் எதிரிகளின் கைகளில் கிடைக்காமல் உடன் அழித்து விடுவர்கள். பிக்காஸோவுக்கும் அந்த நம்பிக்கை யிருந்தது.அதனால் அவர் மாதக் கணக்கில் முடிவெட்டிக் கொள்வதில்லை. தாமே முகசவரமும் செய்து கொள்வார். அந்த மயிர்துணுக்குகளைப் பிறர் காணாதபடி எங்காவது கொட்டிவிடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## பிக்காஸோ

தலை முடிவெட்டவென்றால் நம்பிக்கைக்குரிய நாவிதரை அழைப்பார். சிலசமயங்களில் தலைமுடி அசிங்கமானாலும் தானே முடியை வெட்டிக்கொள்வார். இவ்வளவு தூரம் அந்த கொள்கையில் பிடிவாதமாக இருந்தார். இதனை மூடக்கொள்கை என்பதா? இல்லை முன்னோக்கிய அறிவியல் என்பதா? ஏன் என்றால் இன்று ஒருவரின் மயிரையோ இல்லை நகத்தையோ கொண்டு அவரைக் கண்டு கொள்ளும் உயிரணுச்சோதனை கண்டுபிடிக்கப் பட்டுவிட்டதல்லவா (DNA). அப்படி என்றால் அந்தப் பொருள்கள் ஒருவரின் குணாதிச யங்களைச் சுமந்து நிற்கும் பொருள்களாகவே இருக்குமேயன்றி அவற்றை எப்படிக் கழிவுப் பொருள் என்று கொள்வது.

சரி மூட நம்பிக்கைகளை விடுங்கள். பிக்காஸோ விற்கு மனைவிமாரும் அதிகம். அப்பெண்களின் குணாதிசயங்கள் அவரது கலைப்படைப்புகளிலும் பிரதிபலித்தன.

அவருடையகாதலிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றில் உயர்ந்தவர்களாக அவருக்கு இருந்தனர். காதல் அன்பு பரிவு பாசம் காமம் என்று காதலுக்குள்ளும் சில குணங்களே உயர்வாக ஆட்சி மொழியாக இருக்கும் அல்லவா. எந்த எந்தக் காலத்தில் எந்த எந்தக் காதலிகளின் மொழி ஆட்சியில் இருந்ததோ அவையே பிக்காஸோவின் தூரிகைகளை நனைத்தன. இதனை அவரது ஓவியங்களில் காணலாம்.


தனது 50வது வயதில் 17 வயதுடைய மேரி தொசி வால்டர் என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். இவள் காம உணர்ச்சி மிக்கவள். பலே நடனக்காரி. அக்காத்தில் அவரது ஓவியங்கள் பல காதலுக்குள் காமத்தைப் பிழிந்து தந்தன.

அதனை வெளிப்படுத்திய விதம் தனித்துவ மாதலால் அங்கே விரச உணர்வு மேற்படவில்லை.

வர்ணத்தை புறத்தே எடுத்தாலும் அவை உள்ளத்தைத் தொட்டல்லவா தீட்டப்படுகின்றன என்பதற்கு பிக்காஸோவின் ஓவியங்கள் சாட்சி. இவர் தனது 91வது வயதில், 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ம் நாள் காலமானார். அவரது உணர்வுகள் இன்றும் மறையாது ஓவியங்களாக காவியங்களாக உலகில் சிம்மாசனம் இட்டுக் கொலுவிருக்கின்றன.

# கலாநிதி சிவகுமாரன் உலகத் தமிழர்களின் கலைச் சொத்து

**-சிந்தனைப் பூக்கள்- எஸ். பத்மநாதன் -கனடா**



1992 சுவர்ச் சித்திரப் போட்டியின் போது..



குரும்பசிட்டி கிராமத்தில் திரு. மு. க. சுப்பிரமணியம் அவர்களின் மகனாக பிறந்த இவர் பல்துறை ஆற்றல் மிக்க ஒரு தமிழனாக, கலைஞனாக வருவார் என்றோ, புலம்பெயர்ந்த நாடொன்றின் சாதனைத் தமிழனாக மாறுவார் என்றோ யாரும் நினைத்திருக்க மாட்டார்கள். ஆனால் இது நடந்துவிட்டது.! புலம் பெயர்ந்த ஜேர்மன் நாட்டில் 22 வருடங்களாக நவீன ஓவிய சிற்பக் கலைஞனாக மிளிர்ந்து கொண்டு பத்திரிகைத்துறை, எழுத்துத்துறை, வெளியீட்டுத் துறைகளிலும் தன் கால்களைப் பதித்துக் கொண்ட ஒருவராக விளங்கிய மு. க. சு சிவகுமாரன்(B.F.A) அமெரிக்கா அரிசோனா மாநிலத்து அகிலஉலகப் பல்கலைக்கழகத்தின் -கலாநிதி- பட்டத்தினையும் பெற்றுக் கொண்ட வேளையில் உலகத் தமிழர்களின் கலைச் சொத்தாக மாற்றம் பெற்றுவிட்டார்.

க. சு. சிவகுமாரனின் இப்பட்டத்திற்குப் பின்னால் உள்ள அவர் வாழ்வும் கலைக்கான கடின உழைப்பும் பற்றிய கருத்துக்கள் மிகமுக்கியமானவை. முதலில் மனம் கொளத்தக்கது அவரது தகப்பனார் பற்றியது. திரு. மு. க. சுப்பிரமணியம் குரும்பசிட்டி கிராமத்தில் பொன். பரமானந்தர் வித்தியாசாலையின் அதிபர். இவரே -வெற்றிமணி- பத்திரிகையின் ஸ்தாபகர். இவரின் வழிகாட்டலில் உயர்ந்தவர் மு. க. சு. சிவா. அடுத்தது இவர் படித்த பாடசாலையும், இவரது குருவும் வடபகுதியில் புகழ்பூத்த தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரியின் பழையமாணவர், கலாகேசரி தம்பித்துரையின் மாணவர், ஈழத்தின் அதியற்புதக் கலைஞரான ஒருவரிடம் பெற்ற திறன்கள் சிவகுமாரனை களனிப் பல்கலைக்கழகத்து ஓவிய சிற்பப் பட்டம் (B.F.A) பெறுதற்கு உதவியது. இத்துறையில் முதலில் பட்டம்பெற்ற தமிழரும் இவரே. அடுத்து இவரது சேவைபற்றிய கருத்து மிகச் சிறந்த வடபகுதி அதிபரான மகாஜனாக்கல்லூரி அதிபரின் கீழ் தான் படித்த பள்ளிக்கூடத்தில் ஒரு ஆசிரியராக இவர் சேர்ந்து கொண்டமை. அதிபர் இவரைப்பற்றி எழுதும் போதும் பேசும்போதும் பேருவகை கொள்வார். ஒரு சித்திரக் கூடம் அமைவுபெற்றதும் அங்கு சிவகுமாரனின் அர்ப்பணிப்பும், அழகு காவியங்கள் தயாரிப்பும் வர்ணிக்க முடியாதவை. இங்கிருந்து இவரது ஆற்றல் வலுவடையத் தொடங்கிற்று.


ஜேர்மன் நாட்டில் சிவகுமாரன் புதுப்பிறவி எடுக்கின்றார். இந்த நாட்டின் வாழ்வு அவரை மேலும் புடம் போடுகிறது. -கண்ணா- என்ற புனைபெயரில் ஓவியம், சிற்பம் நவீனபாணியில் உருவாகின்றது. 1981 முதல் இவரது பல்துறை ஆற்றல் தமிழர்களின் விடுதலை உணர்வு, தாயக அவலம் என்பன பற்றி -எரிமலை- சஞ்சிகையில் வெளியாகிறது. பிலபெல் தமிழாலயத்தில் ஓவியம் கற்பித்து மேற்கத்தய முறையில் வளர்ந்து நிற்கிறார். படிப்படியாக ஜேர்மன் நாட்டுப்பிள்ளைகள் இவரது மாணவர்களாகி இறுதியில் 1992ல் ஜேர்மன் நாட்டு சுவர்சித்திரப் போட்டியில் முதலிடம் பெறவைக்கிறது.

சிவகுமாரின் பத்திரிகைத்துறை இன்னோர் பரிமாணம் கொள்கிறது. 1950 இல் தாயகத்தில் உருவான வெற்றிமணியை 1994 முதல் பொறுப்பேற்று பத்திரிகையாளராகிறார். இங்கிருந்து பிறந்த பெயர்கள் -நிலாமகள்-, -மாதவி-. கவிதைக்கு நிலாமகள். கதைக்கு மாதவி. இப்படி இவரது கற்பனைகள் பிரிகின்றன. முயற்சி உழைப்பு இவரது மூலதனம். அறிவு அவதானம் அனுபவம், செயல்திறன் இவரது தொடர்கதைகள். இப்படி வளர்ந்தவர்தான் இவர்.இவரது படைப்புக்கள் ஜேர்மனியை விட்டு வெளியிலும் எட்டிப்பார்க்கின்றன. வர்ணக்கலவை தோய்ந்த வெற்றிமணி ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலும் நுழைந்தபோது இவர் ஆற்றல் உலகளாவி நின்றது: இதில் இணைந்த வர்த்தகர்கள், எழுத்தாளர்கள் பலர். புதியவடிவமைப்பு நவீன ஓவியத்துறை என்பவற்றினைத் தானே வடிவமைத்து தன்பிள்ளைகளையும் ஈடுபடுத்தி தனிமனித நிறுவனமாகி உயர்கின்றார். அப்போது வெளியீட்டுத் துறைகளிலும் நாட்டம் கெள்கின்றார். கலாநிதி கந்தவனம் அவர்களின் -எழுத்தாளன்-, அதிபர் கனகசபாபதியின் -மாறன் மணிக்கதைகள்- வெளியிட்டதுடன் தனது எழுத்துக்களை -இடைவெளி- ஜேர்மனியில் வி. கந்தவனம், -அது என்பது இதுவா-, -தமிழே காதல்-, -கோடுகளும் கோலங்களும்- இப்படிப் பல வெளிவந்த நிலையில் உள்ளன. யாழ்ப்பாணம், கொழும்பு, ரொரன்ரோ போன்ற இடங்களில் இவரது நூல்கள் வெளியிடப்பட்டன.

இவரது திறன்கள் உலகில் எவ்வாறு உணரப்பட்டுள்ளன என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. கனடாவில் தமிழர் தகவல் நிறுவனம் 1999ல் இவருக்கு -தமிழ்பணி- விருதினை வழங்கி கௌரவித்தது எழுத்தாளர் இணையம் -ஓவியக்கலைவேள்- என்ற பட்டத்தினைச் சூட்டியது. ஜேர்மனியில் வெற்றிமணி பெண்விழாவில் -உதயன்- பத்திரிகை நிறுவனம் -பல்கலைச்செல்வர்- என்னும் பட்டம் வழங்கியது இலங்கைச் சர்வதேச இந்து குருபீடம் -கலைஞானமணி- என்ற விருதினை வழங்கியது. அனைத்திற்கும் மேலாக அமெரிக்க அரிசோனா மாகாணத்தில் உள்ள உலகப் பல்கலைக்கழகம் கவின் கலைத்துறையில் கலாநிதி (Cultural Doctorate in Fine Arts -U. S.A) பட்டத்தினை வழங்கியுள்ளது: கவின் கலையில் ஒரு தமிழர் கலாநிதி பட்டத்தினை இங்கிருந்து பெறுவது இதுவே முதற்தடவையாகும்.

தமிழும் கலையும், கல்வியும் கலையும் பின்னிப் பிணைந்த நிலையில் ஒரு ஓவியர் உலகளாவிய நவீன சிற்பக் கலைஞராகவும், படைப்பாளியாகவும் மாறி பல்துறையாற்றல்களை வெளிப்படுத்திய வேளையில் இக்குரும்பசிட்டியின் மைந்தனை குவலயமே வியந்து நிற்கின்றது. இவரது விழிகளுக்குள் உலகமே உறங்கிக்கிடக்கின்றது:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலை என்பது

கலை என்பது
காலத்தின்
கண்ணாடி போன்றது
கண்ணுக்கோ
தேன் விருந்தாவது

கலை என்பது
உலகை
அலங்கரிப்பது
உள்ளத்தை
அழகுபடுத்துவது

கலை என்பது
தனித்துவமானது
தனித்தே - நீ
இருந்தாலும்
பெரும்தவம்
போன்றது.

கலை என்பது
தெய்வீகமானது
தெய்வத்தையும்
நெய்யாக
உருகவைப்பது

கலை என்பது
காதல் போன்றது
விழியில் தொடங்கி
இதயத்தில் வழிவது

கலை என்பது
மொழியைக்
கடந்தது
உலகில் நல்
உறவுக்கு
வழிசமைப்பது

கலை என்பது
கவலையை
மறக்கவைப்பது
கவலையிலும்- ஓர்
உயிர்ப்பைக்
கொடுப்பது

கலை என்பது
மூலத்தைத்
தேடுவது
மூர்க்கத்தைத்
தணிப்பது.

# வெற்றிமணிக்கோர் புகழாரம்

**கலைஞர் பா. பாலசுப்பிரமணியம்** (Frankfurt)



கண்ணன் என்று செல்லமாக அழைக்கப்படும் வெற்றிமணி ஆசிரியர் திரு. சிவகுமாரன் அவர்களுக்கு உலகப் பல்கலைக்கழகம், கவின்கலைக்கோர் கலாநிதி (Cultural Doctorate in Fine Arts) என்ற பட்டமளித்து கௌரவித்திருக்கின்ற தென்றால், அக் கௌரவம் புலம்பெயர்ந்து வாழும் எம் ஒவ்வொருவர்க்கும் கிடைத்திருக்கும் மாபெரும் கௌரவமாகும்.

.குறிப்பாக ஈழத் தமிழர்களுக்கு கிடைத்திருக்கும் மாபெரும் வெற்றி என்றே கூறவேண்டும்.

இக்கௌரவமும் பட்டமும் தமிழனுக்கே, ஏன் தமிழுக்கே சூட்டப்பட்ட ஒரு கிரீடம் என்று கூடக் கூறிவிடலாம்.

இக் கௌரவமானது எமையெல்லாம் பூரிப்படைய வைத்தமைக்குப் பல காரணங்கள் உண்டு. சிவகுமாரன் என்ற அந்த வெற்றிமணி ஆசிரியரின் தணியாத தாகம் கொண்ட தாயக விடுதலை உணர்வு, அதன் வெளிப்பாடாக அவரது உள்ளக்கிடக்கையிலிருந்து வெடித்துப் பிளம்பாகக் கிளம்ப, அந்தத்தனி மனிதன் சுயமாக எழுத்தாணியையும் தூரிகையையும் கையில் தாங்கி, இன்றைய ஈழவரின் வாழ்வியல் நிலையை ஓவியங்களாகவும் கதை, கவிதை, கட்டுரைகளாகவும் பிரசவிக்கச்செய்து பல சிறந்த கருத்துப் பொதிந்த மேடைப் பேச்சுக்களை ஈழத்தில் மட்டுமல்லாது அந்நிய நாடுகளிலும் நடாத்தி தனக்கென்று ஒரு தடம் பதித்தமை, அவரது ஓவியத்திறமையை கண்ணுற்ற ஜேர்மன் நாட்டவர்கள் பாராட்டிக் கௌரவித்தமை, ஈழத்தில் முதலில் வெற்றிமணி எனும் பத்திரிகையை ஆரம்பித்த அவரது தந்தையார் காலஞ்சென்ற மு. க. சுப்பிரமணியம் அவர்களின் கனவினை நனவாக்கி அதிலும் பலபடி மேலாக அந்நிய மண்ணில் அதே வெற்றிமணியை மனத்துணிவோடு ஆரம்பித்து ஒன்பது வருடங்களாக நடாத்தி வருகின்றார்.

எந்த ஒரு தமிழ் பத்திரிகைக்கும் இல்லாத தனிச் சிறப்பு வெற்றிமணிக்குண்டு. பலவர்ண நிறத்தோடு தமிழர்கள் வாழும் நாடெங்கும் பரந்து பரவும் வகையில் எமது இனத்திற்கு வேண்டிய பல நல்ல விடயங்களை வெற்றிமணியில் எழுதிவந்ததோடு நல்ல பல எழுத்தாளர்களையும் பத்திரிகையில் பொதிந்திருக்கும் கருத்துக்களை சுவைக்க வண்டாக அலையும் வாசகர் கூட்டத்தினையும் உருவாக்கி தமிழினத்தின் மத்தியில் ஓர் அறிவுள்ள பண்புள்ள உலகமொன்றை உருவாக்கியிருக்கின்றார். அவரது சீரிய பாரிய தொண்டு பணத்திற்காக என்று எவராலும் கூறிவிட முடியாது, காரணம் திரு. சிவகுமாரன் அவர்கள் வெற்றிமணியை ஆரம்பித்த காலத்திலிருந்து இன்றுவரை பல



**தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்கள்,
நூலகத்தில் ஆவலுடன் வெற்றிமணி படிக்கும் காட்சி.**

ஆயிரம் பிரதிகளை அச்சிட்டு எத்தனையோ நாடுகளுக்கு அனுப்பி ஒவ்வொரு வாசகனும் சுவைக்கும் வகையில் இலவசமாகவே வினியோகித்துவருகின்றார். இவரது உணர்வுபூர்வமான அரும்பெரும் சேவையை உலகப் பல்கலைக்கழகம் உன்னிப்பாகக் கவனித்து கௌரவித்துப் பட்டம் வழங்கியிருக்கின்றதென்றால் எந்தத் தமிழனும் மகிழ்வுகொள்ளாமல் இருக்கமாட்டான்.

திரு. சிவகுமாரன் அவர்கள் தனது திறமைகள் அனைத்தையும் வெற்றிமணிமூலம் வெளிக் கொணர்ந்து மிகப்பெரு சாதனையே படைத்திருக்கின்றார். சிவகுமாரன் என்று சொல்வதைவிட வெற்றிமணி என்றாலே அனைவரும் அவரை அறிந்துகொள்ளும் வகையில் அவர் பிரபல்யம் அடைந்திருக்கின்றார். ஆகவேதான் சிவகுமாரன் என்றால் வெற்றிமணி, வெற்றிமணி என்றால் சிவகுமாரன் என்று கூறிவிடுவார்கள். வெற்றிமணி என்று, சிவகுமாரனை மக்கள் அழைப்பதனால் இன்று கிடைத்திருக்கும் கௌரவமும் பட்டமும் வெற்றிமணிக்கோர் புகழாரம் எனக் குறிப்பிடின் சாலப் பொருந்தும். அந்நிய மண்ணில் வாழ்ந்துகொண்டு திரு. சிவகுமாரன் அவர்கள் தமிழுக்கும் தமிழினத்திற்கும் கலை, கலாச்சாரம், பண்பாட்டிற்கும் ஆற்றிவரும் சேவை மதிப்பிடமுடியாதவை. அவரது சேவை தமிழினத்தின் உலக வரலாற்றில் பொன்னால் பொறிக்கப்படவேண்டியவை.

திரு. சிவகுமாரன் அவர்கள் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து தனது சீரிய பணியை தொடர்ந்தும், நாட்டிற்கும் இனத்திற்கும் செய்ய எனது இதயம் கனிந்த நல் வாழ்த்துக்களை கூறி மகிழ்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ண மலர் விரிய
மணம் பரப்ப! வாழ்த்தோடு
உதவிய மலர்க்கரங்கள்...



கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்


யேர்மனியில்
சிறந்த வீடுகள்
வாங்குவதற்கு
நாடுங்கள்

அ.பதியமரன்
(ராஜன்)

அனைத்து
தெளிவான
தொலைபேசி
அட்டைகளுக்கும்
நாடுங்கள்.

lange Str 96
44137 Dortmund
Tel: 0231-9565416

**கனீன் எலற்றோனிக்ஸ்**

Schevenhofer Weg 24, 42111 Wuppertal
Tel: 0205 3423 740
Handy: 0172/ 29 31 2 66 Fax: 0205 3423 741

**ASIA BAZAR**

An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-308292

**Travel AIR**

**Wuppertal**
**Reisebüro GmbH**

Luisen Str.46 , 42103 Wuppertal
Tel: 0202/4936921 , Fax: 0202/2443106
Tel: 0202/24431 04 - 05
Handy:0173-2850638

**Orientalische Textilien & Schmuck**

Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Tel: 0231/162377
Fax: 49.0231/147836

**Kumaran's**

**TELE AGENT EASY CALL SHOP**
**SUPERMARKT & KIOSK**
Langemarckstr.100
28199 Bremen / Germany
Tel: (0421) 57 96 93 8 Fax: (0421) 57 96 93 9
Mobil: 0173 2367117

**Premi Super markt**

(Bahnhof க்கு அருகாமையில்)
Humbold Str.14
41061 Mönchengladbach
Handy :0162 3905 703 Tel:02161-29 49 87 - 40 61 59
Fax:(0049) 2161-30 91 84

**T.T.S Brothers**

Asien Supermarkt Retail & Wholesale

RHEINISCHE STR 52
44137 DORTMUND
GERMANY
TEL: 0231-819288
Video-Abt:811073
Fax: 0231-833431

GARTEN STR-29
48147 MÜNSTER
GERMANY
TEl:0251-2301184
Fax: 0251-2301183

**பிருந்தா**
**Silk House**

Ludwig str. 92
70197 Stuttgart
Tel : 0711/ 61 58 976
Fax: 0711-61 42 663
Handy
01703344059

ஜெர்மனியில்
நொயிஸ் நகரத்தில்....

**Little India**
Textile & Jewellery
Meerer Hof 22 - 41462 Neuss
Tel 02131 / 27 36 92 Fax:02131/738784

**அறோபிரசி றேட்**
**ARO PRASI TRADE**

Tel: 02339/6478
Fax: 02339/121855
Glashüttenplatz 11
45549 Sprockhovel

**லிங்கம் Asien Market**

Lingam
Asien Market
Adler str 5
44137 Dortmund
Tel/Fax:0231/143811


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org